ப்டம்பர்
960

மாலா

விலை
25 காச

10 29
3.60

SEP 1960
MADRAS

மணங்கமழும்
தென்றல்
வீச
அணங்கே
நின்
அழகைப்
பேச...

பூர்த்திபெற்ற அழகியாக விளங்குவதற்கு இன்றியமையாதது நேர்த்தியான மேனியெழிலே என்ற உண்மையை நன்குணர்ந்துள்ள சினிமா நட்சத்திரமாகிய பத்மினி பிரியதரிசினி கூறுகிருர். "அதனுல்தான் அதிமென்மை வாய்ந்த லக்ஸ் மீது எனக்குப் பூரண நம்பிக்கை. வெண்ணெய் திரண்டதுபோன்ற அதன் நுரை எனது சருமத்தை மழமழப்புடனும் சோபையுடனும் நிலைபெறச் செய்கிறது!" உங்கள் அழகும் உன்னத அழகாக மிளிர-உபயோகியுங்கள் லக்ஸ்!

சினிமா நட்சத்திரங்களின் தூய, மென்மை குலவும் அழகுசாதன சோப்.

ஜி. கே. ப்ரொடக்ஷன்ஸ் 'சகோதரி'யில் தோன்றும் அழகு நட்சத்திரம் பத்மினி பிரியதர்சினி.

LTS.48-X29 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.

7.71

கே. ஸி. பி. லிமிடெட்

38, மவுண்ட் ரோடு, சென்னை-6.

★

KRISHNA SWEETS

CHOICE, QUALITY.

★

★ நிபுணர்களது மேற்பார்வையில் உயர்ந்த ரக பழ ரஸங்களைக் கொண்டு, சுத்தமான சர்க்கரையிற் தயாரான மிட்டாய்கள்

★ குழந்தைகளுக்கு ஆரோக்கியமும் வலிமையும், அளிக்கின்றன.

★ ஆலையிலிருந்து அப்படியே புதிதாக விற்பனைக்கு வருகிறது.

★

K C P

கிருஷ்ணா மிட்டாய்கள்


கேசப்
பராமரிப்பின்
ரகசியம்
ஸ்வஸ்திக்
பெர்ப்யூம்டு காஸ்டர் ஆயில்
தயாரிப்பாளர்: ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ்
லிமிடெட், பம்பாய்
SHILPI SDM 10

தந்தி : நாட்டியமாலா போன் : 71669

மாலா

தமிழ் இலக்கிய மாதப் பத்திரிகை

போஷகர்:
வைஜயந்திமாலா

நிர்வாக ஆசிரியர் :
எம். டி. ராமன்

ஆசிரியர் :
எஸ். எஸ். சர்மா

துணை ஆசிரியர் : த. ரா. ரா.

★

தனிப் பிரதி 25 காசுகள்
(அணா 4)

வருட சந்தா ரூ. 3/-

பிரதி மாதம் 10ம் தேதி மாலா எங்கும் விற்பனைக்குக்கிடைக்கும்

பர்மா, மலேயா நாடுகளுக்கு மட்டும்

தனிப் பிரதி அணா 6

அந்தந்த ஊர் ஏஜண்டுகளிடம் மாலாவை மாதந்தோறும் வாசகர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா "ஹிக்கின்பாதம்ஸ்" "சுதேசமித்திரன்" ரயில்வே புஸ்தக ஸ்டால்களில் எமது மாலா விற்பனைக்கு எப்பொழுதும் கிடைக்கும்.

★

தபால் மூலம் மாலாவை வரவழைத்துக் கொள்ள கீழ்க் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விபரம் : **மாலா**

சதர்ன் அவின்யூ.
ஆழ்வார்பேட்டை.
தபால் பெட்டி நெ. 1452
மதருஸ்-18.

மாலா

மாலா 10 | செப்டம்பர் 1960 | மலர் 6

பொருளடக்கம்

★

பாரதியார் தினம் —தலையங்கம்

கட்டுரை

திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் —எல்லார்வி

கதைகள் :

சரணாகதி —குயிலி

உசவாடி சிக்கல் —பிலோ இருதயநாத்

பைத்தியம் —எஸ். வைத்தியநாதன்

விளக்கேற்றி வைத்தவர் —நாதப்பிரியை

தொடர் கதை

திருவிளக்கு —விக்கிரமன்

ஜோதிடப் பகுதி :

ராசிபலன், கேள்வி பதில் —கணபதி ஜோஸ்யர்

கலை அரங்கம் — த. ரா. ரா.

மற்றும் இதர அம்சங்கள்.

குறிப்பு—மாலாவில் வரும் பெயர்கள், நிகழ்ச்சிகள் அனைத்தும் கற்பனையே.

போஷகர் : வைஜயந்திமாலா

மாலா 10 | செப்டம்பர் 1960 | மலர் 6

208076.

பாரதியார் தினம்

மஹா கவி பாரதியார் தினம் இம்மாதம் 11ம்தேதி தமிழர் வாழும் இடங்களில் கொண்டாடப்படும். இம் மாபெரும் கவிஞரின் நாளைக் கொண்டாடுகையிலே அவர் வலியுறுத்திச் சென்ற கருத்துக்களை ஞாபகத்தில் கொண்டு செயலாற்ற முற்படுவது நமது கடமையாகும். இந்திய மக்களிடையே ஒற்றுமையை தாரக மந்திரமாய் நமக்கு அவர் உபதேசித்துள்ளார். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, நம்முள் ஒற்றுமை நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வே'' என்ற அடிகள் மறக்க இயலாதவை அல்லவா?

தற்சமயம் பாரதநாட்டிலே பல பாகங்களிலும் மொழி இன வேறுபாடுகளால் நிகழ்ந்து வரும் சம்பவங்கள் கவலைக் கிடமளிக்கின்றன. அந்நிய ஆக்ரமிப்பு பயம் இருந்து வரும் நிலையிலே இவ்வித சம்பவங்கள், போராட்டங்கள், கலகங்கள். இதுதவிர ஆக்க வேலைகள் பாதிக்கப்படும் முறையில் வேலை நிறுத்தங்கள், போராட்டங்கள், எங்கும் பிளவும், மாற்சரியமும், கலகங்களும் அதன்பயனாய் விபரீத முடிவுகளும். இவைகளைப்பற்றி இவைகளில் ஈடுபடுபவர்கள் சிந்தித்துப் பார்க்கிறார்களா? அதுதான் இல்லை. நாட்டின் ஒற்றுமை, சொந்த நலன்கள், இனமொழி நலன்கள், பிரதேச நலன்கள், முக்கியமாக கட்சி நலன்களைவிட மேம்பட்டதென்பதை யாரே மறுக்க இயலும். அதற்காக மொழிப்பற்று வேண்டாம், கட்சி வேண்டாம் என்பதில்லை. ஆனால் எந்த வகைகளில் அவைகள் இருக்கப்பட வேண்டுமோ அவ்வகைகளில் இருந்து வரவேண்டும், அவை நாட்டிற்கே கேடு விளைவிக்கும் நிலையில் முக்கியத்துவம் பெறக்கூடாது. பாரதியின் பொன்மொழிகள் இந்த சமயத்தில் யாவருக்கும் வழிகாட்டுமாக!

செய்திச் சுருள்

புதிய ரேடியோ ஸ்டேஷன்கள்

ரேடியோ ஒலிபரப்புகள் பின்னும் தெளிவாகக் கேட்கப்படுவதற்கு வகை செய்வதற்காக நாட்டின் பல்வேறு இடங்களில் நடுத்தர ஒலிபரப்பிகளை ஏற்படுத்துவதுபற்றி சர்க்கார் ஆராய்ந்து வருகின்றனர். நடுத்தர அலை ஒலிபரப்புகளின் விஸ்தரிப்புக்கான திட்டம் பற்றி ஆராய்வதில் இந்த ஒலிபரப்பிகளை அமைப்பதற்கு ராயல் சீமையிலும், விசாகப்பட்டணத்திலும் உள்ள இடங்களின் தகுதி பற்றியும், அவற்றின் சக்தி பற்றியும் ஆராயப்பட்டு வருகிறது. இந்த ஒலிபரப்பிகள் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இயங்கவாரம்பிக்கும்.

இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் உபகாரச் சம்பளங்கள்

இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் படிப்பதற்காக உபகாரச் சம்பளத் திட்டங்களின் விவரங்களடங்கிய புத்தகமொன்றை யூனியன் விஞ்ஞான ஆராய்ச்சி கலாசார விவகார மந்திராலயம் சமீபத்தில் வெளியிட்டிருக்கிறது. இந்த மந்திராலயத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிற சுமார் 30 உபகாரச் சம்பளத் திட்டங்கள் சம்பந்தமான நோக்கங்கள், நிபந்தனைகள், நிதி உதவிகள் முதலியவை பற்றிய விவரங்கள் இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகளில் சில திட்டங்கள், வெளிநாட்டு மாணவர்கள் இந்தியாவில் படிப்பதற்கு வசதிகள் கொடுப்பது பற்றியவையாகும்.

பள்ளிக் குழந்தைகளுக்கு மத்தியான உணவு

பள்ளி சுகாதாரத் திட்டத்தில் ஒரு பகுதியாக குழந்தைகளுக்கும் மத்தியான உணவுவழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்பதாக பள்ளி சுகாதாரக் கமிட்டி சர்க்காருக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் யோசனை கூறியிருக்கிறது.

இதற்காக 144 கோடி ரூபாய் செலவாகுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. பாதிச் செலவை மத்திய சர்க்காரும் மீதிப் பாதியை ராஜ்ய சர்க்கார் தரும், பிற சுயேச்சை ஸ்தாபனங்களும் ஏற்றுக் கொள்வார்கள்.

விளையாட்டுச் சமான்கள், பொம்மைகள் தயாரிப்புத் தொழில்

விளையாட்டுச் சாமான்கள், பொம்மைகள் தயாரிப்புத் தொழிலுக்கான ஆய்வுக் குழுவின் முதலாவது கூட்டத்தை யூனியன் தொழிலியல் மந்திரி ஸ்ரீ மனுபாய் ஷா ஆகஸ்ட் 23-ந் தேதி புதுடில்லியில் ஆரம்பித்துவைத்துப் பேசுகையில், இத்தொழிலிலுள்ள வேலைவாய்ப்பு வசதிகளை வலியுறுத்தினர். புதிய தொழில் நுட்ப அபிவிருத்திகளைப் புகுத்துவதற்கு இத் தொழில் மிகவும் பொருத்தமான தொன்றாகும் என்று அவர் கூறினர். அதே சமயத்தில், வளமான இந்திய மரபை யொட்டியே இத்தொழில் அபிவிருத்தியடைய வேண்டும் என்றும், இதனின்றும் சற்றும் விலகிப் போகக்கூடாதென்றும் அவர் எச்சரித்தார். சிறு தொழில் தரப்பில் உயர்தரமாக விளையாட்டுச் சாமான்களும் பொம்மைகளும் தயாரிக்கப் படுவதற்கு

ஊக்கமளிப்பதற்காக இந்திய சர்க்கார், இக்குழுவை அமைத்திருக்கின்றனர் என்றும், இத்தொழில் நன்கு செழித்தோங்கி வளர்வதற்கு இக்குழு உதவியாக இருக்கும் என்று தாம் நம்புவதாகவும் ஸ்ரீ ஷா கூறினர். விளையாட்டுச் சாமான்களுக்கும் பொம்மைகளுக்கும் இந்நாட்டில் விற்பனைத் தோது ஏராளமாக இருக்கிறது. இப்பொருளின் தரம் அபிவிருத்தியடைந்தால் ஏற்றுமதி மார்க்கெட் ஒன்றையும் நாம் ஏற்படுத்த முடியும்

பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை

பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலைக்குத் தேவையான உறுப்புக்ளில் சுமார் 1244 உறுப்புகளில் ஒரே ஒரு உறுப்புதான் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. சுமார் 237 பாகங்கள் உள்நாட்டில் வாங்கப்படுகின்றன. ஆறு பாகங்கள் ஓரளவுக்கு வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

அணுசக்தி மின்சாரம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் உபயோகிப்பதற்கு அணுசக்தி மின்சாரம் எதுவும் கிடைக்காது. இந்தியாவில் மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தில் அமைக்க உத்தேசத்துள்ள முதலாவது அணுசக்தி மின்சார உற்பத்தி நிலையம் மூன்ருவது திட்ட காலத்தில் இயங்கவாரம்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

இதர நிலையங்களை எங்கே அமைப்பது என்பது பற்றி இன்னும் இறுதியாக முடிவு செய்யப்படவில்லை.

முன்பு அறிவித்ததுபோல, நிலக்கரி வயல்களிலிருந்து தொலைவில் உள்ள டில்லி–பஞ்சாப், சென்னை. ராஜஸ்தான் போன்ற பிராந்தியங்களில் இத்தகைய மின்சார உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்துவது பற்றி ஆராயப்பட்டு வருகிறது.



ஜனதிபதி பவனி

இவ்வருட சுதந்திரதின விழாவை நமது சென்னைமா நகரிலே கொண்டாடினர் ஜனதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள். சென்னையிலே அவர் தங்கியிருந்த ஒருசில நாட்களில் நகரமக்கள் அவர் சென்றவிடங்களிலெல்லாம் ஆரவாரத்துடன் வரவேற்று குதூகலித்தனர். சென்னை ஐலண்டு மைதானத்தில் நடந்த அணிவகுப்பின்போது கூடிய கூட்டமும் கடற்கரையிலே கண்ட ஜனசமுத்திரமும் சிறந்த சான்றுகள். சுதந்திர தின அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்ள ஜெமினி சதுக்கத்திலிருந்து ஜனதிபதி பவனி புறப்படும் காட்சியைப் படம் காட்டுகிறது.

சபாநாயகர்

டாக்டர் யூ. கிருஷ்ணாராவ்

த. ரா. ரா.



தகப்பனார் ஒரு குறிப்பிட்ட துறையிலே ஆற்றல் படைத்தவராய் பிரசித்தி பெற்று விளங்குவார். அவரது மைந்தர்களோ அத்துறையிலே அவ்வளவு பிரசித்தமாயிருக்கமாட்டார்கள். அல்லது அத்துறைக்கும் அவர்களுக்கும் சம்பந்தமே இராது. ஒரு சில குறிப்பிட்ட நபர்கள் விஷயத்திலே தான் தகப்பன்-தனயன் ஒரே துறை பிரக்யாதி காணப்படுவது உலக இயற்கை. தகப்பனாருக்குச் சமமாய் குறிப்பிட்ட துறையில் பிரக்யாதியுடன் இதர துறைகளிலும் பெயருடன் விளங்கும் உதாரணங்களும் மிகச் சில உண்டு. இதற்கு ஒரு சிறந்த உதாரண புருஷர் நமது சென்னை சட்டசபை சபாநாயகர் டாக்டர் யூ. கிருஷ்ணாராவ் ஆவார். அவர் தகப்பனார் ஒரு பிரபலடாக்டர் ஆவார். பிரபலடாக்டர். யூ. ராமாராவ் சென்னை மேல் சட்டசபை தலைவராய் விளங்கியவர். ஸ்ரீ கிருஷ்ணாராவும் சட்டசபை சபாநாயகர். அது மட்டுமல்ல சென்னை மேயர், ராஜ்ய மந்திரி இந்தப் பதவிகளையெல்லாம் வகித்தவர். 1900ம் வருடம் பிறந்த இவர் செயின்ட் பால், கிரிஸ்டியன் காலேஜ் உயர்தரப்பள்ளி, மாகாணக் கல்லூரி முதலியவைகளில் கல்வி பயின்று பிறகு மருத்துவக் கல்லூரியிலே படித்துப் பட்டம் பெற்றார். மருத்துவத் துறையிலே பிரக்யாதி உண்டு இவருக்கு. பிரபல சத்திரசிகிச்சை நிபுணர்டாக்டர் யூ. மோகனராவ் இவரது சகோதரர் தனயன் டாக்டர். யூ. வாசுதேவராவ் ஒரு சிறந்த டாக்டர். டாக்டர். யூ. ராமாராவ் அவர்களை பற்றி அதிகம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஆகவே குடும்பமே மருத்துவத் துறையில் ஈடுபட்டு பிரசித்திபெற்ற குடும்பம் டாக்டர். யூ. கிருஷ்ணாராவ் அவர்கள் பொது வாழ்க்கையிலும் அரசியிலிலும் பெரிதும் ஈடுபடலானார். இது இவரது தகப்பனாரிடமிருந்து பெற்று பரம்பரை சிறப்பம்சமாகும். இவரது தகப்பனார் அக்கால சென்னை மேல் சபை அங்கத்தினராகவும், மத்திய அரசாங்க ராஜ்ய சபை அங்கத்தினராகவும் விளங்கிவர். சென்னை சங்கீத வித்வத் சபை ஸ்தாபகர், தலைவர். அவர் சிறந்த கலா ரஸிகர். தந்தையைப் பின்பற்றிய தனயன் பொது வாழ்விலே தந்தையைவிட அதிகமாக ஈடுபட்டுள்ளார் என்று சொல்வது மிகையாகாது. டாக்டரவர்கள் 1930 வருடத்திலிருந்து காங்கிரஸ் மகா சபை அங்கத்தினரானார். 1930 லிருந்து 1951ம் வருடம் வரை சென்னை நகர சபை உறுப்பினராய் அங்கம் வகித்தவர். பெயருக்கு மட்டும் உறுப்பினர் அல்ல நல்லபணியாற்றிய நகர தந்தையர்களில் ஒருவர் அவர். 1947ல் 48ல் இவரது பணி, செல்வாக்கு இவருக்கு பயன் அளித்தது. சென்னை நகர சபை மேயராய் விளங்கினார் இவர்.

1952ம் வருடம் முதல் சென்னை சட்டசபையிலே அங்கத்தினராய் விளங்கி வருபவர். 1952 தேர்தலுக்குப் பின் சென்னை ரராஜ்யத்திலே மந்திரி சபை அமைப்புச் சிக்கலை

ராஜாஜி அவர்கள் நிவர்த்தித்து தன் தலைமையில் மந்திரி சபை அமைய வழி செய்தபோது அவரது கண் டாக்டரவர்கள் மீது வி ழ் ந் த து. கைத்தொழில் போக்குவரத்து, கூட்டுறவு இலாக்காக்களின் மந் திரியாக அங்கம் வகித்தார் ராஜாஜி அவர்களதுமந்திரிசபையில்.1951ம் ஆண்டு. டாக்டர் யூ. கிருஷ்ணராவ் அவர்களது வாழ்க்கையில் ஒரு முக்கிய ஆண்டாகும். ஆந்திர சிங் கத்துடன் தேர்தலில் போட்டியிட்டு ம க த் தா ன வெற்றியடைந்தார், சட்டசபைத்தேர்தலிலே. அதன் ஒரு பலன்தான் 1952ல் இவர் மந்திரி பதவி பெற்றது. 1956லே நடந்ததேர் தலிலும் வெற்றிபெற்ற இவர் சபா நாயகராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்போது சென்னை ராஜ்ய சட்ட சபையிலே நடக்கும் காரசாரமான வாதப் பிரதிவாதங்களின்போது நிலைமையை சமாளிக்கும் ஆற்றல் டாக்டர் அவர்களுக்கு உள்ளது. இதற்கான பாராட்டுகள் இவருக்கு அமோகமாய்க் கிடைக்கின்றன. ஆளும் கட்சி எதிர்கட்சியினர் இரு வரும் இவரது தீர்ப்பில் பூ ர் ண திருப்தி கொள்ளுகின்றார்கள். மனி தர் யாரையும் புண்படுத்தாமல் பேசி காரியத்தைச் சாதிப்பதில் சதுரர்.

இவர் பத்திரிகைத் தொழிலிலும் ஈடுபட்டவர். 'ஆண்டிசெப்டிக்' 'ஹெல்த்' என்ற இரண்டு பத்தி ரிகைகளின் ஆசிரியர் இவர். பிரதேச பாரத் சேவக்சமாஜின் தலை வர். இந்தோ அமெரிக்க சங்கத் தலைவர்.

டாக்டர் யூ. கிருஷ்ணராவ் அவர் கள் பங்குகொள்ளும் வைபவங்கள் பலவாயிருக்கும். நகரத்தில் அவர் வந்திருந்து சிறப்பிக்காத முக்கிய விழாக்கள் ஒரு சிலவே இருக்க முடியும். நன்றாகப் பேசுகிறார். ஹாஸ்யமும் விரவிக்கலந்து பிரசங் கங்களை ரஸிக்க வல்லவையாக்கி விடுகிறார். தூய வெள்ளை உடை யிலே இவருக்கு அலாதி பிரியம். அதேபோல் எப்போதும் நண்பர் குழாத்துடன் விளங்குவதிலும் பிரிய முள்ளவர் இவர்.

இவ்வித பல்வகைச் சிறப்புகள் பெற்றுள்ள சபாநாயகர் நகரப்பிர முகர்களில் சிறந்தவர்களுள் ஒருவ ராய் விளங்குவதில் ஆச்சர்யமில்லை யல்லவா. சமீபத்தில் தனது அறுப தாண்டு பூர்த்தி விழாக் கொண்டா டிய சபாநாயகருக்கு நமது நல் வாழ்த்துக்கள். அவரது தொண்டு மேலும் விரிவடைந்து புகழ் மேலும் ஓங்குவதாக.

அட்டைப் படம்

பாரதியார் அழியாத புகழ்படைத்த அமரகவியாவார். தேசியக்கனல், கொழுந்துவிட்டு எரியச் செய்தவர் அவர். ஒற்றுமையை வலியுறுத்தியவர் அவர். தமிழ் இலக்கியத்திலே தனக்கென ஒரு பாணியை ஏற்படுத்தி பாரதியின் காலம் என்று ஒரு காலத்தை ஏற்படுத்திக் கொடுத்த பேரறிஞர் அவர் "வெற்றி யெட்டுத்திக்கு மெட்டக் கொட்டுமுரசே" என்று தேச விடுதலை படையுமுன் நமக்கு அறிவித்த தீர்க்கதரிசிகூட. அவரது கவிதை களை அறியாதார் யார். செப்டம்பர் 11ம் தேதி அவரது தினம், தமிழ் விளங்கும் இடமெங்கிலும் கொண்டாடப்படுகிறது. இவ் வருடம் இவ்விழாவிற்கு தனி சிறப்பு உண்டு. ஒப்பற்ற தேசியக் கவியின் உருவம் பொறித்த தபால் வில்லைகள் அன்று வெளியா கின்றன. இந்த விசேஷத்தையொட்டி மாலாவும் கவிஞரின் திரு வுருவப்பட அட்டைப் படத்துடன் வெளியாகிறது.

கேரளமும் மீடர் முறை எடைகளும் அளவுகளும்

உயர்திரு. வே. ஈச்சரன், பாரளு மன்ற உறுப்பினர்.

நாட்டின் மற்ற பகுதிகளைப் போலவே கேரளத்திலும் எடைகள், அளவுகளின் நிலைமை மிகவும் சீர்கேடாக இருக்கிறது. இங்கு பலம், துலாம், பணத்தூக்கம், நாழி இடங்கழி, பரா முதலிய அநேக உள்ளூர் அளவுகளைத் தவிர வங்காள மணங்குகளும், பிரிட்டிஷ் பவுண்டுகளும் பழக்கத்தில் உள்ளன. என்னுடைய மலபார் பகுதியில் பல எடைகளின் காரணமாப் பொதுமக்களுக்கு மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. பொது மக்களுக்குப் பலவிதமான எடைகளை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றுவதில் குழப்பம் ஏற்படுகிறது. சிற்சில வியாபாரிகள் இதைத் தங்களுக்கு சாதகமாகப் பயன் படுத்துகிறார்கள். அவர்கள் கணக்கில் நிபுணர்கள். ஆகையால் தாங்கள் சரியென்று நினைத்த அளவிற்கு மக்களிடமிருந்து விலையை வசூலிக்கின்றனர். குடியானவர்களிடமிருந்து சாமான் வாங்கும்பொழுதும் தங்கள் முறைப்படியே கணக்கிட்டு விலை கொடுக்கிறார்கள். குடியானவர்களுக்குக் கணக்கு வருவதில்லை. ஆகையால் கிடைத்ததை மறு பேச்சின்றிப் பெற்றுக் கொண்டு அவர்கள் திருப்தி அடைகின்றனர். படிக்காத குடியானவர்கள் தான் கணக்கில் வல்லுனர்களான இந்த வியாபாரிகளிடம் ஏமாறுகின்றனர் என்று நினைக்க வேண்டாம். நன்கு கல்விகற்றோரும் கடைக்காரர்களிடம் தோல்வியுற்று அவர்கள் கேட்ட விலையைக் கொடுத்துவிட்டுச் செல்கின்றனர். நான் கூறுவதிலிருந்து கேரளத்தின் கிராமங்களில் கடை வீதிகளிலும், லும் பகற்கொள்ளை நடக்கிறதென்று எண்ணவேண்டாம். இது உண்மையல்ல. ஆனல் எடை, அளவுகளின் குழப்பத்தின் காரணமாக கணக்கிடுவதில் ஏற்படும் தொல்லையால் தந்திரசாலியான வியாபாரிகள் சமயத்திற்கேற்றவாறு லாபமடைய முயற்சிக்கின்றனர். ஓரளவுதான் இம்முயற்சி செய்யப்படுகிறதென்றாலும், முயற்சி செய்யப்படுவது உண்மையே. எந்த சமூகத்திலும் இத்தகைய முயற்சிகள் அழகல்ல.

ஸ்ரீ அச்சுதனின் மசோதா

எடை, அளவுகளின் இந்த குழப்ப நிலை கேரள மக்களுக்குத் திருப்தியளிக்கவில்லை. அவர்கள் நல்லமாதிரி எடை, அளவுகளை விரும்பினர். ஆகவே பவுண்டையும், கஜத்தையும், வங்காள மணங்கையும் ஏற்றுக்கொண்டனர். இந்த வழியில் முன் ஏறும் நோக்கத்துடன் கேரளத்தைச் சேர்ந்த ஸ்ரீ அச்சுதன் முதன் முதலாகப் பாராளு மன்றத்தில் மீடர் முறையை அமுலுக்குக் கொண்டு வர மசோதா ஒன்று கொண்டு வந்திருந்தார். இம்மசோதா அரசினருக்குப்பிடித்தது. ஆகவே, அதை அரசினர் தரப்பு மசோதாவாகவே ஏற்றுக்கொள்ள நிச்சயித்தனர். இவ்விதம் நாட்டில் மீடர் முறையை அறிமுகப்படுத்திய பெருமை ஒரு கேரளவாசியைச் சேர்ந்தது. இந்த முறை புழக்கத்தில் வர ஆரம்பித்துள்ளது. குறிப்பிட்ட திட்டப்படி இது மெள்ள மெள்ள நாடெங்கும் பரவும். கேரளமும் இதைக் கையாள்வதில் தேசத்தின் எப்பகுதிக்கும் பின் வாங்காது

கேரளத்தில் வெவ்வேறு பண்டங்களை நிறுக்கவும், அளக்கவும் பல வித எடைகளும் அளவுகளும் கையாளப்படுகின்றன. இந்தியாவின் மற்றப் பகுதிகளில் வசிப்போருக்கு இவற்றைப்புரிந்து கொள்வது மிகவும் கடினம். இம்மாதிரி ஒருவர் கேரளத்தில் வசிக்க நேரிட்டால். அநேக நாட்கள் வரை இந்த எடைகள் அளவுகளின் கணக்கைப்புரிந்து கொள்ள மூளையைக் குழப்ப நேரிடும். இதன் பின்னும் அவர் இக்கணக்கில் நிபுணராகிவிடுவாரா என்பது சந்தேகமே. கடைத் தெருவுக்குப் போய்த்தான் தீர வேண்டும். பண்டங்கள் வாங்கவும் நேரிடும். ஏதோ ஒரு அயல் நாட்டுக்கு வந்து விட்ட அநுபவம் அவருக்குப் படிப் படியாக ஏற்படும். இதே நிலை வேறிடங்களுக்குச் செல்லும் கேரள வாசிகளான எங்களுக்கும் ஏற்படுகிறது. பணத்தூக்கம், நாழி. பராவில் பழகிய நான் தில்லி சேர்ந்த போது, முற்றிலும் மாறுபட்ட எடைகள், அளவுகளைக் கண்டு குழப்பத்தில் ஆழ்ந்தேன். ஏதாவது பண்டம் வாங்கும் பொழுது, 'சேர்', 'பாவ்', கணக்கிடுவது கடினமாகிவிடவே, கடைக்காரன் கேட்டதை மறுபேச்சின்றிக் கொடுத்து விடுவேன். இவ்விதம் வேலை நடந்துவிடும் ஆனால் மனதில் மகிழ்ச்சி இருக்காது. இந்த நோக்கில் எனக்கு தில்லி அயல் நாடாகத் தோன்றிற்று. எப்படிக் கேரளத்தில் நான் வசிக்கும் பாலக்காட்டை என் சொந்த இடமாகப் பாவித்தேனோ. அப்படியே தில்லியையும் என் சொந்த இடமாகப் பாவிக்க விரும்பினேன். ஆனால் இந்த பாவனை தோன்ற 'சேர்', 'பாவ்'. 'அரைப்பாவ்', 'சடாங்குகள்' என்றும் தடையாக விளங்கின. ஆனால் தில்லி கேரளத்திலிருந்து அதிக தூரத்திலுள்ளது. எனக்கு இந்தத் தொல்லை கேரளத்தில் கூட என் வட்டத்திற்கு வெளியிலேயே ஏற்பட்டது. கேரளத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் வெவ்வேறு எடைகளும் அளவுகளும் பழக்கத்திலிருக்கின்றன. எனது இடமான பாலக்காட்டின் நிலைமை இன்னும் மாறுபட்டது. முன்பு அது சென்னை மாநிலத்தின் பகுதியாக இருந்தது. ஆகையால் சென்னையின் எடைகளும் அளவுகளும் அங்கு புழக்கத்திலுள்ளன. எனக்கு நேரிட்ட தொல்லை இன்றும் அவ்வப்பொழுது ஏற்படுகிறது. அதே தொல்லை ஒவ்வொரு இந்தியனுக்கும் ஏற்படுகிறது. ஏனெனில், கேரளத்திலுள்ள எடை அளவுகளின் குழப்பம் நாட்டின் மற்றப் பகுதிகளிலும் இருக்கிறது. எந்தப் பகுதியிலும். எங்கும் ஒரே மாதிரியான எடைகள் அளவுகள் புழக்கத்தில் இல்லை.

நாடெங்கும் பரவியுள்ள தொல்லை

நம் நாட்டில் இந்தத் தொல்லையை எவ்வளவு விசாலமான அளவில் சகித்துக் கொள்ள நேரிடுகிறதென்று சிறிது நேரம் கற்பனை செய்து பாருங்கள் நாட்டின் ஜனத் தொகை இப்பொழுது சுமார் 37 கோடி. இதிலிருந்து குழந்தைகளின் எண்ணிக்கையை நீக்கி விடுவோமானல். சுமார் 25 அல்லது 30 கோடி மக்களுக்கு எடைகள் அளவுகளின் சிக்கலில் ஈடுபட நேரிடுகிறது. இந்நிலைமை எந்த முன்னேற்ற மடைந்த நாட்டிற்கும் நல்லதல்லவென்றும். அதி சீக்கிரம் இது திருந்தவேண்டுமென்றும் கூறவும் வேண்டுமா?

பண்டங்களைக் கொள்வதிலும், கொடுப்பதிலும் எடைகள் அளவுகள் உபயோகிக்கப்படுகின்றன. நமது வியாபார புத்தி ஒவ்வொரு பிரச்னையையும் தீர்க்க ஏதாவது வழி வகுக்கிறது. பண்டங்களின் கொள்முதல் பிரச்னை ஏற்பட்ட போது, மனிதன் தராசையும், எடைகளையும், அளவுகளையும் இதனுலேயே கண்டுபிடித்தான். நம் நாடு அதிகமான பரப்பளவு உள்ளது. சிற்றரசர்களின் காலத்தில் நாடு பல துண்டங்களாக இருந்தது. அந்தந்த இடங்களின் வசதிக்காக

இந்த எல்லாச் சிறு பகுதிகளிலும் தத்தம் விதமான எடைகளும் அளவுகளும் புழக்கத்திற்கு வந்தன. சிற்றரசுகள் ஒழிந்தன. ஆனால் அவற்றின் காரணமாகப்புகுந்த இவை தம் வேற்றுமையுடன் தங்கி விட்டன. இன்றும் இவை ஒரு இந்தியனை மற்றொரு இந்தியனிடமிருந்து பிரித்துவைக்க முயற்சிக்கின்றன. இதை நிரூபிக்க எனது பகுதியின் எடைகளையும் அளவுகளையுமே எடுத்துக் கொள்ளுவோம். தங்கம் வாங்க விரும்பினால், நீங்கள் 'சவரன்', 'பணத் தூக்கம்', 'தோலா', முதலிய எடைகளை அறிந்து கொள்ள வேண்டும். 21 பணத்தூக்கம் ஒரு சவரனுக்குச் சமம். தானியங்கள் வாங்க விரும்பினால், உங்களுக்கு அளவுகள் தெரிந்திருக்கவேண்டும். தில்லி வாசியும் உத்தரப் பிரதேச வாசியும் தானியத்தை மணங்கு, சேர், சடாங்க் என்று நிறுத்து வாங்கினால், கேரளவாசி தானியத்தை அளந்து வாங்குகிறார். 'நாழி', 'இடங்கழி', 'பரா' தானிய அளவுகள். ஒரு நாழியில் ரூ 40 எடையுள்ள தானியம் அடங்கும். அளவுகளின் வாய்ப்பாடு பின் வருமாறு:-

4 நாழி	=	1 இடங்கழி
10 இடங்கழி	=	1 பரா
5 பரா	=	1 மணங்கு (வங்காள)

பரா எங்கும் ஒரே மாதிரி என்று எண்ணவேண்டாம். கேரள ராஜ்யத்தின் வெவ்வேறு இடங்களில் இதை வெவ்வேறு உருவத்தில் காணலாம். மேலும் பத்து அல்லது இருபது கிராமப் பகுதிகளின் 'பரா'க்கள் வெவ்வேறு அளவில் இருக்கலாம். ஆகையால் ஓரிடத்து வியாபாரி மற்றோரிடத்து வியாபாரியிடம் தானியம் வாங்கும்போது கேட்கும் முதல் கேள்வி, "அந்த 'பரா' எவ்வளவு பெரியது?" என்பதே. ஆகவே 'பரா' என்று கூறுவதால் மாத்திரம் ஓர் குறிப்பிட்ட அளவை மதிப்பிடமுடியாது. விறகு நிறுவையில் விற்கிறது. இதன் எடை 'துலாம்' எனப்படும். ஆனால் இந்தத் 'துலாமும்' எல்லா இடங்களிலும் ஒரே மாதிரி எடை அல்ல சிற்சில இடங்களில் இது 24 பவுண்ட் எனில், பல இடங்களில் 25, 26 அல்லது 27 பவுண்டுக்குச் சமம். இது இவற்றிற்கதிகமாகவும் இருக்கலாம்.

'பரா'வின் உருவம் வெவ்வேறாக இருப்பதால், அத்துடன் இடத்தின் பெயரையும் சேர்க்க நேரிடுகிறது. பாலக்காட்டுப் பரா, கோழிக்கோடு பரா, திருச்சூர் பரா என நாம் கேள்விப்படுகிறோம். பாலக்காட்டுப் பரா உருவத்தில் பெரியதாகவும், மற்ற இடங்களின் பரா சிறியதாகவும் இருக்கும். 'ராஷன்' (உணவுப்பங்கீடு) நிலவிய காலத்தில் மலபாரெங்கும் முத்திரையிட்ட ஒரே அளவுள்ள பராவை புழக்கத்திற்குக் கொண்டுவர முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அம்முயற்சி தோல்வியுற்றது. கூட்டுறவு ஸ்தாபனங்கள் இதைக் கையாண்டன. ஆனால் வியாபாரிகள் தத்தம் 'பரா'க்களையே உபயோகித்து வந்தனர். பொதுமக்களிடம் இதைப் பிரசாரம் செய்யாததே இதன் தோல்விக்கு முக்கிய காரணம். புதிய எடைகள் அளவுகளைப் புழக்கத்தில் கொண்டுவர பிரசாரம் இன்றியமையாதது. இக்கட்டுரையின் இறுதியில் இதைப் பற்றியும் சிறிது கூற விரும்புகிறேன்.

எண்ணை விற்பனையில் ஒரு புதிய தொல்லை இருக்கிறது. சில்லரை வியாபாரி இதை அளந்து விற்றால், மொத்த வியாபாரி எண்ணையை நிறுத்து விற்கின்றார். எண்ணையை நிறுக்க 'கண்டி' என்னும் எடை உபயோகிக்கப்படுகிறது. இந்தக் 'கண்டி'யும் இடத்துக்கு இடம் மாறலாம். இதுமட்டுமல்ல, ஒரே இடத்தில் இரு பண்டங்களை நிறுக்க வெவ்வேறு 'கண்டி'கள் உபயோகிக்கப்படலாம். தேங்காய் எண்ணை விற்பனையில் உபயோகிக்கப்படும் 'கண்டி'யின் எடை 700 பவுண்டு. ஆனால் தேங்காய் எண்ணெப் பிண்ணாக்கை நிறுக்கும் 'கண்டி'யின் எடை 660 பவுண்டு. இவ்வாறு ஒரே இடத்தில் எண்ணை

யின் 'கண்டி' ஒன்றும், பிண்ணாக்கின் 'கண்டி' மற்றொன்றுமாக இருக்கிறது.

எடை, அளவுகளின் இந்த வேற்றுமை நீங்க வேண்டும். அப்பொழுதான் நான் மேலே கூறியுள்ள பொதுமக்களின் தொல்லைகள் நீங்கும். காச்மீரத்திலிருந்து கன்யாகுமரி வரையிலும், அஸ்ஸாமிலிருந்து ஸௌராஷ்டிரா வரையிலும், இந்தியாவெங்கும் ஒரே மாதிரி எடைகளும் அளவுகளும் கையாளப்பட்டால், நம் வாழ்க்கை எவ்வளவு அழகாகவும், சுலபமாகவும் ஆகும்? அப்பொழுது நாம் பஞ்சாபிகளானாலும் சரி, மணிபூர் வாசிகளானாலும் சரி, ஆந்திரர்களானாலும் சரி, உத்தரப் பிரதேச வாசிகளானாலும் சரி, தில்லி வாசிகளானாலும் சரி, பம்பாய் வாசிகளானாலும் சரி, தத்தம் இராஜ்ய எல்லையைக் கடந்து எங்கு சென்றாலும், அங்கு ஒரே மாதிரி எடைகளும் அளவுகளும் புழக்கத்திலிருக்கக் காண்போம். அப்பொழுது நமக்கு அந்நிய நாட்டிலிருப்பது போன்ற உணர்ச்சி உண்டாகாது. பண்டங்கள் வாங்குவதிலும் நமக்கு ஒரு விதத்தொல்லையும் ஏற்படாது.

கணக்கிடுவது சுலபமாக!

எடை, அளவுகள் ஒற்றுமையோடு கூட மற்றொரு விஷயமும் அவசியம். இப்புது எடைகளும் அளவுகளும் கணக்கிட சுலபமாக இருக்க வேண்டும். இப்பொழுது 4 நாழி ஒரு டங்கழி. 10 இடங்கழி ஒரு பரா. 5 பரா ஒரு மணங்கெனக் கணக்கிடப்படுகிறது. ஒரு பண்டத்தின் விலை மணங்கு ரூ 13 எனக்கொள்வோம். நமக்கு அப்பண்டத்தில் 2 மணங்கு 3 பரா, 7 இடங்கழி, 3 நாழி தேவை எனில், அதன் விலையைக் கணக்கிடுவது எவ்வளவு கடினமாக இருக்கிறது? கணக்கிட்டுத்தான் பார்ப்போமே? முதலில் 2 மணங்கு, 3 பரா, 7 இடங்கழி, 3 நாழியை மணங்குகளாக மாற்ற வேண்டும். இது $\frac{551}{200}$ மணங்குகள். இதைப் பதின்மூன்றால் பெருக்கவே. $\frac{551}{200} \times 13 =$ ரூ $\frac{7163}{200} =$ ரூ 35,81 என விடை கிடைக்கிறது:

இங்கு 7163 ஐ 200 ஆல் வகுத்து விலை ரூ 35-81 ந.பை எனக்கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சந்தர்ப்ப வசமாகக் கீழே 200 வந்துள்ளது. வகுப்பதும் சுலபமாயிற்று 200க்குப் பதிலாக 239 ஐப் போன்ற சூன்யத்தில் முடியாத எண்ணாக இருந்தால், கடினமாக இருந்திருக்கும். இவ்விதம் எழுத்து மூலமாகவே 2 மணங்கு 3 பரா 7 இடங்கழி 3 நாழிப் பண்டத்தின் விலையைக் கண்டுபிடிக்கப் போதிய தொல்லை ஏற்பட்டது. அன்றாட வாழ்க்கையில் காகிதத்தையும் பென்சிலையும் வைத்துக்கொண்டு கணக்கிடப் பொதுமக்களுக்கு நேரமேது? இம்மாதிரிச் சிக்கலான கணக்குகளை அநாயாசமாகப் போடும் நிபுணர்களைக் கண்ணை மூடிக்கொண்டு நம்புவதைத் தவிர அவர்கள் வேறென்ன செய்யமுடியும்? கணக்கின் இந்தச் சிக்கல் பெரிய வியாபார நிபுணர்களைக் கூடத் தவறு செய்யச்செய்து விடுகிறதென்பது உண்மையே! ஆகையால்தான் அவர்கள் தங்கள் ரொக்கப் பட்டியல், 'பில்' முதலியனவற்றில் 'பிழை பொறுக்க' எனப் பொறித்துள்ளனர். வாழ்க்கை முழுவதும் கணக்கிடுவோர் கூட 'பிழை பொறுக்க' என வேண்டுமாறு அமைந்துள்ளது விந்தையே! அதனால் தான் கணக்கிட சுலபமான எடை, அளவுகள் நமக்குத் தேவைப்படுகின்றன. மீடர் முறைப்படி உள்ள எடைகளும் அளவுகளும் கணக்கிட சுலபமாக உள்ளதால்தான் அவை உலகெங்கும் வரவேற்கப்படுகின்றன. நமது பாராளு மன்றமும் இவற்றையே நம் நாட்டில் பரப்ப நிச்சயித்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். நாட்டின் பொறுக்கி எடுக்கப்பட்ட சில பகுதிகளில் இவற்றைப் புழங்கவும் ஆரம்பித்துள்ளது இதன் படி நிறுக்க நமது முக்கிய எடை கிலோகிராம்; துணி முதலியவற்றை அளக்க முக்

கிய அளவு மீடர்; திரவபதார்த்தங்களை அளக்க முக்கிய அளவு லீடர் ஆகும். இவை நாடெங்கும் ஒன்றே. இவற்றின் சிறிய எடைகளும் அளவுகளும் தங்களுக்குள் சுலபமாக இணையும் ஒரு கிலோ கிராம் ஆயிரம் கிராம் ஆகும். மைலுக்குப்பதிலாக வழங்கும் கிலோ மீடர் ஆயிரம் மீடர் கொண்டதாகும் மீடர் முறையின் எடைகளும் அளவுகளும் தசாம்ச பின்ன முறையிலிருப்பதால் கணக்கிடுவது சுலபம் உதாரணமாக ஒரு மோட்டார் வண்டி மணிக்கு 50 கிலோ மீடர் சென்றால், 9 கிலோமீடர் 17 மீடர் செல்ல எவ்வளவு நேரம் பிடிக்கும் என்ற கணக்கை எடுத்துக்கொள்ளுவோம். 9 கிலோ மீடர் 17 மீடர், 9.017 கிலோ மீடராகும். 17 ஐ 1000 ஆல் வகுக்க ·017 கிடைத்தது. மணிக்கு 50 கிலோ மீடர் சென்றால், 1 கிலோ மீடர் $\frac{1}{05} = 0\ 02$ மணியில் செல்லும் 9.017 கிலோ மீடர் செல்ல $= 9\ 017 \times 0.02 = 3.18034$ மணி ஆகும். தசாம்ச பின்ன முறையின் காரணமாக வகுத்தலும் பெருக்கலும் சுலபமாயின விடையும் எளிதில் கிடைத்தது.

விஞ்ஞான யுகத்தின் வேண்டுகோள்

இது விஞ்ஞான யுகம். உலகம் எல்லாத்துறைகளிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் நாம் பின் தங்கமுடியாது. எடை, அளவுகளின் சிக்கல் நிறைந்த தற்கால நிலைமை நம்மை ஒவ்வொரு அடி எடுத்துவைக்கும் பொழுதும் தடுக்கிறது. ஆகாய விமானத்துக்கும் கட்டை வண்டிக்கும் இடையேயுள்ள வேற்றுமை பழய எடை அளவுகளுக்கும் புதியனவற்றுக்கும் இடையே உள்ளது. ஆகாய விமான யுகத்திலும் மக்கள் கட்டை வண்டியில் செல்கின்றனர். எப்படி உலகத்தோடு ஒத்து வாழ நாம் ஆகாய விமானத்தைக் கையாளுகிறோமோ, அப்படியே மீடர் முறையையும் கையாளுவது அவசியம். இவ்வாறு செய்வதால் நம் வியாபாரத்தில் வசதியேற்படுவதோடு நம் பள்ளிகளில் கணக்குக் கற்பதும், விஞ்ஞான ஆராய்ச்சி செய்வதும் எளிதாகி விடும்

கிராமங்களில் பிரசாரங்கள் நடக்கட்டும்

மீடர் முறைப்படி அமைந்த எடைகளும் அளவுகளும் எளிதே. ஆனால் அவை நம் நாட்டிற்கு முற்றிலும் புதியன. ஆகையால், மக்களிடையே அவை நன்கு பரவ, அவற்றைப் பற்றி செவ்வனே அறிவூட்ட வேண்டும். நம் மக்களில் பெரும்பான்மையோர் கிராமங்களில் வசிக்கின்றனர். கல்வி அறிவு குறைந்துள்ள காரணத்தால் புதிய முறையால ஆரம்பத்தில் அவர்களுக்குத்தான் அதிக அசௌகர்யம் ஏற்படும். சமுதாய நல கேந்திரங்கள் இந்தப் பிரசாரத்தில் அதிக உதவியளிக்கக் கூடியன. கிராம ஊழியர்களுக்கும், கிராம சேவிகைகளுக்கும் புதிய எடைகள் யாவும் காண்பிக்கப்படவேண்டும். இவற்றின் படங்களும் மற்ற பிரசுரங்களும் குடியானவர்களிடம் பங்கிடவும்: விளக்கவும் அவர்களிடம் அளிக்கப்பட வேண்டும். கிராமங்களில் புதிய முறையைப் பற்றிய 'பிலிம்'களும், 'மேஜிக் லாந்தல்' மூலம் 'சிலேடு'களும் காண்பிக்கப்பட்டால் நல்ல பயன் கிடைக்கும்.

பள்ளிகளும் மாணவர்களுக்கு இப்புதிய மீடர் முறையைப் பற்றிய கல்வியை இப்பொழுதிலிருந்தே புகட்ட வேண்டும். ஆனால் தற்போது மாணவர்களென்ன, அநேக ஆசிரியர்களுக்கே. இவற்றைபற்றி போதியவிவரம் தெரியாது. ஆகையால், மாணவர்களை விட ஆசிரியர்களிடம் இவற்றைப்பற்றி அதிகமாகப் பிரசாரம் செய்யவேண்டும். சமயா சமயத்தில் இவற்றைப்பற்றி வெளியிடப்படும் பிரசுரங்களை 'ஆரம்ப மத்தியதர' உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களிடையே தவறுமல் வழங்கினால் மிக நல்லது. இவ்வளவும் செய்தால், மீடர் முறைக்கு நாட்டில் நல்ல பின்னணி தயாராகி விடும். அதை யாவரும் உற்சாகத்துடன் வரவேற்றுத் தமதாக்கிக் கொள்வார்கள்.

மகாவித்துவான்

திருக்கோடிகாவல் கிருஷ்ணையர்

எல்லார்வி

சூரன் தான்!

ஸ்ரீ கிருஷ்ணையர் அவர்களிடம் சிறு பிராயம் முதற்கொண்டே தோன்றி வளர்ந்த பல்வேறு விதமான நல்ல இயல்புகளில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய அம்சம் ஒன்று உண்டு. தனி வாழ்க்கை சம்பந்தப்பட்ட விஷயங்களில் அவரை யாரேனும் குறை கூறினால் அவ்வளவாகப் பொருட்படுத்த மாட்டார். ஆனால் கலை வாழ்க்கையைப்பற்றி யாராவது சிறிது முணுக்கென்றாலும் அவரால் அதைப் பொறுக்க முடியாது. அங்கேயே அப்பொழுதே சுடச்சுடப் பதில் கொடுத்துவிடுவார். அவ்வாறு செய்ய முடியாத சந்தர்ப்பத்தில் கஷ்டப்பட்டுப் பொறுமையைக் கடைப்பிடித்துக் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்து, தருணம் வாய்த்ததும் தக்கபடி நடந்து கொண்டு குறைகூறின வாயாலேயே புகழ் கூறும்படி செய்வார். அடுத்துவரும் இரு நிகழ்ச்சிகள் அதை மெய்ப்பிக்கின்றன.

மகா வைத்தியநாதையர் கச்சேரியில் முதல் முதலாகப் பக்க வாத்தியம் வாசிக்கும் வாய்ப்புக் கிருஷ்ணையருக்குக் கிடைத்தது. கிடைத்தற்கரிய பெரும் பேறாக அதை எண்ணிய அவர் மிகுந்த பய பக்தியோடும், அக்கறையோடும் அரும்பாடுபட்டு மிக நன்றாக வாசித்தார். ரசிகர்களுக்குப் பரம சந்தோஷம். அவர் வாசிப்பைக் கேட்டு மகா வைத்தியநாதையரும் மட்டற்ற மகிழ்ச்சியே கொண்டார். சில இடங்களில் சிரக்கம்பம் செய்தும் பாராட்டுச் சொற்களை உச்சரித்தும் அந்த மகிழ்ச்சியை வெளியிட்டுக் கொண்டார்.

கிருஷ்ணையருக்கு இதிலெல்லாம் திருப்தி ஏற்படவில்லை. வைத்தியநாதையரின் தகப்பனார் ராமசுவாமி ஐயரின் அபிப்பிராயம் என்ன என்பதை அறிவதிலேயே மிகக் கருத்து உடையவராக இருந்தார். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

ராமசுவாமி ஐயர் சிறந்த ஞானவான். மிக நன்றாகப் பாடுவார். காலட்சேபம் செய்வார். சிறந்த சாகித்தியங்கள் பல இயற்றியிருக்கிறார். இந்த யோக்கியதாம்சங்கள் ஒரு புறம் இருக்க, மகா வைத்தியநாதையருக்குத் தம் தகப்பனாரிடம் தேவதா விசுவாசம். மிகுந்த மரியாதை. அவர் ஆணைப்படியே தான் அனைத்தையும் செய்வார். கச்சேரி ஒப்புக் கொள்வதோ, பக்க வாத்தியங்கள் திட்டம் செய்வதோ, சம்மானத்தை நிர்ணயிப்பதோ, அதைப் பங்கிடு செய்வதோ அனைத்தும் பெரியவர் பொறுப்பிலேதான். இளையவர் குறித்த நேரத்தில் மேடையில் அமர்ந்து பாடுவதோடு சரி; வேறு எதிலும் அவர் பட்டுக் கொள்ளமாட்டார்.

இந்த விவரங்களெல்லாம் கிருஷ்ணையருக்குத் தெரியும். இளமையிலிருந்து அவர் கலையை அப்படியே தொழிலில் மேலுக்கு வரும் வழிகளையும் மிக நன்றாக அறிந்து கொண்டிருந்தார். பெரிய ஞானவானின் நல் அபிப்பிராயம் மிக முக்கியம் என்பதோடு, தொழில் முறைக்கும் அது மிகவும் இன்றியமையாதது என்று எண்ணினார். அடுத்தடுத்துக் கச்சேரிகளுக்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டியவர் அவரே அல்லவா? ஆகவேதான் பெரியவரின் அபிப்பிராயத்தை அறியத் துடித்தார். தனிமை கிட்டிய போது மிகவும் பவ்யமாகப் பேச்சுக் கொடுத்தார்.

ராமசுவாமி ஐயர் முறுவலுடன்: "வாசிப்பு மிகவும் பிரமாதம்!" என்றார்.

"எல்லாரும் சொல்கிற இந்த வார்த்தைகள் இருக்கட்டும். தங்கள் உண்மையான அபிப்பிராயந்தான் எனக்குத் தேவை. குற்றங் குறைகள் இருந்தால் தெரிவிக்க வேண்டும். திருத்திக் கொள்கிறேன்" என்றார் கிருஷ்ணையர்.

"குற்றமுமில்லை. குறையுமில்லை. தம்பியின் பாட்டுக்கு உன் வாசிப்பில் இன்னும் சிறிது வேகம் இருந்தால் பொருத்தமாக இருக்கும்"

ராமசுவாமி ஐயரின் இந்தச் சொற்களைக் கேட்டுக் கிருஷ்ணையரின் உள்ளம் சாம்பிவிட்டது. ஆனால் அவர் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், "அப்படியா?" என்றார்.

அதன் பின்னர் ஓர் ஆண்டு வரையில் அவர்களிடையே கச்சேரி சம்பந்தமான சந்திப்பு ஏற்படவில்லை. ஓர் ஆண்டுக்குப் பிறகு மகா வைத்தியநாதையர் கச்சேரி ஒன்றில் கிருஷ்ணையர் வாசித்தார். கச்சேரி முடிந்தபின் ராமசுவாமி ஐயர் கிருஷ்ணையரைத் தேடி வந்தார். "பேஷ்! பேஷ்! நீ மகா சூரன்! ஓர் ஆண்டுக்குள் அபாரசாதகம் செய்து பிரமாதமான முன்னேற்றம் பெற்றிருக்கிறாயே!" என்று மனமார வாயாரப் பாராட்டினார்.

"எல்லாம் உங்கள் ஆசீர்வாதந்தான்" என்றார் கிருஷ்ணையர்.

ஆனால் இத்தகைய பாராட்டைப் பெற அவர் ஸாதகம் செய்வதன் மூலம் பட்டபாடு கொஞ்சமா? கலை சம்பந்தமாகத் தம்மை யாரும் குறை கூறப் பொறுப்பதே இல்லை கிருஷ்ணையர்.

வில் வீரர்

திருச்சி ஜில்லாவில் ஓர் ஊரில் 1890 ஆம் ஆண்டு மகா வைத்தியநாதையரின் கச்சேரிக்கு ஏற்பாடு ஆகியிருந்தது. பக்க வாத்தியமாக வயலின் இசைக்கத் திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் அவர்கள் வந்திருந்தார்.

சந்தியா காலத்திற்குப் பிறகுதான் கச்சேரி ஆரம்பம். கலை, கர்மா இரண்டையும் நன்கு உபாசிக்கும் இயல்புடைய மகா வைத்தியநாத சிவன், அனுஷ்டானங்களைச் செய்யச் சென்றிருந்தார். அவையில் ரசிகர்கள் கூடியிருந்தனர்.

பக்கவாத்திய வித்துவான்கள் மேடையை அடைந்து அமர்ந்திருந்தார்கள். கிருஷ்ணையர் மேடையின் அருகே இருந்த ஒருவரிடம் உரையாடியபடி தாம்பூலம் தரித்துக் கொண்டிருந்தார். பேச்சு, தாம்பூலம் இரண்டின் சுவையும் அவரை வசப்படுத்தி இருந்தது.

மாலைக் கடனை முடித்துக் கொண்டு மேடைக்கு வந்த சிவன் அவர்களுக்குக் கிருஷ்ணையரின் தோற்றமும் செயலும் திருப்தியைத் தரவில்லை. கிருஷ்ணையர் என்றுமே ஆடை அலங்கார ஆடம்பரங்களில் அக்கறை இல்லாதவர். மிகச் சாமானிய உடையிலேதான் எந்நேரமும் காட்சி அளிப்பார்.

அன்றும் அப்படித்தான். இடது கையில் வெற்றிலை, வலது கையில் சுண்ணாம்பு; வாயிலே சீவல்; அருகே அவிழ்க்கப்படாத ஒரு பை, அதற்குள் வாத்தியம். சிவனைக் கண்டதும் அதை அவிழ்த்து வாத்தியத்தை எடுக்கத் தொடங்கினார் கிருஷ்ணையர்—கையில் வெற்றிலை சுண்ணாம்பு இருந்தபடியேதான்.

சிவன் அவரைப் பார்த்து முகத்தை சுளித்துக் கொண்டார். அதைக் கிருஷ்ணையரும் கவனித்தார். கவனியாதவர்போல் வயலினையும் வில்லையும் உறையிலிருந்து வெளியே எடுத்தார்.

"சுருதி சேர்த்துக் கொள்ள வில்லையா?"—சிவனின் கேள்வியில் சூடு பறந்தது. ஆயினும் கிருஷ்ணையர் ஒன்றும் பதில் சொல்லவில்லை. வைத்தியநாதையரே மேலும் சொன்னார்.

"சந்தியா வந்தனம் கூடச் செய்யவில்லைபோல் இருக்கிறது. இவ்வளவு நேரம் வாத்தியத்தைச் சரி செய்து சுருதியாவது சேர்த்திருக்கலாமே!"

கிருஷ்ணையருக்குப் பொறுக்கவில்லை வெடுக்கென்று ஒரு வார்த்தை சொன்னார்.

"பாட்டு முன்னாலே வந்தால் பிடில் தன்னாலே பின் தொடரும்".

சிவனின் மனத்தில் வேகம் பிறந்தது. "ஸ......" என்று தக்குஸ்தாயியில் நிலைத்து நின்றார். கிருஷ்ணையர் அவசர அவசரமாகத் தந்தியிலே வில்லைப் பதித்து ஒலியைக் கிளப்பி அவர் குரலோடு ஒன்றச் செய்தார். வைத்தியநாதையர் திடீரென்று ஒரே தாவலில் பலபடிகளைக் கடந்து மேலே சென்றார். அங்கேயே நிலைத்தார். கிருஷ்ணையரும் சளைக்கவில்லை; மின்னல் வேகத்தில் பின்னே சென்றார். குரல் ஒலிக்கும் வாத்திய ஒலிக்கும் வித்தியாசம் தெரியாதபடி இழையோடி நின்றார். ஒரே கணம்—மறுகணம் போன வேகத்திலேயே திரும்பினார் வைத்தியநாத ஐயர், கிருஷ்ணையரும் தொடர்ந்தார். இப்படியே கண் இமைக்கும் அளவில் அவர்கள் மேலுக்கும் கீழுக்குமாக ஒருவரைப் பின்பற்றி ஒருவர் சஞ்சரிக்கும் நிலை அவ்விடத்திலே பொறி பறக்கச் செய்தது. அவையில் இருந்தவர்கள் பிரமை பிடித்த நிலையில் இந்தக் காட்சியை பார்த்துக் கொண்டிருந்தனர். இவ்வளவிலும் வெற்றிலையும் சுண்ணும்பும் கிருஷ்ணையர் கரங்களிலே இருந்தன.

மகா வைத்தியநாதையர் ஏற்படுத்திய சோதனையிலே கிருஷ்ணையர் வெற்றி பெற்றார். உள்ளுக்குள் சிவன் அவர்களுக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அதன் சாயை முகத்திலும் தென்பட்டது; சொல்லிலும் வெளிப்பட்டது.

"மிகவும் சந்தோஷம். நேரம் ஆகிவிட்டது. போய் அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு வாருங்கள். கச்சேரியை ஆரம்பிக்கலாம்" என்றார். கிருஷ்ணையர் செருக்கற்றவர். எப்போதாவது சிறிது கோபம் வந்தாலும் உடனே மறந்து விடும். இப்பொழுதும் அப்படித்தான். சிவன் அவர்களின் விருப்பப்படியே நடந்து கொண்டார். கச்சேரி ஜாம் ஜாம் என்று நடந்தது.

அண்மையில் இருந்தவர்கள் தவிர மற்றவர்களுக்கு அவர், வைத்தியநாதையரின் மின்னற் பாய்ச்சலை வெகுலாவகமாகத் தொடர்ந்து சமாளித்தது மட்டுமே தான் தெரியும். அதற்காக அவர் வயலின் புருடைகளைத் தளர்த்தினதும், முடுக்கினதும். வில்லைத் தக்க முறையில் பல கோணங்களில் சாய்த்துப் பதித்து இழையோட்டினதும் ஆகிய செயல்கள் தெரிய வகையில்லை. அத்தனை சதுரப்பாடு உடையவர் கிருஷ்ணையர்.

★

ரசிக்கத்தன்மை சிறிதும் இல்லாதவர்கள், மற்றவர்கள் கொண்டாடுகிறார்களே என்பதற்காகத் தாமும் போலியாகக் கொண்டாடிப் புகழ முன் வந்தால் கிருஷ்ணையரால் அதைச் சகிக்கவே முடியாது. பின் வரும் நிகழ்ச்சி அதை அழகாக விளக்குகிறது.

மார்பிலே சந்தனமும் கழுத்திலே பூமாலையும் வாயிலே தாம்பூலமும் உடம்பிலே பொற்சரிகை இழையிட்ட சாதராவுமாக வெகு உல்லாசமாய்க் கிருஷ்ணையர் திருவாவடுதுறை மடாலயத்தின் உட்பகுதியில் நடமாடிக் கொண்டிருந்தார்.

அன்று மடத்திலே ஒருவைபவம். அதை முன்னிட்டு ஓர் இன்னிசை நிகழ்ச்சி. அதிலே அவருக்கும் பங்கு உண்டு. மடாதிபதி அவர் திறமையைப் பாராட்டி விசேஷப் பரிசுகள் அளித்தார். அதுதான் அவருடைய அத்தகைய உற்சாக நிலைக்குக்காரணம்.

அந்தச் சமயம் திருவாவடுதுறை ஆதீனத்தின் அதிபதியாக விளங்கியவர் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் அவர்கள். அவருடைய கலாரசனை மிகப் பிரசித்தம். கலைகளையும், கலைஞர்களையும் போஷித்து வளர்க்கும் செயலில் அவருக்கு இணை அவரே.

தேசிகர் அவர்களுக்குக் கலைகளுள் மிகப் பிடித்தது இசைக்கலை. அவர் திருச்சபையில் எந்த நேர

மும் கானமழை பெய்தபடி இருக்கும். மற்றவர்கள் வைபவத்திற்காக இசை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தார். அவர் இசை நிகழ்ச்சிகளை முன்னிட்டு வைபவங்களைத் திட்டமிடுவார். நல்லிசையைக் கேட்டு ரசிப்பதில்—இசைப் புலவர்களைப் புரப்பதில்—அத்தனை ஆர்வம் அவருக்கு!

அன்று அங்கே இசை நிகழ்ச்சி புரிந்தவன் பூச்சி ஐயங்கார் என்று வழங்கப்படும் ராமநாதபுரம் சமஸ்தான வித்துவான் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அவர்கள்தான். திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் அவர்கள் வயலின், கும்பகோணம் அழக நமபிப்பிள்ளை அவர்கள் மிருதங்கம். கச்சேரி வெகு சிறப்பாய் நடைபெற்றது.

கிருஷ்ணையரவர்கள் அதற்கு முன் பலதடவை அங்கே பக்க வாத்தியமாகவும் தனிவாத்தியமாகவும் வயலின் வாசித்திருக்கிறார். ஆயினும், அன்று அவருடைய வாசிப்பு மிக மிகச் சிறப்புடையதாக இருந்தது. சபையில் இருந்தவர்கள் பிரமித்தார்கள். பூச்சி ஐயங்கார், அழகநம்பி பிள்ளை இருவரும் வியந்து அகமகிழ்ந்தார்கள். எல்லோருக்கும் எல்லையற்ற ஆனந்தம். பரமரசிக சிரோமணியாகிய தேசிகர் அவர்களோ தம்மை மறந்து இசையிலே மூழ்கிப் போனார். படேபடே வித்துவான்கள் எல்லாரும் ரத்தம் கக்க உழைத்துத் தம் ஆற்றல் அனைத்தையும் வெளிப்படுத்தினாலும் அவர் சிரக்கம்பம் செய்வது கூட அபூர்வம். அத்தகையவர் அன்று மெய்ம்மறந்து அடிக்கடி ஆஹாகாரம் செய்தார் என்றால், கிருஷ்ணையரின் அன்றைய வாசிப்பைப் பற்றி வேறு என்ன சொல்ல வேண்டும்?

அன்றையநிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட வித்துவான்கள் அனைவருக்கும் வழக்கத்தைவிட அதிகப்படியான சம்மானந்தான். அதிலும் கிருஷ்ணையர் அவர்களுக்குத் தேசிகர் இரட்டைச் சாதராப் போர்த்த, இருமடங்குச் சம்மானம் அளிக்கச் செய்து மிகமிகப் பாராட்டினார்.

மேற்குறித்த செயல்தான் கிருஷ்ணையர் அவர்களின் குதூகல நிலைக்குக் காரணம். அங்கிலையில் அவர் மடாலயத்தில் உட் பகுதியில் உல்லாசமாக உலவிக் கொண்டிருக்கும்போது திடீரென்று ஒரு மனிதர் எதிர்ப்பட்டார். உத்தரீயத்தை இடுப்பிலே வரிந்து கட்டிக் கொண்டு நெடுஞ்சாண் கிடையாக விழுந்து பணிந்தார்.

கிருஷ்ணையர் மிகுந்த வியப்புடனும் திகைப்புடனும் பணிந்தவரைக் குனிந்து பார்த்தார். அவர் அந்த மடாலயத்தின் சர்வாதிகாரி.

கிருஷ்ணையரின் உள்ளத்து உற்சாகம் குன்றிற்று. அதிகாரி எழுந்து மிகவும் பவ்யமாக நின்றார், கரங்களைக் கூப்பி அஞ்சலி செய்தார். பிறகு சொல்லலானார்.

"சுவாமி! செவி படைத்ததன் பயனை நான் இன்றுதான் பெற்றேன். ஆகா! ஆகா! என்ன அற்புதமான சங்கீதம்! என்ன பிரமாதமான வாசிப்பு! தங்கள் கலைத்திறனை என்னவென்று புகழ்வது பிரமாதம்! பிரமாதம்!"

அதிகாரி மூச்சுவிடாமல் வார்த்தைகளை அடுக்கிக் கொண்டே போனார். கிருஷ்ணையரின் உள்ளத்து உற்சாகம் அனைத்தும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. முகம் கடுகடுத்தது. கண்களில் கோபம் ஜொலித்தது. அதிகாரியை வெறித்து நோக்கினார். படபடத்த குரலில் கூறினார்:—

"வீண்! வீண்! நான் இசையைப் பயின்றது வீண்! அதை உரமிட்டு வளர்த்தது வீண்! சந்நிதானம் போன்ற ரசிகசிகாமணிகள் கேட்டு ரசித்துச் சம்மானித்ததெல்லாம் வீண்! லேசமும் ஞானம் அற்ற ஒருவர் புகழ்ச்சிக்கு இலக்கான என் திறமை யெல்லாம் வீண்! நேற்று வரையில் ஞான சூனியராய் இருந்தவருக்குத்திடீரென்று இன்று

ஞானம் எங்கிருந்து வந்து முளைத்தது? பொய்! பொய்! எல்லாம் பொய்! போலி அனைத்தும்போலி! ஐயோ! கேவலம் ஞான சூனியரின் பாராட்டைப் பெறவா நான் காலமெல்லாம் உழைத்தேன்? பாபம்! பாபம்! பாபம்!''

இப்படிக் கூறிப் படீர் படீரென்று அவர் தலையில் அடித்துக்கொண்டு வேகமாக நடந்து அப்பாற் சென்ருர். அந்த அதிகாரி அவர் செல்வதையே நோக்கியபடி விலவிலத்து நின்ருர்.

மேல் மாடத்திலிருந்து இவ்வளவையும் கவனித்துக் கொண்டிருந்த தேசிகர் அவர்கள் உடனே அதிகாரியைக் கூப்பிட்டு என்னவென்று வினவினுர். அதிகாரி நடு நடுங்கிப் போனுர். கண்களில் நீர் சோர, நாத்தழுதழுக்கப் பின் வருமாறு கூறினுர்:—

''கிருஷ்ணையர் அவர்கள் மடத்திற்கு வந்து செல்கிறபோதெல்லாம் இங்கே உள்ள சில்லறைப் பொருள்களில் எதையாவது அபேட்சிப்பார். நான் மறுத்து விடுவேன். என் மீது ஆயாசம். இன்று அவருக்கு இங்கே நடைபெற்ற விசேஷ மரியாதைகளைக் கண்டதும் எனக்கும் அவரைப் பாராட்டவேண்டும் என்று தோன்றிற்று. புகழ்ந்து சில வார்த்தைகள் பேசினேன்.........''

''நிறுத்தும்!'' எனக் குறுக்கிட்டார் தேசிகர். நீர் அவரைப் புகழ்ந்தீரா! இத்தனை காலமும், மதியாத நீர் இன்று புகழ்ந்தீரா! போலிப் புகழ்ச்சி? அப்படித்தானே! சரி. நீர் மேலே சொல்ல வேண்டாம். அவர் ஏன் வருத்தம் அடைந்து தலையில் அடித்துக் கொண்டார் என்பது நன்ருகத் தெரிகிறது. புகழ் மொழிகளைக் கேட்டு யாராவது வருந்துவார்களா? உண்மையான கலைஞர்கள் போலியான புகழுரைகளைப் பொறுக்க மாட்டார்கள். நீர் ஞானம் அற்றவர் என்று அவரை தீர்மானித்திருக்க வேண்டும். கலா ரசனை உள்ளவர்கள் கலைஞர்கள் விருப்பத்தைக் குறிப்பால் அறிந்து நிறைவேற்றி வைத்து அவர்கள் மனத்தைக் குளிரச் செய்வார்கள். நீரோ அதற்கு நேர் எதிரிடையாக நடந்து கொண்டு அந்தக் கலைஞரின் உள்ளத்தைப் புண்படச் செய்திருக்கிறீர். 'வித்துவானுக இருந்தால் என்ன? கச்சேரி செய்தால் உரிய சம்மானத்தைப் பெறுகிருர். அப்புறமும் ஏன் வேறு பொருள்களை அபேட்சிக்க வேண்டும்?' என்ற எண்ணம் உமக்கு. உம் கடமையில் அந்த எண்ணம் ஓர் அளவு சரிதான். ஆனுல் எதற்கும் ஓர் விதிவிலக்கு உண்டு. அந்த முறையில் கலைஞர்கள் விஷயத்தில் நீர் நடந்துகொண்டது சரி அன்று. உமக்குக் கலை ஞானம் இருந்தால் கலையினிடமும் கலைஞரிடமும் பற்றுதல் தானுகவே ஏற்படும். கிருஷ்ணையர் படாடோபம் அறியாதவர். அவர் எளிய உடையில் மிக எளியவராகக் காட்சி தருவதால் கலை ஞானமற்ற உம் உள்ளம் அவரை மதிக்கவில்லை. மகான்களின் தோற்றம், சொல், செயல் முதலியன எப்படி வேண்டுமாயினும் இருக்கும். எல்லாம் சோதனை மயம். ஆடம்பரத்திற்கு அடிபணியும் மனப்பான்மையை அறவே

" மாலா "

கலை இலக்கிய மாத இதழ்.

———

தனிப்பிரதி அணு 0—4—0

வருட சந்தா ரூ 3—0—0

மானேஜர் 'மாலா'

சென்னை-18.

ஒழித்து விவேகம் பெற்று மகான் களை வழிபட வேண்டும். கிருஷ் ணையர் இசையில் தெய்வப்புலமை பெற்றவர். ஆகவே அவர் மகான். அவர் வேண்டும் பொருள்களை இங்கிருந்து கொண்டு செல்வதால் இங்கே ஒன்றும் குறைந்துவிடாது. அவர் உள்ளம் குளிர்ந்தால் இங்கே மேன்மேலும் நலமே சேரும். முதலில் அவரை மதியாமல் நடந்து கொண்டது தவறு; இப்பொழுது போலியாக புகழ்ந்தது அதை விடத் தவறு. இனியேனும் சீராய் நடந்து கொள்ள வேண்டும்.'' என அறி வுரை கூறினார்.

இந்தத் தலைமுறையில் உள்ள பெரிய பெரிய வித்துவான்கள் எல் லாரும்,''பெயரைச் சொல்வது கூட மரியாதை அன்று' என்று மதிக்கத் தக்க அளவுக்கு இசைக் கலையின் ஆற்றல் மிகுந்தவராய் கிளம்பியவர் மகா வித்துவான் திருகோடிகாவல் கிருஷ்ணையர் அவர்கள். இந்தத் தலைமுறையைச் சார்ந்தவர்கள் மட் டும் என்ன? அந்த நாளிலேயே அவருக்குச் சம காலத்தவராக விளங்கிய சிறந்த வாய்ப்பாட்டு வித்துவான்கள், வாத்திய வித்து வான்கள், ரசிகத்தன்மை மிகுந்த மடாதிபதிகள், ஜமீன்தார்கள், மகா ராஜாக்கள் பலரும் அவருடைய கலை ஆற்றல் கண்டு பிரமித்துப் பய பக்தி விசுவாசத்துடன் மரி யாதை செலுத்தி யிருக்கிறார்கள். கிருஷ்ணையர் அவர்கள் வித்துவத் தில் சிறந்தவராக மட்டும் விளங்க வில்லை; அந்த வித்துவத்துக்கு உரிய மரியாதை அளிக்காதவரை யும் போலியாகப் புகழும், நய வஞ் சக ஞானி சூனியரையும் ஆட்டி வைக்கும் தீரராகவும் விளங்கினார்.

(தொடரும்)

இன்றே விஜயம் செய்யுங்கள்

மதுரையில்
1901-ல் ஸ்தாபிக்கப்பட்டது
மூன்று தலைமுறையாக
நடைபெற்றுவரும்.
ஒரிஜினல்
நாகப்பட்டணம்
நெய் மிட்டாய் கடை

இது ஒன்றுதான்
20, மேலச் சித்திரை வீதி
(மேல கோபுரம் சமீபம்)

Prop: வி. வெங்கட்ராமய்யர் சன்.
வி. அனந்தநாராயணன் மதுரை.

சரணாகதி

கல்யாணம் நடக்கும் எதிர் வீட்டிலிருந்து நாதஸ்வர நாதம் காற்றில் மிதந்து வந்து கொண்டிருந்தது. கேட்பதற்கு இனிமையாக இருந்த போதிலும் என்னைப் பொருத்த வரையில் வேதனையைக் கிளப்பி விடும் கீதமாகத்தான் அது எதிரொலித்தது. என்னையும் அறியாமல் என் கண்கள் ஜன்னல் வழியாக எதிர்த்த வீட்டை நோக்கியது. அழகாக அலங்கரிக்கப்பட்ட பந்தலில் சூரிய ஒளி நிரம்பி இருந்த போதிலும் ஆடம்பரத்துக்கான மின்சார விளக்கொளியும் பலவித வர்ணங்களில் திகழ்ந்து கொண்டிருந்தது. பந்தலில் தொங்கிக் கொண்டிருந்த மலர் சரங்களுடன் சிறு குழந்தைகள் உறவாடிக்கொண்டிருந்தன. தங்கள் பணத்தின் பெருமையையும் அலங்காரத்தின் அருமையையும் எடுத்துக் காட்டுவது போல் விலை உயர்ந்த நகைகளையும் உடைகளையும் அணிந்தவாறு பெண்கள் இங்கு மங்குமாகச் சென்று கொண்டிருந்தனர்.

"எதிர் வீட்டு கீதாவுக்குக் கூட கலியாணம் வந்துவிட்டது' என்ற என் மனைவியின் குரல் என் கவனத்தைத் திருப்பியது.

"எல்லார் வீட்டிலேயும் தான் வந்து கொண்டிருக்கிறது கல்யாணம்" என்றேன் மனக்கசப்புடன்.

"நம் வீட்டில் என்று தான் வருமோ தெரியவில்லை. வரத்தான் போகிறதோ அதுவுமில்லையோ" என்ருள் என் மனைவி வேதனை நிறைந்த குரலோடு.

வீணையை மீட்டிக் கொண்டிருந்த சாரு பாதியில் அப்படியே நிறுத்தி விட்டாள். தன் தாயாரின் பேச்சைக் கேட்டு, ஏதோ பெரிய குற்றம் புரிந்து விட்டவளைப்போல் அவள் முகத்தில் கவலை படர்ந்தது.

இதை கவனித்ததும் என் கோபம் உச்ச நிலையை அடைந்தது. "லக்ஷ்மி! பேசாமல் இருக்க மாட்டாயா? என்ன பேச்சு பேசுகிருய் குழந்தையின் மனது புண்படும்படி?" என்று கத்தினேன்.

"எனக்கு மட்டும் என்ன இளநீர் அபிஷேகம் செய்தது மாதிரியாகவா இருக்கிறது? நெஞ்சு குமுறலில் தானே கூறுகிறேன். சாருவை விட சின்ன பெண்களுக்குக் கலியாணமாகி விட்டதே. நம் வீட்டுக்குழந்தை மட்டும் இப்படியா நிற்க வேண்டும். அந்த சப் ஜட்ஜ் வீட்டுக்கு இன்னும் இரண்டு முறை போய் விட்டு வரக்கூடாதா? குறைந்தா போய் விடுவீர்கள்?" என்று படபடவென்று பொரிந்து கொட்டினுள் லக்ஷ்மி

குயிலி

"போவதற்கும் ஒரு கணக்குக் கிடையாதா? பெண்ணைப்பெற்று விட்டால் என்ன அவ்வளவு இளப்பமா? எவ்வளவு தடவை போய் வந்து விட்டேன்? பிடி கொடுத்து பதில் சொன்னுல் தானே அந்த மனிதர்—பையன் ஐ. ஏ. எஸ். பரீக்ஷை எழுதியிருக்கிருன். அவ்வளவு தானே! அது பாஸாகும் என்று என்ன நிச்சயம். ஆராவமுதய்யங்கார் பெண்ணைக் கொடுத்து அந்தப் பையன் டப்பாஸ் போட்டது போல் ஆகிவிட்டால் என்ன செய்வது சொல். அவரும் ஐ. ஏ எஸ். பரிக்ஷை எழுதின நம்பிக்கையில் தானே கொடுத்தார். இப்பொழுது பெயிலாகி விட்டு கிளார்க்கு வேலைக்கு லாட்டரி அடிக்கிருன்.

"இப்படியே சொல்லிக்கொண்டிருந்தால் முடியுமா? ஏதாவது

ஒன்றை முடிக்க வேண்டியது தான்''

"அப்படி என்ன அவசரம் வந்து விட்டது. இப்பொழுது குழந்தையை ஒன்றும் கண்ட இடத்தில் கொண்டு தள்ள முடியாது. நல்ல வரன் கிடைத்தால் கலியாணம் பண்ணிக் கொடுப்போம் போதும்'' என்றேன் சிறிது அழுத்தமாக.

"இந்த மாதிரி பிடிவாதமாக இருந்தால் கலியாணம் கலியாணம்தான். யாரையும் போய் பார்க்க மாட்டேன் எதையும் விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று பிடிவாதமாக இருந்தால் எப்படி?'' என்று கூறிவிட்டு உள்ளே சென்றுள் அவள்.

கையிலிருந்த பாகவதத்தை மறுபடியும்புரட்ட ஆரம்பித்தேன் அப்பா! என்று மெல்லிய குரலில் அருகில் வந்து அழைத்தாள் சாரு.

என்னம்மா!

அம்மா சொல்வதும் சரிதானே அப்பா! எதையோ ஒன்றை முடித்து விடுங்கோ. என் அதிர்ஷடம் என்று இருந்து விட்டால் போகிறது. எனக்காக நீங்கள் இருவரும் இப்படி மனக் கஷ்டப படுவதைப் பார்க்க நான் விருப்பவில்லை அப்பா என்று தளர்ந்த குரல் அவளிடமிருந்து வெளிவந்தது.

அயர்ந்து போனேன் நான். சாரு இவ்வளவு வேதனையா அனுபவித்துக் கொண்டு இருக்கிருள். வெறும் குழந்தை என்று எண்ணிக் கொண்டிருந்தோமே இவ்வளவு பொருப்பு தெரிந்தவளாக ஆகிவிட்டாளா? என்ற பல கேள்விகள் என்னுள் எழுந்தன.

"நீ எதற்கு சாரு இப்படி அலட்டிக்கொள்கிருய்? மனக் கஷ்டம் என்ன எங்களுக்கு இதில்? நீ கவலைப்படாதே அம்மா, என்று கூறி அவளை உள்ளே அனுப்பினேன். பாவம், குழந்தை ஏன் தான் இப்படிக் கஷ்டப்படுகிறதோ? வாழ்வை ரஸித்து அனுபவிக்க வேண்டிய ஒவ்வொரு நாளும் சாருவுக்கு வீறைகிக் கொண்டு வருகிறதே. இதற்கு முடிவு தான் என்று கிடைக்கும்? குழம்பிய மனதுக்குச் சாந்தி அளிக்க விரும்பியவனய் பாகவதத்தை வைத்துவிட்டு கோவிலை நோக்கிப் புறப்பட்டேன். கஷ்டம் நிலையை மீறும் பொழுது கோவில் ஒன்று தான் சற்று சாந்தியைக் கொடுக்கக் கூடிய இடம் என்பது சிறிது காலமாக நான் அறிந்த உண்மை.

கால்கள் கோவிலை நோக்கி நடந்தனவே தவிர மனதுவேறு விஷயங்களில் லயித்து இருந்தது. என் பெண் சாருமதி அப்படி ஒன்றும் அறிவிலோ, அழகிலோ குறைந்தவள் இல்லை. சத்தன நிற மேனி கொண்ட அவள் எல்லா வகைகளிலும் தேர்ச்சி பெற்று இருக்கிருள். பெரிய கனவைக் கண்டு கொண்டு மிகுந்த உயர்ந்த ரகப் பெண்ணுக அவளை வளர்த்தாகி விட்டது. ஆனல் அவளுக்கு ஏற்ற மாப்பிள்ளை கிடைக்கவில்லையே? பெண்களுக்கு இருக்கும் சாமர்த்தியம் ஏனே இந்தக் காலத்துப் பையன்களுக்கு காணேம். எஸ். எஸ். எல். ஸி. தாண்ட மாட்டேன். எண்பது ரூபாய்தான் சம்பாதிப்பேன். என்பவனுக்கு எப்படிக் கொடுப்பது? பையன் கொஞ்சம் நல்ல பதவியில் இருந்து விட்டாலோ கேட்க வேண்டாம். லாட்டரி சீட்டு விழுந்த மாதிரி தான் பெற்ருேர்களுக்கு ஐம்பது ஆயிரம் என்று விலை கூற ஆரம்பித்து விடுகிருர்கள். அந்தப் பையன் வாழ்நாளில் கூட அவ்வளவு சம்பாதிப்பானு என்பது சந்தேகம்தான்? இப்படி இருக்கிறது விவகாரம். அதற்கு என்று நல்ல கெட்டிகாரப் பெண்ணை எங்காவது கொண்டு தள்ள முடியுமா? இந்த பிரச்சனைக்கு முடிவே கிடையாதா? என்று எல்லாம் ஏங்கித் தவித்

தது என் உள்ளம். அந்தக் குமுறல் குன்றுக்கு முற்றுப் புள்ளி வைப்பதுபோல் கோவில் மணி அடித்தது. அர்ச்சகன் தீபாராதனை செய்து கொண்டிருந்தார். திரும்பிய என் கண்களில் பெரியவர் ஒருவர் பாரதத்துக்கு விளக்கம் கூறிக் கொண்டிருந்தார். "திரௌபதி தன் கரத்தால் வஸ்திரத்தைப் பிடித்துக்கொண்டு கண்ணனைக் கூப்பிட்டபொழுது கண்ணன் உதவிக்கு வரவில்லை. திரௌபதி தன்னால் நினைக்கும்பொழுது எனக்கு என்ன வேலை அங்கு என்றான் அந்த யசோதா புத்திரன்? திரௌபதி இருகரங்களையும் கூப்பி அண்ணா! உன்னையன்றி எனக்கு யார்கதி என்று சரணாகதி யடைந்தவுடன் விரைந்து வந்து அவளைக் காப்பாற்றினான் அந்த கோபாலன். ஆகையால் பகவானிடம் சரணாகதி என்று கூறிவிட்டால் மேல் பொறுப்பை அவரே பாத்துக் கொள்வார்" என்று கூறி முடித்தார்.

என் உடல் ஒருமுறை சிலிர்த்தது. உண்மைதான். நானும் ஏன என் அருமை மகள் திருமணத்தை பகவானிடம் ஒப்படைத்து இருக்கக் கூடாது? நான் செய்கிறேன். நான் பார்க்கிறேன் என்று எவ்வளவு முட்டாள்தனமாக நடந்து சொண்டு விட்டேன் என்று என் உள்மனம் இடித்துக் கூறியது. மாபெரும் உண்மையை எடுத்துக்கூறிய வரை ஒருமுமுறை பார்த்தேன். என் கரங்கள் தானாகவே குவிந்தன. ஜகத்ரக்ஷகா! நீதான் கதி. என் பெண் வாழ்வு மலர அனுக்கிரகம் பண்ணு அப்பா! என்று மனப்பூர்வ சரணாகதி அடைந்தேன். வீடு திரும்பியபொழுது பெரிய சுமை ஒன்றை இறக்கியதுபோல் தோன்றியது. படைத்தவன் இருக்க நான் யார் கவலைப்பட! என்னால் என்ன செய்ய முடியும்? விதியை வகுத்தவன் அவன். அழைத்துப்போகும் சாலையில் மௌனமாகப் போக வேண்டியது தானே என்ற எண்ணம் மேலிட்டது. காலையில் வேதனையைக் கிளப்பிவிட்ட நாதஸ்வர இசையால் இப்பொழுது என்னை ஒன்றும் செய்ய முடியவில்லை. அவரவர் செய்வினைப் பலன் என்று எண்ணியது உள்ளம்.

நேரம் யாருக்காக நிற்கிறது. மத்தியான வேளை நகர்ந்து சாயந்திரப்பொழுதும் வந்தது. வெளியில் சிறிது சுற்றிவிட்டு வரலாம் என்று புறப்பட்டபொழுது "சௌக்கியமா மாமா!" என்ற வாரே ராமு உள்ளே நுழைந்தான்.

"அடேடே ராமுவா வா! அப்பா, வா! எப்பொழுது வந்தாய்?" என்றவாறு அவனை வரவேற்றேன்.

"இப்பொழுதுதான் வந்து கோண்டே இருக்கிறேன்!"

"அப்படியா. மிகவும் சந்தோஷம் எங்கு வேலையில் இருக்கிறாய்? எவ்வளவு நாள் லீவில வந்திருக்கிறாய்?"

"நாளைக்கு செங்கல்பட்டில் ஒப்புக் கொள்ளவேணும் வேலையை மாமா, இந்த தடவை ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ணினேன். டிரெயினிங் முடிந்து வருகிறேன். எல்லாம் உங்களுடைய அனுக்கிரஹம் தானே...நாளை வேலைக்குப் போகும் முன் மாமியையும் உங்களையும் பார்த்து சேவித்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்றான் மிகவும் வினயத்துடனும் அடக்கத்துடனும்.

ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ணிவிட்டாயா? அதிர்ஷ்டக்காரன்தான் அப்பா என்றேன். ராமு எங்களுக்குத் தூரத்து உறவு. தாய் தந்தை இல்லாத அவனை எஸ். எஸ். எல். ஸி.வரை படிக்கவைத்தேன். பிறகு வடக்கே உத்தியோகமாகப் போன அவன் இரவுப் பள்ளியில் படித்து பட்டம்

பெற்றது மட்டும் தெரியும். ஆனால் அவன் ஐ. ஏ. எஸ். ஆபீஸராக என் முன் வருவான் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை.

"மாமி, சாரு, எல்லாம் எங்கே மாமா?" என்றான். அதோ, உள்ளே இருக்கிறார்களே என்று நான் சொல்லியபோது, வைத்த கண் வாங்காமல் சாருவைப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். "சாருவா மாமா, இவள் ஆறு வருஷத்தில் எப்படி வளர்ந்து விட்டாள்?" என்றான் வியப்புடன்.

"அது சரி ராமு, உன் கலியாண விஷயம் என்ன? பண்ணிக் கொண்டு விட்டாயோ" என்றேன் ஆவலோடு.

"உங்களுக்குத் தெரியாமலா? இனிமேல்தான் எல்லாம்" என்றான் லேசாக சிரித்தவாறு

"அப்படின்னா. நம்ம சாருவைப் பண்ணிக் கொள்கிறாயா? ஆயிரமாயிரம் உணர்ச்சிகளோடு போட்டியிட்டவாறு வந்தது அந்த வார்த்தைகள் என்னிடமிருந்து. எனக்கிருந்த ஆவலிலும் ஆத்திரத்திலும் கேட்கும் முறை, வகை எதையும் மறந்து கேட்டேன் அவனை.

"நானா? அது எப்படி மாமா, எனக்குச்சொத்து ஒன்றும் கிடையாது. உங்கள் உதவியால்



தானே படித்தவன் நான்'' என்று இழுத்தான் அவன்.

''நீ ஏன் அப்படி குறைத்துக் கொள்கிறாய் உன்னை? அதுதான் பெரியபதவிக்கு இன்று வந்து விட்டாயே! உனக்குச்சம்மதமா? தயங்காமல் கூறிவிடு'' என்றேன் சிறிது கண்டிப்புடன்.

''கரும்பு தின்னக் கூலியா? மாமா!'' என்றான் அவன் நகைத் தவாறு.

அவ்வளவுதான், காலையில் வீட்டில் நிலவியிருந்த மௌன மும், வேதனையும் விடைபெற்றுக் கொண்டது. கலியாணக் களை வீட்டில் பெருகு ஏற்றியது. சந்தோஷ ஆரவாரம் பரவ ஆரம் பித்தது. நாணம் கலந்த அழகு சாருவின் முகத்தை வசிகரப் படுத்தியது.

அடுத்த பதினைந்தாம் நாள் சாருவின் கழுத்தில் மாங்கல்யம் ஏறியபோது ஊரே அவள் அதிர்ஷ்டத்தை எண்ணி வியந் தது. என் லக்ஷுமு பெருமையால் தலை நிமிர்ந்து நடந்தாள். சாரு ஐ. ஏ. எஸ். மனைவி என்ற தோரணையாக உல்லாச நடை போட்டாள். ஆனால் என் மன தில் தனியான ஒரு மாறுதலையும் இந்த சம்பவம் உண்டு பண்ணி விடவில்லை. இந்த நிகழ்ச்சிகள் ''திரௌபதி இரு கரங்களையும் கூப்பி, அண்ணா உன்னையன்றி எனக்கு யார்கதி என்று சரணாகதி அடைந்தவுடன் விரைந்து வந்து அவளைக் காப்பாற்றினான் அந்தக் கோபாலன்'' என்று அந்த பெரியவர் கூறிய வார்த் தைகள் காதில் ரீங்காரம் செய்து கொண்டிருந்தன. சரணாகதி என்று கூறியவுடன் எங்கேயோ இருந்த ராமனை கொண்டு வந்து கொடுத்துவிட்டாரே, அந்த பக வான். கலியாணங்கள் ஸ்வர்க்க லோகத்தில் செய்யப்படுகிறது என்று கூறுவதன் தாத்பர்யம் இதுதான்போலும் என்று எனக் குள் கூறிக்கொண்டேன்.

எம் பெருமானே உன் அருளால் அன்பும், இன்பமும் பிணைத்த தாக இருக்க அனுக்கிரகம் செய் என்று மனப்பூர்வமாக அந்த தெய்வத்திடம் சரணாகதி அடைந்து கையிலிருந்த மலர் களை மணமக்களின்மேல் வர்ஷித் தேன். சாலையை வகுக்க ஒருவன் இருக்க அதில் நடக்க வேண்டிய நான், அமைப்பைப் பற்றி கவலைப் படுவானேன்? கஷ்டப்படுவா னேன்? என்று நினைத்தபொழுது சந்துஷ்டியும் அமைதியும் என்னி டம் பரவியது. ஆனந்தக்கண் ணீர் கண்களில் மல்க சிரித்த வண்ணம் அக்கினியை வலம் வரும் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டே நின்றேன் நான்.

அழகிய கலர் அச்சு வேலைகளுக்கு
சிறந்த இடம்

ஸ்ரீ ஸுதர்சன் பிரஸ்

'' காங்கிரஸ் பில்டிங்ஸ் ''

111, மவுண்ட் ரோட், தேனாம்பேட்டை

சென்னை-6

"உசவாடி" (சிக்கல்)

பிலோ இருதயநாத்

நான் நாகையில் சில நாட்கள் தங்கியபோது சிக்கல் கிராமத்தைப் பற்றியும் சிக்கல் கோவிலின் சிற்பங்களைப் பற்றியும் பலர் பலவிதம் கூறினார்கள். அவைகளைக் கேட்ட நான், சிக்கலுக்குப் பிரயாணம் செய்தேன். சிக்கல் கிராமம், சிக்கல் இரயில் நிலையத்திலிருந்து இரண்டு பர்லாங்கு தூரம்தான் இருக்கிறது. சிக்கலில் பெரும்பான்மையும் விவசாயிகளும், கைத் தொழிலாளிகளும்தான் வாழ்கின்றனர். இத் தேவாலயத்தைக் காண்பதற்கு மிகவும் ரம்மியமாக இருக்கிறது.

கோவிலின் சுவர்கள் நீளம் 388 அடியும், அகலம் 222 அடியும், இதன் ராஜகோபுரம் எண்பது அடி உயரமுமிருக்கின்றன. இக்கோவிலுக்கு மேற்கில், "பாற்குளம்" இருக்கிறது தல விருக்ஷம், "மல்லிகை செடியாதலால், இத்தலத்திற்கு "மல்லிகாரண்யம்" என்றும் ஒரு பெயருண்டு. இத் தேவாலயத்தைச் சுற்றிச் சுற்றி வந்தால் பல மண்டபங்களைக் காணலாம். கார்த்திகையில் முருகன் காட்சியளிக்கும் மண்டபம் மிகவும் அழகுடையதாக இருக்கிறது.



'உசவாடி' கோயிலின் கோபுரம்

"இதுதான் கல்யாண மண்டபம்" இதில் பண்டையில் மூவாயிரம் மக்கள் வசதியுடன் விருந்து உண்ணலாம். அந்த காலத்தில் திருமணத்திற்கு மூவாயிரக் கணக்கில் வருவார்களாம்:" என்று சொல்லி சிரித்தான், நண்பன்.

'ஏன் சிரிக்கிறாய்! தற்காலத்திலும் ஆறாயிரம் பேர்களுக்கு விருந்து கொடுப்பார்கள்," என்றேன்.

கோவிலுக்குள் தென் புறத்தில் ஒரு விநாயகரும், மற்றொரு பக்கத்தில் தண்டபாணியும் விளங்குகின்றனர். அதற்குள் நவநீதப் பெருமாள் சந்நதியும் இருக்கிறது. கோவிலுக்குள் பல சிற்பங்கள் நிறைந்து இருக்கின்றன. பால் வெண்ணெய் நாதர் எழுந்தருளியிருப்பது ஒரு கட்டுமலை; இது சோழன் கோச்செங் கண்ணனால் கட்டப்பட்டது. இவ்வரசன் கட்டிய கோவில்களுக்கு, "யானையேறாத கோவில்கள்," என்று பெயராம். இப் பெயர் வரக் காரணம், இவ்வரசன் முற்பிறவியில் சிலந்தியாக திருவானைக் காவலில், சிவன் மீது தூசிப் படியாமல் காத்தான் என்றும், அவன் செய்த தொண்டுக்கு ஒரு யானை இடையூறு செய்ததால், சிலந்தியாகிய இவன் தும்பிக்கையில் புகுந்தான். யானை வலித்தாங்காமல் தும்பிக்கையை தரையில் அறைந்து, யானையும் சிலந்தியும் மாண்டன. இக்காரணத்தால் சிலந்தி மறு பிறப்பில் அரசனாயிற்று. முற்பிறவியின் பயனாக இவன் கட்டிய கோவில்களில் யானை ஏறாதவைகளாகவே பெரி



கோயிலின் உட்புறம்

யத் திண்ணையின்மேல் அமைத்தான். இக்கோவிலின் சுற்றுச் சுவர்களில் அழகிய பல சிற்பங்கள் நிறைந்து இருக்கின்றன.

பேசும் கல்வெட்டுகள்.

இத் தேவாலயத்தின் சுற்றுச் சுவர்களிலும், சுவரின் கீழும், மொத்தம் எட்டுக் கல் வெட்டுகள் இருக்கின்றன. கி. பி. 1447-ம் ஆண்டில் விஜய நகர அரசரின் சேனாதிபதியான தக்ஷிண தண்ட நாயகர் என்பவர் சிக்கல் வாசிகள் கேட்டுக் கொண்டதன் பேரில், "பதிநத்தம்", "திருநயநல்லூர்" என்னும் இரு கிராமங்களைத் தேவ தானமாக அளித்ததைக் கூறுகிறது. மற்றொன்று கி. பி. 1563-ல் அரிராமராஜய்யர் குமார் கிருஷ்ணமாசய்யர் என்னும் சிற்றரசன் அன்னதானத்திற்கு நிலம் விட்டான். கி. பி. 1442-ல் ஏற்பட்ட கல் வெட்டு ஒன்று வீர பாண்டிய தேவர் தருமத்தை எடுத்துக் காட்டுகிறது.

கி. பி. 1447-ல் சோழ மண்டலத்திலிருக்கும் சிக்கலுக்குப் பழையபெயர், "உசவாடி" என்று ஒரு கல் வெட்டில் காட்டுகிறது.

அக்கசாலைப் பிள்ளையார் கோவிலுக்குக் கிழக்கு ஒரு எல்லையை குறிப்பதைப் பார்த்தால், "நாகை, சோழ ராஜதானியாக இருந்தபோது, சிக்கலில் அக்கசாலை இருந்தது. ஏனென்றால் அக்கசாலைககு அருகில் "அக்கசாலை விநாயகர்" என்று விநாயகர் இருக்கிறார்.

பழமையான சிக்கல்

இது பழமையானதோர் இடம் என்பதற்கு சில சரித்திரங்களை ஆராய்ச்சி செய்தால் நமக்கே வியப்பாக இருக்கின்றன. 'அயோதியையாண்ட முசுகுந்த அரசன் முதன் முதலாக இவ்வாலயத்தைக் கட்டுவித்தான்' என்று சரித்திரம் கூறுகிறது. பின்பு கி. பி. 4-ம் நூற்றாண்டில் சோழ நாட்டை ஆண்ட சிலந்திச் சோழன் இக் கோவிலைத் திருப்பணி செய்வித்தான். கி பி. 6-வது நூற்றாண்டில் திருஞான சம்மந்தர் இங்கிருக்கும் நவநீதப் பெருமானை வணங்கி பதிகம் பாடினார். ஏழு நூற்றாண்டுகளுக்கு முன் பிறந்த விஜய நகர அரசர்களால் நிலம் கொடுக்கப்பட்டதாக தெரிகிறது. சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் அருணகிரிநாதர் திருப்புகழில் பாடியுள்ளார். இச் சரித்திரச் சான்றுகளால் இந்த சிக்கல் ஊர் மிக மிகப் பழைமையானது என்பது தெரிகிறது.

இவ்வளவு பழமையானதோர் இடம் இன்று சிறியதோர் க்கிராமமாக இருக்கிறது. சிற்பங்களின் அழகும், விமானத்தின் அழகும், பிள்ளையாரின் நடனமும், வசிஷ்டர் பூசை செய்யும் சிற்பங்களும் என் உள்ளத்திலிருந்து என்றும் அகலாததோர் சிற்பச் சிலையாயிற்று.

★

பைத்தியம் :–:

எஸ். வைத்திய நாதன்

திருச்சியில் ஒரு கல்யாணத்துக் காகப் போய்க் கொண்டிருந்தான் ஜனார்த்தனம்.

ரயிலில் அவன் எதிர் பெஞ்சியில் படுத்துக் குறட்டை விட்டுக் கொண்டிருந்த பெரியவர் ஒருவர் திடீரென்று எழுந்து உட்கார்ந்து கொண்டு "இது என்ன ஸ்டேஷன்?" என்று வினவினார்.

"இது ஒரு ஸ்டேஷனும் இல்லை!" என்றான் ஜனார்த்தனம்.

பெரியவர் திகைத்தார். சுற்று முற்றும் பார்த்தார். விஷயம் விளங்கிற்று அவருக்கு.

"வரப்போகிறது என்ன ஸ்டேஷன் என்று கேட்டேன்?" என்றார் அசட்டுச் சிரிப்புடன்.

"அரியலூர்."

"சரிதான். நீங்கள் எதுவரையில் போகிறீர்கள்?"

"திருச்சி."

"சொந்த ஊர் திருச்சிதானே?"

"இல்லை. என் சொந்த ஊர் திருவாலங்காடு. ஆனால் இப்பொது காமாக்ஷீபுரத்தில் வேலையாயிருக்கிறேன். திருச்சியில் ஒரு நண்பனின் தங்கைக்குக் கல்யாணம். அதற்காகப் போகிறேன்..."

'திருவாலங்காடா?" — பெரியவர் அவனைக் கூர்ந்து கவனித்தார். சட்டென்று "நீ சங்கர சுப்பனின் பிள்ளைதானே?" என்றார்.

அவன் வியப்புடன் "ஆமாம். நீங்கள் யார்?...எப்படித் தெரிந்தது உங்களுக்கு?" என்றான். "நானும் திருவாலங்காடுதான். உங்கப்பாவும் நானும் அந்தக் காலத்தில் ரொம்ப சிநேகிதம். ஆனால் உத்தியோக நிமித்தம் நான் முப்பது வருஷங்களுக்கு முன் ஊரை விட்டுக் கிளம்பி விட்டேன். அப்புறம் அங்கு வரவேயில்லை. உன் அப்பா மரணமடைந்த சமாசாரமும் காதில் விழுந்தது.... இப்போ ரிடையராகிக் கரூரில் இருக்கிறேன் நான். உன் மூக்கைப் பார்த்துத் தான் உன்னை இப்போ கண்டு பிடித்தேன்! உங்கள் பரம்பரைக்கே மூக்கு ஒரு அலாதியான டைப்!" என்றவர் "உனக்குக் கல்யாணமாயிடுத்தா? குழந்தைகள் எத்தனை?" என்றார்.

"கல்யாணம் ஆகிவிட்டது. குழந்தைகள் ஒன்றும் இன்னும் ஏற்படவில்லை!"

"சரிதான். பெண் எந்த ஊர்?"

"கல்யாணபுரம்."

"கல்யாணபுரமா! அங்கே யாருடைய பெண்?"

"சுந்தரராமன் என்று ஒரு மிராசுதார் இருக்கிறார். அவருடைய பெண்."

"ஓஹோ. பித்துக்குளி சேஷன் பேத்தியா!"

"பித்துக்குளிசேஷனா!?"

"ஆமாம் அப்பா! அந்தக் குடும்பத்தைப் பற்றி எனக்குத் தெரியும். உன் மாமனாருக்கு அப்பா பெயர் தான் சேஷன் என்பது. அவருக்கு பைத்தியம் பிடித்திருந்தது, பாவம். சாகும் வரையில் விடவே இல்லை. அந்தச் சேஷனுக்குத் தாத்தா ஒருவர் சுப்பன் என்று இருந்தாராம். அவருக்கும் பைத்தியம் உண்டாம். வம்ச பரம்பரையாகப் பைத்திய வியாதி அந்தக் குடும்பத்தில் உண்டு ஆனால் சிலரைத்தான் பிடிக்கும் என்று தெரிகிறது! உன் மாமனாருக்கோ, அவர் தாத்தாவுக்கோ இல்லை பார்!" என்று தாம் என்ன சொல்கிறோம், யாரிடம் சொல்கிறோம் என்பதை உணரா

மலே அவர் சொல்லிக் கொண்டிருக்கையில் வண்டி பிக்ஷாண்டார் கோயில் ஸ்டேஷனில் நுழைந்து நின்றது.

"எனக்கு இங்கே கொஞ்சம் காரியம் இருக்கிறது நான் வரட்டுமா? நீ கரூர் பக்கம் வந்தால் அவசியம் நம்ப வீட்டுக்கு வா. ஸ்டேஷனுக்குச் சமீபந்தான் விடு. ரிடையர்ட் ஸப்-ரிஜிஸ்டிரார் ரங்கசாமி என்று சொல்லி விசாரித்தாயானல் யாரும் வீட்டைக் காட்டுவார்கள்" என்று கூறிவிட்டு அந்தப்புண்ணியவாளன் இறங்கிப்போய் விட்டார்.

ஜனார்த்தனம் பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்திருந்தான்! 'பித்துக்குளி வம்சத்துப் பெண்ணையல்லவா கல்யாணம் செய்து கொண்டுவிட்டோம்? முன்னடியே தெரியாமல் போச்சே!' என்று லேசான பீதியும் அருவருப்பும் அவன் உள்ளத்தை ஆக்ரமிக்கலாயின.

பரம்பரை வியாதியாகப் பைத்தியம் அந்தக் குடும்பத்தில் வருகிறது என்று ரங்கசாமி சொன்னது அவன் காதுகளில் இடைவிடாமல் ரீங்காரம் செய்தது. ஏதோ சில ரைத்தான் அந்த வியாதி பீடிக்கிறது என்று அவர் சொன்னர் என்ருலும் ஒன்றுவிட்டு ஒரு தலை முறையல்லவா அது விஜயம் செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது! பித்துக்குளி சேஷன் அடுத்தமுறை சேஷனுடைய பேரக்குழந்தையினுடையதுதானே? அந்தப் பேரக் குழந்தை சுந்தரராமனுடைய ஏக புதல்வியான—சுதா அல்லவா? எனவே அந்தப் பரம்பரைக் குறைபாடு அவனுடைய மனைவியையும் பற்றிக் கொள்ளப் போகிறது!

மனத்தை இவ்வாருன எண்ணங்கள் அரித்துக் கொண்டிருக்கையில் நண்பன் வீட்டுக் கல்யாணத்தில் அவனல் உற்சாகமாகக் கலந்து கொள்ள முடியுமா? தலையைக் காட்டிவிட்டு, நண்பன் மறுநாள் போகலாம் என்று பலமாக வற்புறுத்தியும் வேலை இருப்பதாகச் சாக்குக்கூறிவிட்டு அடுத்த ரயிலிலேயே காமாக்ஷிபுரத்துக்குக்கிளம்பி விட்டான்.

சுதாவின் கண்கள்தான் அவளுடைய எல்லையற்ற வனப்புக்குக்காரணம் என்று முன்பெல்லாம் போற்றிப் பெருமையடைந்து கொண்டிருந்தான் ஜனார்த்தனம். அத்தன்மைய ஒளிபடைத்த கண்கள்—மானை நினைவூட்டும் மருண்ட விழிகள்—எந்தப் பெண்ணுக்கும் அமைந்திருக்க முடியாது என்று இறும்பூது அடைந்து கொண்டிருந்தான். ஆனல் இப்போது அந்த ஒளி, பைத்தியங்களின் கண்களில் தென்படுமே ஒருவிதப் பிரகாசம், அந்தப் பிரகாசமாகத் தோன்றியது! அந்த மருண்ட விழிகள், பித்துக்குளியின் மிரண்ட பார்வையாக அவனுக்குத் தோற்றமளித்தன! முன்னமெல்லாம் அவன் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அவளுடைய மலர்ச்சிரிப்புப் பித்துக்குளியின் அர்த்தமற்ற சிரிப்பாக இப்போது அவனுக்குப் படலாயிற்று!

அவளுள் ஒளிந்து கொண்டிருக்கும் பரம்பரை பித்துக் கொள்ளித்தனம் ஒரு நாளில்லா விட்டால் ஒருநாள் திடீரென்று வெடித்துக் கொண்டு கிளம்பப் போகிறது. அவள் பாயைப் பிருண்ட ஆரம்பித்துவிடப்போகிருள். துணியைக் கிழித்துக் கொண்டு கிளம்பிவிடப் போகிருள் என்றெல்லாம் எண்ணி எண்ணி உளைச்சல் பட்டுக்கொண்டிருந்தான் அவன்.

அவளுக்குப் பைத்தியம் பிடித்துத்தான் ஆகவேணும் என்ற அவசியமில்லை. பிடிக்காமலும் இருக்கலாமல்லவா என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொளளமுயல்வான் சில சமயம். ஆயினும் அந்தச் சமாதானம் நெடுநேரம் நிலைக்காது. 'பரம்பரைநோய் ஆயிற்றே அது!' என்ற கிலி மீண்டும் தலை காட்டத் தொடங்கிவிடும்!

அவன் போக்கே மாறிவந்தது. மனைவியோடு முன்பெல்லாம்போல் மனம்விட்டுப் பேசிப் பழகி அளவளாவுவதில்லை. அவளுடைய

நடவடிக்கைகளை மாத்திரம் கூர்ந்து கவனித்து ஆராயலானுன். அவற்றில் பைத்தியவாடை வீசுவதாகத் தான் பட்டது அவனுக்கு!

ஓர் ஆங்கில சஞ்சிகையின் பழைய இதழ் ஒன்றின் ஏடு ஒன்று சர்க்கரையைக் கட்டிக்கொண்டு மளிகைக்கடையினிருந்து ஒரு நாள் அவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தது. சர்க்கரையை டின்னில் கொட்டி விட்டு சுதா அதைக் கூடத்தில் வீசி யெறிந்திருந்தாள். அது ஜனர்த்தனத்தின் கண்ணில் பட்டது. அன்று பார்த்துத்தானு அவனுக்குப் பொழுது போகாமல் இருக்க வேணும்? அந்தக் காகிதத்தை எடுத்துச்சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம் அதில் கண்களை ஓட்டினுன் அவன். அந்தக் காகிதத்திலிருந்து அந்தச் சஞ்சிகையின் பெயரோ அது வெளியான தேதியோ புலப்படவில்லை. என்ருலும் அதில் அச்சாகியிருந்தவிஷயம் அவனைப் பரபரப்புடன் படிக்கத் தூண்டியது. 'பைத்தியங்கள் பல வகை' என்ற தலைப்பில் சாந்திலால் கோஷ் என்பவர் ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியிருந்தார். அபாயகரமான பைத்தியங்கள், அபாய மற்ற பைத்தியங்கள், முக்கால் பைத்தியம், முழுப் பைத்தியம், ஒன்றரைப் பைத்தியம், குறிப்பிட்ட ஓர் விஷயத்தில் மாத்திரம் பைத்தியம், சிரிக்கும் பைத்தியம், அழும் பைத்தியம் என்று பல விதப் பைத்தியங்களைப் பற்றி விவரித்துவிட்டுக் கடைசியில் பரம்பரைப் பைத்தியங்களைப் பற்றி விமர்சித்திருந்தார்! பரம்பரை காரணமாகப் பைத்தியம் சிலருக்கு ஏற்படக்கூடுமென்றும், ஒவ்வொரு தலைமுறையிலோ, அல்லது ஒன்றுவிட்டு ஒரு தலைமுறையிலோ, அந்தப் பித்துக்கொள்ளி வம்சத்தில் யாராவது ஒருவருக்குப் பைத்தியம் ஏற்படுவது திண்ணம் என்றும் அந்த மகானுபாவன் விளக்கியிருந்தார்!

'சரிதான்! என்ருே ஒரு நாள் சுதா கையில் அரைக்கல்லை எடுத்துக் கொள்ளப்போகிருள்! பரம்பரை நியதி பொய்க்குமா? இதோ ஒரு நிபுணரே அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கிருரே! இனியும் சந்தேகமென்ன? அந்தப் பித்துக்

நாட்டியாலயா

[பரத நாட்டிய ஸ்கூல்]
பெண்களுக்கு மட்டும்

போஷகர்: **குமாரி வைஜயந்திமாலா**

சிறந்த ஆசிரியரைக் கொண்டு சாஸ்த்ரீய முறையில் நாட்டிய வகுப்புக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு மாணவிக்கும் பிரத்தியேக கவனம் செலுத்தப்படுகிறது.

★

விவரங்கட்கு:

நாட்டியாலயா,

C/o 'மாலர்' ஆழ்வார்பேட்டை, சென்னை-18.

குளிப் பரம்பரையின் அடுத்த பித்துக்குளி இவள்தான்!' என்று உறுதியாக முடிவு செய்துவிட்ட அவனுக்கு வயிற்றில் புளியைக் கரைக்கத் தொடங்கிற்று.

இந்தச் சந்தர்ப்பத்தில் சுதா கூடத்து மூலையிலிருந்த கழியைக் கையிலெடுத்துக் கொண்டு அவன் பக்கமாகத் திரும்பினாள். அவனுக்கு அஸ்தியில் ஜுரம் கண்டுவிட்டது! சட்டென்று நாற்காலியிலிருந்து எழுந்து "என்ன சுதா இது? கழியை எதற்காக எடுத்தாய்?" என்று கேட்டுக்கொண்டே பின் வாங்கலானான்!

அவன் தமாஷ் பண்ணுகிறான் என்று கருதிய அவள் 'போதுமே உங்க விளையாட்டு? கொடியிலிருந்து துணியை எடுக்கக் கழியைக் கொண்டு வந்தால் ஏதோ உங்களை அடிக்க வந்துவிட்டமாதிரி கலாட்டா பண்ணுகிறீர்களே!" என்றாள்.

அவனுக்கு உயிர் வந்தது. என்றாலும் அவளை நம்புவதுக்கில்லையல்லவா? அவளுடைய குலதனம்? அவளுக்கு வந்து சேரத்தானே போகிறது? கண் கொத்திப் பாம்பாக அவள் விஷயத்தில் நடந்து கொண்டு வந்தால்தான் அவன் தப்பலாம்!

அவன் உள்ளம் முழுதும் எப்போதும் ஒரே கிலி, வேதனை: 'ஏன் இந்த பித்துக்குளியைக் கட்டிக் கொண்டோம்?' என்ற வருத்தம். 'இன்று அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிடுமோ, அல்லது நாளைக்குப் பிடிக்குமோ?' என்ற பீதி கலந்த விசாரம் அவனைச் சதா காலமும் அரிக்கலாயிற்று அவள் சாதம் போடும்போது திடீரென்று வெறி பிடித்துக் கரண்டியால் தன் மண்டையைப் பிளந்து விடுவாளோ என்று பயந்தான். இல்லாவிடில் துணியைக் கிழித்துக்கொண்டு தெருவில் கிளம்பிவிடுவாளோ,



ஆடிப்பாடி ஊரைக் கூட்டிவிடுவாளோ என்றெல்லாம் அச்சம் கொண்டான். அவளுக்குப் பிடிக்கப்போவது இன்னவிதமான பைத்தியம் என்று முன் கூட்டியே அவன் எவ்வாறு எதிர் பார்க்க முடியும்!

நாளுக்கு நாள் சுதாவை வெறுத்து தூர விலகலானுன் அவன். அவளோடு பேசினுல்கூட நாலடி தள்ளி நின்றே பேசினுன்! தூங்கும்போது தன்னை அவள் ஏதாவது செய்துவிடப்போகிருளே என்ற பயத்தில் தன் படுக்கையை மாடிக்கு மாற்றிக் கொண்டான்' படுப்பதுக்கு முன் ஞாபகமாக மாடியறைக்கதவை உட்புறமாகத் தாழிட அவன் தவறுவதில்லை!

விசாரத்தாலும் பீதியாலும் நாளடைவில் அவன் தோற்றமே மாறிவிட்டது. பால் வடியும் அவன் முகத்தின் அழகெல்லாம் எங்கோ ஓடி ஒளிந்துகொண்டது. அவன் சரீரமும் இளைத்துக் கறுத்துக் கொண்டு வந்தது!

சுதாவுக்கு அவன் போக்குப் பிடிபடவில்லை. தன்னிடமிருந்து அவன் விலகி யிருக்க முயற்சிக்கிருன் என்பது மாத்திரம் ஓரளவு அவளுக்குப் புரிந்தது. ஆனுல் அதன் காரணத்தை அவளால் ஊகிக்க முடியவில்லை. அவனுக்கு அதிருப்தி ஏற்படும்படி தான் என்ன பிசகு செய்தோம் என்றே அவளுக்குத் தெரியவில்லை. அவனையே பலதடவை கேட்டும் விட்டாள்: 'உன் உடம்புக்குள் பித்துக்குளித் தனம் ஒளிந்து கொண்டிருக்கிறது! அது பீறிக்கொண்டு கிளம்பப் போவதை எதிர்பார்த்துத் தான் நான் இப்படி நடந்து கொள்கிறேன்!' என்று அவளிடம் உண்மையை வெளியிட அவன் விரும்பவில்லை. (அவன் இதயத்தில் கொஞ்சம் அன்பு, பண்பு, இன்னும் ஒட்டிக் கொண்டிருந்தது போலும்!) எனவே 'நீ பிசகு எதுவும் செய்யவில்லை... அதற்குமேல் எதுவும் நிண்டி நிண்டிக் கேட்காதே!'' எனும் ரத்தினச் சுருக்கமான பதிலைத் தவிர வேறு எதுவும் சொல்வதில்லை அவன்.

சுதாவுக்கு இந்தப் பதில் திருப்தியளித்துவிடுமா? தன் அன்புக்கணவன் இப்படியாகி விட்டானே, காரணம் சொல்லவும் மறுக்கிருனே, என்ற ஏக்கம் அவளை வாட்டி வதைத்து உருக்கத் தொடங்கியது.

சில மாதங்களும் ஓடிவிட்டன. ஜனுர்த்தனம் எதிர்பார்த்த பிரகாரம் சுதாவுக்கு இன்னும் பைத்தியம் பிடிக்கமில்லை. அவனுக்கு அலுப்பும் ஆத்திரமுமாகப் பற்றிக் கொண்டு வந்தது. எத்தனை காலம் தான் அவன் தவிப்புடன் காத்திருப்பது? 'வருகிற பித்துக் குளித்தனச் சனியன் சீக்கிரம் வந்து தொலைந்தால் தேவலை' போலிருந்தது அவனுக்கு! இப்போதைவிட அப்போது அதிக நிம்மதி கிட்டும் போலிருந்தது!

ஆனுல் அவன் என்ன ஆத்திரப்பட்டும், திட்டியும், சபித்தும் - அந்தப் பித்துக் கொளித்தனம் வருவதாயில்லை!

அவனுடைய ஆபீஸ் மானேஜர் ஷண்முகசுந்தரம் கொஞ்ச நாட்களாக அவன் ஒரு மாதிரியாக இருப்பதைக் கண்ணுற்று, ஒருநாள் அவன் தம் வீட்டுக்கு ஏதோ காரியமாக வந்திருந்தபோது அதுபற்றி அவனை விசாரித்தார். அவன் முதலில் ஒன்றுமில்லை என்று மழுப்பினுன். ஆனுல் அவர் விடவில்லை. ''இல்லை யப்பா! உன் தோற்றத்தில் தெளிவான மாறுதல் ஒன்றைக் காணுகிறேன். நீ சுறுசுறுப்பும், துடி துடிப்பும், ஆரோக்யமும் நிறைந்த பழைய ஜனுர்த்தனமாக இல்லை. உன் உடம்பிலோ மனத்திலோ ஏதோ கோளாறு ஏற்பட்டிருக்கிறது. கூச்சப் படாமல் என்னிடம் சொல். நான் ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்' என்று கனிவுடன் கூறினார்.

அந்த நல்ல மனிதனின் அனுதாபமும் பரிவும் நிறைந்த சொற்

கள், அவனை அதற்குமேலும் தன் கவலையின் காரணத்தை ஒளிக்க இயலாமற் செய்துவிட்டன. எல்லா விஷயங்களையும் ஆதியோடந்தமாகக் கக்கி விட்டான்.

"அட அசடே! யாரோ ஒருவர் ஏதோ உளறிவிட்டார் என்பதற்காக நீ இப்படி உன்னையே வதைத்துக் கொண்டிருக்கிறாயே! அவர் கூறியது உண்மையென்றே வைத்துக் கொண்டாலும் உன் மனைவிக்கும் அந்தப் பைத்தியக் கோளாறு ஏற்படக்போகிறது என்பது என்ன நிச்சயம்?" என்றார் ஷண்முகசுந்தரம்.

"அந்தச் சாந்திலால் கோஷ் என்ற அறிஞரின் கட்டுரையைப் பற்றிச் சொன்னேனே ஸார்!..."

"அறிஞராவது கத்தரிக்காயாவது! அவர் பொழுது போகாமல் எதையாவது பேத்தி வைத்தால் அதை வேதவாக்காக எடுத்துக் கொண்டு விடுவதா? இந்த 'அறிஞர்' களின் ஆராய்ச்சியெல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய். உலக நடப்புக்கும் அவற்றுக்கும் பெரும்பாலும் சம்பந்தமே இருப்பதில்லை..."

ஜனார்த்தனம் மௌனம் சாதித்தான். ஷண்முகசுந்தரம் தொடர்ந்தார்:–"உன் பீதி இன்னும் அகலவில்லையா? அப்படியானால் ஒன்று செய்வோம். இந்த நகரத்தின் பைத்திய ஆஸ்பத்திரி டாக்டர் தாமோதரன் எனக்கு ரொம்பவும் வேண்டியவர் அவர் பைத்திய சிகிச்சையில் நிபுணர். மனோதத்துவ முறைப்படியும் அநேக 'கேஸ்' களை குணப்படுத்தி யிருக்கிறார். அவரிடம் உன் மனைவியின் விஷயமாகக் கலந்தாலோசிப்போம். வரப்போகிற பைத்திய வியாதியை வராமலே தடுக்க ஏதாவது சிகிச்சை முறை இருக்கிறதா என்று கேட்போம்!"

"உங்கள் அபிப்பிராயப்படியே செய்வோம் ஸார்! உங்கள் உதவிக்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்!" என்றான் ஜனார்த்தனம். முன் கூட்டியே சிகிச்சை செய்து சுதாவின் பைத்தியத்தைத்

நமது கணபதி ஜோஸியர் வெளியிட்டுள்ள புத்தகங்கள்
சில காபிகளே கைவசமுள்ளன.
தேவையானவர்கள் :—

"பாலா"

13, ப்ருமணத் தெரு. : : சைதாப்பேட்டை
சென்னை 15லிருந்தும், ஹிகின்பாதம், சுதேசமித்திரன் புக்ஸ்டாலிலிருந்தும் பெறலாம் :

ஜோதிடம் விஞ்ஞானமே முதல் பாகம் Rs. 2/-00
மணமும் மணவாழ்க்கையும்
(விவாஹ பொருத்தம் பார்க்க) Rs. 2/-50

தபால் சார்ஜ் ப்ரத்யேகம்
மாலா கூபன் வைத்தனுப்பினால் தபால் சார்ஜ் இனும்.

மாடர்ன் அஸ்ட்ரலஜிகல் ரிஸர்ச் இன்ஸ்டிடியூட்
(மைலாப்பூர் பிராஞ்சில்)

நூதன மாணவர்களுக்கு ப்ரத்யேகமாக போதிக்க ஏற்பாடாயிருக்கிறது. நூதனமாக சேரலாம்.
பிரதி ஞாயிறு மாலை 3 மணி முதல் 5 மணி வரை
P. S. High Schoolல் நடைபெறும்
சேர விரும்புவர் அங்கேயே வரலாம்

தடுக்கக்கூடும் என்ற பிரஸ்தாபமே அவன் திகிலில் ஓரளவைக் குறைத்தது போலிருந்தது!

இரண்டு நாள் கழித்து ஆபீஸில் ஷண்முகசுந்தரம் அவனைக் கூப்பிட்டனுப்பி "நேற்று டாக்டர் தாமோதரனைச் சந்தித்து உன் விஷயமாகக் கேட்டேன், அப்பா! ஞாயிற்றுக்கிழமை யன்று காலையில் தம்மை வந்து பார்க்கச் சொன்னார் உன்னை. போய்விட்டுவா! சங்கோஜப் படாமல் தைரியமாகக் கேட்க வேண்டியதைக் கேள். தங்கமான மனுஷர் அவர்!" என்று கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை காலை அவ்வூர் பைத்திய ஆஸ்பத்திரியை ஒட்டியிருந்த டாக்டர் தாமோதரத்தின் வீட்டில் ஆஜராகித் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்ட ஜனார்த்தனத்தை அன்புடன் அமரச் செய்து விஷயத்தை விசாரித்தார் அவர். அவன் கடகடவென்று ஒப்பித்தான்.

"அந்தச் சாந்திலால் கோஷ் எழுதிய கட்டுரைதான் உங்கள் பீதியை அதிகரித்து, உங்கள் மனைவிக்குப் பைத்தியம் பிடிக்காமல் இருக்கப் போவதில்லை என்ற உறுதியான எண்ணத்தை உங்களுக்கு ஏற்படுத்திவிட்டது! இல்லையா?" என்று வினவினார் தாமோதரம்.

"ஆமாம் ஸார்!"

"நல்ல ஆள் ஐயா நீர்!" என்ற டாக்டர் கடகடவெனப் பெரிதாக நகைக்க ஆரம்பித்தவர் லேசில் ஓயவில்லை. பைத்திய ஆஸ்பத்திரியின் காற்று அவரிடமும் வீச ஆரம்பித்துவிட்டதோ என்று திகைத்தான் ஜனார்த்தனம்.

"யார்! சாந்திலால் கோஷா?" என்று மீண்டும் கேட்டுவிட்டு மறுபடியும் நகைக்கத் தொடங்கினார் டாக்டர்.

ஓட்டம் பிடிக்கலாமா? என்று ஜனார்த்தனம் யோசிக்கத் தொடங்கினான்.

சிரிப்பை நிறுத்திய தாமோதரம் "எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்றுதானே எண்ணுகிறீர்! அதெல்லாமில்லை. பயப்படாதீர். என் பின்னால் வாரும்!" என்று கூறிவிட்டுக் கிளம்பினார். குழப்பத்துடன் அவரைத் தொடர்ந்தான் ஜனார்த்தனம்.

அரை பர்லாங் தூரத்திலிருந்த பைத்திய ஆஸ்பத்திரியை அடைந்து அதன் வெராந்தா வழியாக நடந்த தாமோதரம் இடது புறமாகத் திரும்பி அங்கே வலப்புறத்திலிருந்த முதல் அறையின் எதிரே நின்றார். கம்பிக்கதவுகளுக்கப்பால் கைகளும், கால்களும் விலங்கால் பிணைக்கப்பட்டு ஒரு பைத்தியம் உட்கார்ந்திருந்தது.

"இதோபாரும், உம் நண்பரை!" என்றார் தாமோதரம்.

நண்பரா!...அந்தப் பைத்தியத்தைப் பார்த்து ஒன்றும் புரியாமல் திருதிருவென்று விழித்தான் ஜனார்த்தனம்!

"யார் பைத்தியம்! உங்கப்பா பைத்தியம், உங்கள் தாத்தா பைத்தியம்! உங்கள் பரம்பரையே பைத்யம்! நீ ஒன்றரைப் பைத்தியம்! அபாயகரமான பைத்தியம்!" என்று ஆங்கிலத்தில் பயங்கரமாகக் கூவிய அந்தப் பைத்தியத்தின் முகம் கொடூரமாக மாறியது. கண்கள் அக்கினிப் பிழம்புகளாயின.

ஜனார்த்தனம் நடுநடுங்கிப் போனான்.

"சரி, வாரும் போகலாம்!" என்று திரும்பி நடந்தார் டாக்டர்.

"அந்தப் பைத்தியத்தை என் நண்பர் என்றீர்களே ஸார்! எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே?" என்றான் ஜனார்த்தனம். அவர்கள் மீண்டும் டாக்டர் வீட்டை அடைந்ததும்.

"அவரைப் புரியவில்லையா உமக்கு! அவர்தான் சாந்திலால்

கோஷ்! அந்த அற்புத ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதியவர்!' என்றார் டாக்டர்.

"சாந்திலால் கோஷா!" என்று திடுக்கிட்ட ஜனார்த்தனம் மூர்ச்சை அடைந்து விடுவான் போலிருந்தது.

"சாட்சாத் அவரேதான் ஐயா! அவர் மாகாணத்தில் அவரை யாராலும் குணப்படுத்த இயலவில்லை. இங்கே அனுப்பியிருக்கிறார்கள். நானும் எவ்வளவோ தலை கீழாக நின்று பார்க்கிறேன். அந்த அபாயகரமான பைத்தியத்தைக் குணமாக்க முடியவில்லை..."

"பின்னே அவர் எப்படிக் கட்டுரை..." "எழுதினார், அதை எப்படிப் பிரசுரித்தார்கள் என்கிறீரா? அந்தக் காலத்திலேயே அவருக்கு உள்ளூரப் பைத்தியம் இருந்திருக்கிறது. நாம் பைத்தியமோ என்ற சந்தேகம் அவருக்கே ஏற்பட்டிருக்கிறது. அதனால் உந்தப் பட்டுத்தான் இந்த ஆராய்ச்சியில் அவர் இறங்கியிருக்கவேணும்! அவர் பிதற்றியதைக் கவனித்தீரல்லவா!.. அவர் பிரபலமான ஓர் குடும்பத்தைச் சேர்ந்தவர். எனவே அவர் கட்டுரையைப் பிரசுரித்து விட்டார்கள். அதோடு அவருக்குப் பைத்தியம் என்பதும் அப்போது வெளியாகவில்லை! அப்புறம் சில நாட்களுக்குள்ளாகவே அவர் அபாயகரமான பைத்தியமாய் மாறி விட்டார்!... அந்தப் பைத்தியத்தின் பிதற்றலைப் படித்துவிட்டு நீர் ஒரே முட்டாக பீதிக் கடலில் ஆழ்ந்து விட்டீர்! இதோ பாரும்! சாந்திலால் கோஷின் கட்டுரையைப் படித்தேன், அதன் விளைவாக என் மனைவிக்கு அநீதி இழைத்தேன் கிலி கொண்டு, என்பதை வெளியில் யாரிடமும் சொல்லாதீர்! எல்லாரும் சிரிப்பார்கள்...!'

ஜனார்த்தனம் வெட்கத்துடன் விழித்தான்!

டாக்டர் தொடர்ந்தார்.-"தேகம் சம்பந்தமான சில வியாதிகள்தான் பரம்பரையாக வரும். பைத்தியம் என்பது மனம் அல்லது மூளை சம்பந்தப்பட்டது. எனவே அது பரம்பரை வியாதி என்று சொல்வது அபத்தம். உங்கள் மனைவியின் தாத்தாவுக்கும், அவருடைய தாத்தாவுக்கும் சித்தப்பிரமை இருந்தது என்பது உண்மை என்று வைத்துக்கொண்டால் கூட அது அகஸ்மாத்தாக ஏற்பட்டது என்றே கொள்ளவேண்டும்! வீண் கலவரத்துக்கு இடம் கொடுத்து வாழ்க்கையை நரகமாக ஆக்கிக் கொள்ளாதீர் இனிமேலாவது!"

"ஸார், என் மனம் இப்போது தான் லேசாக இருக்கிறது! என்னைப்பற்றியிருந்த கிலிப் பிசாசு அடியோடு விட்டுவிட்டது! அந்தப் பைத்தியத்தின் உளறலை நம்பி எத்தனை வேதனைப்பட்டு விட்டேன்! என் மனைவிக்கும் எத்தகைய அநீதி செய்து விட்டேன்! என் வாழ்க்கை இன்பத்தை மீட்டுக் கொடுத்த புண்ணியாத்மா தாங்கள் தான்!" என்று கைகூப்பி வணங்கி விட்டு விடை பெற்றான் ஜனார்த்தனம்.

தாமோதரம் எண்ணமிட்டார். "அந்தச்சாந்திலால் கோஷ் யாரோ பாவம்! அவரை அவதூறு செய்து அநீதி இழைத்துவிட்டேன். ஆனால் நான் அந்த நாடகத்தை நிகழ்த்தியிராவிடில் இந்த ஜனார்த்தனம் தானே தன் மனைவிக்குப் பைத்தியம் பிடிக்க வைத்திருப்பான்! அவனுக்குப் பிடித்துவிட்டாலும் ஆச்சரியப்படுவதுக்கில்லை! அதைத்தடுக்க எனக்கு வேறு வழி அகப்படவில்லையே, என்ன செய்வது! ஆண்டவனே, என்னை மன்னித்தருளும்!'

விளக்கேற்றி வைத்தவர்

"நாதப்ரியை"

ஜம்புநாதன் நடுவாசலில் நின்று கொண்டிருந்தான். பத்து வயதுடைய அவன் பிள்ளை சாமிநாதன் அவன் அருகே நின்று கொண்டிருந்தான். ஜம்புநாதன் அவன் கையைப் பிடித்துக் கொண்டிருந்தான். அவன் அழுது கொண்டிருந்தான். அவ்விருவரையும் சுற்றி நாலைந்து பேர்—தெருவோடு போகிறவர்கள் கூடியிருந்தார்கள். அவர்கள் ஜம்புநாதனையும் திண்ணையிலே உட்கார்ந்திருந்த நாராயணசாமியையும் மாறி மாறிப் பார்த்தார்கள். இடை இடையே அவர்கள் பார்வை வீட்டின் உட்புறத்திற்கும் ஓடி மீண்டது. ஜம்புநாதன் நாராயணசாமி இருவருமே படபடப்பான தோற்றத்தில் இருந்தார்கள்.

"உங்கள் முடிவு இது தானா?" —ஜம்புநாதன் நாராயணசாமியை நோக்கிக் கேட்டான். அவர் சட்டென்று பதில் சொல்லவில்லை. நிதானமாக, "இதோ பார்; எத்தனை தடவை கேட்டாலும் என் பதில் மாறப் போவதில்லை. இரைச்சல் போட்டு ஊரைக் கூட்டவேண்டும் என்று உனக்கு ஆசை. நாலைந்து பேர் கூடிவிட்டார்கள். உன் இஷ்டம்" என்றார்.

அவர் இப்படிச் சொன்னதும் வழிப்போக்கர்கள் மெல்ல நழுவத் தொடங்கினார்கள். அதே சமயத்தில் உள்ளே நீலா தன் தாயின் மடியில் முகத்தைப் புதைத்துக் குமுறிக் கொண்டிருந்தாள். அருகே முப்பது நாளைய பூ—அவளுடைய பச்சிளங் குழந்தை—கதறிக் கொண்டிருந்தது. நீலாவின் தாய் காமாட்சி ஒரு கையால் மகளின் தலையை வருடிக் கொண்டும் மற்றொரு கையால் கதறும் குழந்தையைத் தட்டிக் கொடுத்துக் கொண்டும் இருந்தாள். நீலா குமுறலுக்கிடையே சொன்னாள். "அம்மா, வேண்டாம் அம்மா. ஊர் சிரிக்க இடம் கொடுப்பானேன்? என் தலைவிதியை மாற்றியமைக்க யாரால் முடியும்? வீணுக்கு நீங்கள் அஞ்ஞானப்பட வேண்டாம். நான் அவரோடு கிளம்பிப் போகிறேன்" என்றாள்.

காமாட்சி பல்லைக் கடித்தாள். "நீ பேசாமல் கிட நீலா. கிராமப் புறங்களிலே குடியானவர் தெருக்களிலே முன்னெல்லாம் இந்த மாதிரி சச்சரவுகள் நடைபெறுவதுண்டு. இப்பொழுது அங்கெல்லாம் கூட நாகரிகம் பரவிவிட்டது.. ஹூம்... அதற்கு என்ன செய்வது? நான் பண்ணின பூஜையின் பலன் இது... போகிறாளாம்!... முப்பது நாளைய பூவை வைத்துக்கொண்டு வீட்டிலும் உழைத்து சம்பாத்தியமும் செய்து... நினைத்துப் பார்த்தாலே பெற்ற வயிறு பதைக்கிறதே!" என்று பெருமூச்சு விட்டாள்.

"அது சரி அம்மா. அதோ பார், வாசலில் கூட்டத்தை!"

ஜம்புநாதன் உச்சஸ்தாயியில் சத்தம் போட்டான். "சரி; உங்கள் பதில் மாறாது என்றால் என் முடிவும் மாறாது! தெரிந்து கொள்ளுங்கள்!"—இப்படிக் கூறிய அவன் வராந்தாவில் இருந்த தன்னுடைய கைப்பெட்டியை எடுத்துக்கொண்டு சாமிநாதனைத் தரதரவென்று பிடித்து இழுத்துக்கொண்டு வேகமாக நடந்தான். அக்கம்பக்கம் உள்ளவர்கள் "சேசே! ஆனாலும் மோசம்! மூணு மாசமாய் வந்து உட்கார்ந்துகொண்டு, அட்டகாசம் செய்துகொண்டு, வண்ணமாய்த்

தின்றுவிட்டுக் கடைசியில் வீணுக்குச் சண்டை போட்டுக்கொண்டு போகிறதைப்பார்!'' என்று முணுமுணுத்தார்கள். நாராயணசாமிக்கு அது பொறுக்கவில்லை. 'ஒன்றும் சொல்லாதீர்கள்' என்ற பாவனையில் கையமர்த்தி ஜாடை செய்தார்.

சாமிநாதனின் அழுகுரல் தெருவெல்லாம் நிறைந்து வீட்டினுள் புகுந்து பெற்றவளின் காதிலே நாராசமாய்ப் பாய்ந்தது.

''ஐயோ! குழந்தை அழுகிறானே!'' என்று குலுங்கி அழுதாள் நீலா. திடீரென்று சாமிநாதன் அலறும் சத்தம் கேட்டது. நாராயணசாமி சட்டென்று எழுந்து எட்டிப் பார்த்தார். தகப்பனின் இழுப்புக்கு ஆற்றாமல் தடுமாறி விழுந்த சிறுவனின் முதுகிலே பளார் பளார் என்று அறைந்துகொண்டிருந்தான் ஜம்புநாதன். பிறகு அவனைத் தூக்கி நிறுத்தித் தரதரவென்று இழுத்துக்கொண்டு போனான். ''அட மிருகமே!'' என்று பெருமூச்சு விட்டார் நாராயணசாமி. ஜம்புநாதனும் சாமிநாதனும் தெருக்கோடி சென்று திரும்பி மறைந்ததும் ஆயாசத்துடன் உள்ளே வந்தார். அங்கே பெண்ணின் பரிதாப நிலையைக் கண்டதும் எதற்கும் அஞ்சாத அவர் நெஞ்சமும் கலங்கிவிட்டது. அவரைக் கண்ட நீலா மெல்லத் தலையைத் தூக்கினாள். கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அவரை நோக்கினாள். உதடுகள் துடிக்க, ''என்ன அப்பா? குழந்தை ஏன் அப்படிக் கதறினான்? அடித்தாரா?'' என்று வினவினாள்.

நாராயணசாமியால் பேசமுடியவில்லை. 'ஆம்' என்கிற பாவனையில் மெதுவாகத் தலையை அசைத்தார்.

'ஏன் அப்பா இந்த வீண் தொல்லை? இங்கேயே, நம் கண் முன்னேயே குழந்தைக்கு இந்தக் கதி என்றால் கண்காணாத இடத்திலே கொன்றே போட்டுவிடுவார். அம்மாதான் தெரியாமல் சொல்லுகிறாள் என்றால் உங்களுக்கும் ஏன் இந்தப் பிடிவாதம்? இவ்வளவு நாளும் நாலுபேர் மதிக்க மிகவும் கண்ணியமாகக் குடித்தனம்செய்துகொண்டிருந்தீர்கள். இன்று என்னால் அந்த நிலைக்குப் பங்கம் வந்து



விட்டது. இதை அடுத்து இன்னும் என்னென்ன நேருமோ?''

நாராயணசாமி மனம் கசிந்து பேசினர். 'அம்மா நீலா, உன் அம்மாவும் தெரியாத்தனமாக நடந்து கொள்ளவில்லை; நானும் வீண் பிடிவாதம் செய்யவில்லை. பத்து ஆண்டுகளுக்குப் பின் உண்டாகியிருக்கும் நீ நல்லபடியாகப் பெற்றுப் பிழைக்க வேண்டுமே என்று நாங்கள் பட்டுக்கொண்டிருந்த கவலை கொஞ்ச நஞ்சமல்ல. மெலிந்துபோன உன்னைப் பார்க்கும் தோறும் மனசிலே என்ன என்ன பயங்கரமான கற்பனைகள் தோன்றின தெரியுமா? ஏதோ ஆண்டவன் இம்மட்டும் எங்கள் வயிற்றிலே பாலை வார்த்தான். எங்கே ஓடிப் போகின்றன உன் குடியும், குடித்தனமும், உழைப்பும், மற்ற உபத்திரவங்களும்? ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பெண் தன் கணவனோடு வாழ வேண்டும் என்றுதான் நினைப்பார்களே தவிர, தம்பதிகளைப் பிரித்துப் பெண்ணைத் தங்களிடம் வைத்துக்கொண்டு அழகு பார்க்க ஆசைப்படமாட்டார்கள். இதற்கு முன் நாங்கள் ஏதாவது குறுக்கிட்டது உண்டா? எங்களுடைய இவ்விடத்து மதிப்போ மற்றதோ உன்னைவிட முக்கியமில்லை. மனசைத் திடப்படுத்திக்கொள். எல்லாவற்றையும் மறந்து விட்டு நிம்மதியாக இரு. உடம்பு கொஞ்சம் தேறினதும் நானே உன்னைக் கொண்டுபோய் விட்டு வருகிறேன்.

"அவர்...ஏற்றுக்கொள்ள வேண்டுமே!......''

"அடே! பெரிய இவர்! ஏற்றுக்கொள்ள மாட்டாராமே! இல்லாவிட்டால் போகட்டுமே! அங்கு போயும் நீ உழைத்துத் தானே உன்னையும் உன் மக்களையும் உன்னுடைய அழகான 'அவ'ரையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்? அதற்கு அவருடைய தயவு என்ன? எங்கிருந்தாலும் அதை நீ செய்து கொள்ளலாமே. வேலையைப் பார்ப்பாயா...... என்னவோ கிடந்து மாய்ந்து போகிறயே? உன் கல்யாணத்திற்குச் செலவு செய்த ஐயாயிரம் ரூபாயை அப்படியே வைத்திருந்தால் கூட நீ இதைவிட நன்றுகவே வாழ்ந்திருக்கலாம்''— இப்படி வெறுப்போடு வார்த்தைகளைக் கொட்டிவிட்டு அவர் அப்பாற் சென்றார். காமாட்சியும் அலுவல்களைக் கவனிக்க உள்ளே சென்றாள், நீலா குழந்தையை எடுத்துக் கொண்டு சுவரில் சாய்ந்தபடி உட்கார்ந்தாள்.

சுவரில் சாய்ந்தபோது அவள் முதுகில் ஓர் இடத்தில் சுறுக்கென்று வலித்தது. 'அப்பா! என்று சிணுங்கியபடி மெதுவாகத் தடவிவிட்டுக் கொண்டாள். கைபட்டதும் அந்த இடத்திலே. வலி அதிகரித்துத் தோற்றியது அதனல் மறைந்திருந்த அவள் அழுகை மறுபிறப்பு எடுத்துக் கொண்டது. அந்த வலிக்கு உரிய காரணம்...காலையில் நிகழ்ந்த சம்பவம்...அவள் மனக்கண் எதிரே மீண்டும் தோற்றிற்று.

★

காலையில் காப்பி சாப்பிட்டதும் ஜம்புநாதன் நீலாவை அழைத்து, 'உடனே ஊருக்குக் கிளம்பு' என்று கெடுபிடி செய்தான். 'திடீரென்று இது என்ன யோசனை?'' என்று கேட்டாள் நீலா.

''நேற்றிரவு உன் அப்பனும் உன் தம்பியும் என்னைப் பற்றி எவ்வளவு கேவலமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள் தெரியுமா? என்னல்— உன்னல்—அவர்களுக்கு ஏகப்பட்ட செலவாம்''—ஜம்புநாதன் படபடவென்று பேசிக்கொண்டே போனன் அவன். நிறுத்தியபோது அவள் சொன்னள்: ''குடும்பத்தில் உள்ள சிரமங்களைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். நானும்தான் கேட்டுக்கொண்டிருந்தேன். அதற்காக நீங்கள் ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும்?''

இப்படி அவள் கேட்டு வாய் மூடு முன் ஜம்புநாதன் விறுக்கென்று எழுந்தான். அவளைப் பிடித்து ஒரே உந்தலாக உந்தினன். வேகமாக அறை மூலையிலே போய் விழுந்த அவள் முதுகிலே அங்கிருந்த கல் உரல் வலுவாகத் தாக்கி விட்டது. "அப்பா!" என்று விலாவைப் பிடித்துக் கொண்டு அவள் சுருண்டு விழுந்து விட்டாள்.

பலமான சத்தம் கேட்டு,'என்ன, என்ன?' என்று வீட்டில் உள்ளவர்கள் பதறிக் கொண்டு ஓடிவந்தார்கள். ஜம்புநாதன் மிடுக்குடன்,' இங்கே பூகம்பம் ஒன்றும் நேர்ந்து விடவில்லை. புருஷனும் மனைவியும் தனித்துப்பேசிக் கொண்டிருக்கிற அறைக்குள் இப்படித்தான் நாகரிகமற்றமுறையில் ஓடி வருவார்களோ?" என்று சீறினன். நீலா தன் நிலையை மறைத்துக் கொள்ள அரும்பாடுபட்டாள். வந்தவர்கள் ஜம்புநாதனையோ, அவன் பேச்சையோ லட்சியம் செய்யவில்லை. நீலா படுகிற அவதியை உணர்ந்தார்கள். பரிந்தார்கள். பேச்சு முடிந்தது; பிடிவாதத்துடன் சிறுவனை அழைத்துக் கொண்டு போய்விட்டான். நீலா தன் விதியை நினைந்து அழுதுகொண்டு இருந்தாள்.

★

ஊருக்குச் சென்ற ஜம்புநாதன் நாளுக்கு ஒன்று வீதம் கடிதம் எழுதித் தள்ளிக்கொண்டே இருந்தான். நாலுபேர் பார்க்கக் கூடிய அஞ்சல் அட்டையில் மிக மட்டமான முறையில் என்ன என்னவோ எழுதிக் கொண்டிருந்தான். நாராயணசாமி குடும்பத்திற்கு மானக்குறைவு. நீலாவுக்கு அளவற்ற வேதனை. அவள் நாள் தவருமல் பெற்றோரை நச்சரித்த வண்ணம் இருந்தாள். ஓரளவு நாட்களும் ஓடிவிட்டதால் அவளுடைய நச்சுதலுக்கு ஆற்றமாட்டாமல் நாராயணசாமி அவளை அழைத்துக் கொண்டு போய் அவள் கணவரின் இருப்பிடத்தில் விட்டு வந்தார்.

எடுப்பிலே ஜம்புநாதன் நீலாவிடம் மிடுக்கோடு நடந்துகொண்டாலும் இரண்டு மூன்று நாள் சென்றதும் பழைய நிலைக்கு மாறிவிட்டான். ஆம்; குடும்ப வண்டி ஓட வேண்டுமே! அவள்தானே அதை ஓட்டவேண்டும்?

நீலா வாடிக்கைக்காரர்கள் வீட்டுக்குப்போய் வந்தாள். அந்த வீடுகளில் உள்ள குழந்தைகளுக்கு அவள் பாடம் சொல்லி, அதிலிருந்து கிடைக்கிற வருவாயைக் கொண்டுதான் பன்னிரண்டு ஆண்களாக அவள் குடும்பத்தை நடத்தி வந்தாள். அதற்கு முன் அவள் கணவனுக்குச் சிறிது சொத்து இருந்தது. அதை அவன் சூதாட்டத்தில் இழந்தான். பிறகு ஒரு வேலையில் அமர்ந்தான். கோய் ஒன்று அவனைப் பிடித்தது. அதனுல் வேலையும் போய்விட்டது. அதிலிருந்து குடும்பப் பொறுப்பு நீலாவின் தலையில் சுமந்தது.

ஜம்புநாதன் சொத்தை இழந்தான்; அவற்றுக்குப் பதிலாகக் கொடிய நோயும் குணக் குறைவும் அவனிடம் சேர்ந்தன. நீலா படித்தவள். இசையும், தையற்கலையும் பயின்றவள். குணத்தினுல் நிறைந்தவள். கணவனை உள்ளங்கையில் வைத்துத் தாங்கினுள் என்ருல் மிகை அன்று.

இப்பொழுதும் அதே நிலையில் தான் அவள் வீட்டு அலுவலையும் வெளி அலுவலையும் மேற்கொண்டாள். பச்சை உடம்பு. போதிய போஷணை இல்லை. அதையெல்லாம் அவள் லட்சியம் செய்யவில்லை. அதற்கு முக்கியமான காரணம் விலாப்புறத்திலே நிரந்தரமாக இருந்து கொண்டிருந்த வலி தான். சில சமயங்களில் வலி பொறுக்கமுடியாமல் அவள் மெள்ளக் கண்ணீர் வடித்தாள். யார் யாரோ வைத்தியர்களிடம், 'கீழே விழுந்து விட்டேன், விலாவில் அடி பட்டுவிட்டது' என்று சொல்லி ஏதேதோ மருந்து சாப்பிட்டுப் பார்த்தாள். பயன் ஒன்றும் இல்லை.

நாள் ஆக ஆக உபாதைத் அதிகரித்தது. ஒரு நாள் அவள் படுக்கையில் வீழ்ந்து விட்டாள்; அதைக் கண்டு ஜம்புநாதன் முணு முணுத்தான். அவள் படுத்துக் கிடந்த இடத்தின் பக்கமே எட்டிப் பார்க்காமல் பொழுதைப் போக்கி ஞன். சில நாட்களுக்குப் பின் ஒரு நாள் இரவு அடுத்த வீட்டுக் கிழவி வந்து நீலாவைப் பார்த்து அவள் நிலே உணர்ந்து அவனிடம் வந்து இடித்துக் கூறினள். அன் றிரவு அவன் அமைதியற்ற நிலேயில் வெகுநேரம் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். விடிகிற வேளேயில் பயங்கரமான கனவைக் கண்டான். அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தான். என்ன செய்யவேண்டும், என்ன செய்கி ரேம் என்பன புரியாமல் உள்ளுக் கும் வாசலுக்குமாக நடந்தான். தெருவிலே குறுக்கும் நெடுக்குமாக அலேந்தான். நீலாவிடம் வந்தான். அவள் நிலேயை உணர்ந்தான்; "எங்கே அடிபட்டது?எவ்விடத்தில் விழுந்தாய்? எப்பொழுது விழுந் தாய்?"—இப்படி முதல் முதலாகக் கேட்டான்.

அவள் ஏதோ சொன்னள். ஆனலும் பளிச்சென்று பழைய நிகழ்ச்சி அவன் மனத்திலே மின்ன விட்டது. 'ஐயோ! பாவி நானல் லவோ இந்நிலேக்குக் காரணம்! அன்று மூர்க்கத்தனமாக நான் பிடித்துத் தள்ளினபோது கல் உரல் தாக்கியதால் அல்லவா இவளுக்கு இந்நிலே? எலும்பிலே ஏதோ பழுது ஏறபட்டிருக்கிறது. உடனே கவ னிக்காததால் நிலேமை முற்றிவிட் டது. இனி இவள் பிழைப்பது கடினம். இரண்டு குழந்தைகளே யும் என் தலேயிலே கட்டிவிட்டு இவள் மாண்டு போகப் போகி ருள். கனவிலே கண்ட நிகழ்ச்சி கள் மெய்யாகப் போகின்றன!'—இப்படி எண்ணியதும் அவனுக்கு மூளேயே பிறழ்ந்து விட்டதுபோல் இருந்தது தலேமயிரைப் போட்டுப் பிய்த்துக்கொண்டான். வெறி பிடித்தவன்போல் தெருவுக்கு ஓடி ஞன்; குறிப்பு எதுவும் இல்லாமல் எங்கெங்கோ ஓடிக்கொண்டே இருந்தான்.

★

எங்கும் இருள் படர்ந்துவிட்டது. மேற்கே இருந்து வருகிற பெரிய சாலேயிலே கார் ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்தது. ரெயில் பாதை அங்கே குறுக்கிட்டது. கேட்டு அருகில் கார் வருகிற போது அதைச் செலுத்திக் கொண்டு வந்த பிரமுகரின் பார் வையில், சிறு திருப்பத்தில் சுழன்ற காரின் விளக்கொளி தண்டவாளத் திலே ஒரு மனித உருவம் கிடப் பதைக் காட்டிக் கொடுத்தது.

அவர் காரை நிறுத்தினர். கேட் டில் நுழைந்து ரெயில் பாதையை அடைந்தார். வடக்கே இருந்து தொலேவில் வந்து கொண்டிருந்த ரெயில் விளக்கொளி வெள்ளம் போலப் பாய்ந்து வந்து கொண்டி ருந்தது. 'கேட்கீப்பர்' கேட்டைச் சாற்றினன். பிரமுகர் நடையை ஓட்டமாக மாற்றிக்கொண்டார். இப்போது ரெயிலுக்கும் அவருக் கும் எதிர் எதிராக ஓட்டப் பந்தயம்!

அவர் முந்திக் கொண்டார். மனித உருவத்தைப் பற்றி இழுத் துக்கொண்டு இப்பால் வந்தார் ரெயில் அந்த இடத்தைக் கடந்து சென்றது. அந்த உருவம் நினே வோடு இல்லே என்பதை உணர்ந்த அவர், 'கேட்கீப்ப'ரைக் கூவி அழைத்துத் துணை சேர்த்துக் கொண்டார். உருவத்தை மெல் லக் காரில் கொண்டு வந்து கிடத்தி னர். கார் காற்ருய்ப் பறந்தது.

நினேவு வந்ததும் அந்த மனித னின் வாய்மொழியாக அந்தப் பிர முகர் கேட்டது, 'உத்தமியைக் கொன்ற பாவி நான்' என்ற சொற் கள்தான். பின்னர் அவர் அவனி டமிருந்து எல்லா விவரங்களேயும் அறிந்தார். அவனே அழைத்துக் கொண்டு அவன் வீட்டுக்குச் சென் ருர்.

அவன் ஜம்புநாதன்தான். தற்கொலை முயற்சி என்று முழுமையாகச் சொல்லி விடுவதற்கில்லை. உணர்ச்சியின் வேகம்!

நீலாவைச் சுற்றி அக்கம் பக்கம் உள்ளவர்கள் சூழ்ந்திருந்தார்கள். பிரமுகர் குழந்தைகளின் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்து விட்டு நீலாவையும், ஜம்புநாதனையும் தம் காரில் ஏற்றிக் கொண்டு கிளம்பினார். எதிர் வீட்டு மனிதர் பிரமுகரை அணுகி, "நீலாவின் தகப்பனுருக்குத் தந்தி கொடுத்திருக்கிறது. அவர் வந்தால்..." என்று இழுத்தார்.

"இந்த விலாசத்திற்கு வரச் சொல்லுங்கள்" என்று அச்சடித்த சீட்டு ஒன்றைக் கொடுத்துவிட்டுப் பிரமுகர் காரைச் செலுத்திக் கொண்டு சென்றார். சீட்டைப் பார்த்த எதிர் வீட்டு நண்பர், "ஆ... சர்ஜன் சங்கர்!" என்று வாயைப் பிளந்தார். அடுத்து "இனிக் கவலையில்லை. ஏழைப் பெண் நீலா பிழைத்துக்கொள்வாள்" என்றார். அருகே நின்ற அடுத்த வீட்டு அம்மாள், "ஐயோ பாவம்! அந்தப் பாவிக்காக இல்லாவிட்டாலும் இந்தக் குழந்தைகளுக்காகவாவது நீலா பிழைத்துக் கொள்ளத்தான் வேண்டும்" என்றாள்.

★

மூன்றும் நாள் காலையில் நீலாவின் பெற்றோர்கள் வந்தார்கள். விவரம் அறிந்து சங்கரின் 'நர்ஸிங் ஹோம்'முக்கு ஓடினார்கள். நாராயணசாமியைப் பார்த்ததும் சங்கர், "யார்? யார்? நாச்சு அண்ணுவா? ஏது, அபூர்வமாக?" என்று வரவேற்றார்.

"சங்கரா, நீலா எப்படி இருக்கிறாள்?"—நாராயணசாமி கண்கள் பொலபொலவென்று கண்ணீரைச் சிந்தின.

"நீலா... அந்தப் பெண்..."

"என் பெண்; உன் ஒன்றுவிட்ட அண்ணு பெண், உன் பெண்ணேதான்!"

"அப்படியா?... கவலை இல்லை. பிழைத்துக் கொள்வாள். ஆபரேஷன் செய்திருக்கிறேன் உள்ளே வாருங்கள்."

எல்லாரும் உள்ளே சென்றார்கள். நீலா நினைவற்றுக் கிடந்தாள். அவள் பெற்றோர் குலுங்கிக் குலுங்கி அழுதனர். ஜம்புநாதன் தெருப்புறத்திலிருந்து ஓட்டமாக ஓடிவந்து அவர்கள் காலிலே விழுந்து கதறினான். சங்கர் அனைவரையும் அப்புறப்படுத்திக் கொண்டு சென்றார்.

★

நீலா பிழைத்தெழுந்தாள். சங்கர் அவர்களுக்கு மட்டும் உயிர் அளிக்கவில்லை. ஜம்புநாதனையும் உயிர்ப்பித்துவிட்டார். அவனுடைய நோயை இருந்த இடம் தெரியாமல் பறந்தோடச் செய்துவிட்டார். அவனிடம் ஊறிப்போயிருந்த துர்க்குணங்கள் தாமாகவே மறைந்து ஒழிந்தன. சங்கர் அவனைத் தம்மிடமே வேலைக்கு அமர்த்திக் கொண்டார் 'நர்ஸிங் ஹோம்' 'அவுட் ஹவுஸில்' ஜம்புநாதன்—நீலா தம்பதிகள் இரு குழந்தைகளுடன் குதூகல வாழ்க்கை நடத்தத் தொடங்கினர்.

அடுத்த முறை அங்கே வந்த நீலாவின் பெற்றோர்கள் சங்கர் ஏற்றி வைத்த விளக்கு அந்தக் குடும்பத்திலே சுடர்விட்டு ஒளிர்வதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியில் மூழ்கினார்கள். 'சங்கர் மேன் மேலும் அமோகமாக வாழவேண்டும்' என்று நாராயணசாமி மனமார, வாயார வாழ்த்தினர்.

★

வாசகர்களே!

உங்கள் வாழ்க்கையின் சமீப எதிர்காலத்தைப் பற்றி இரண்டு கேள்விகளுக்கு நமது "கணபதி" ஜோஸ்யர் இனாமாகப் பதில் தருகிறார்.

இதோ, மேலிருக்கும் "ஸ்ரீ மகா கணபதி" மிகவும் சக்தி வாய்ந்த மூர்த்தி. உச்சிஷ்ட மகா கணபதியாகும். இவரை ஆராதித்து உபாஸனை செய்துவரும் நமது "கணபதி ஜோஸ்ய"ரின் வாக்கு மிகவும் பலிதமாகவே இருக்கிறதென்று அனைவரும் அனுபவத்தில்கூறுகிறார்கள் ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ள வாசகர்கள் மட்டு கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து தனித்தாளில் கேள்விகளையும் எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம். ஜாதகம் இருந்தால் அவசியம் அனுப்பி வைக்கவும். கூப்பன் இல்லாது வரும் கேள்விகள் கவனிக்கப்படமாட்டா. அந்தந்த மாதக் கூப்பனை பூர்த்தி செய்து பிரதி மாதம் 30-ம் தேதிக்குள் அனுப்பிவிடவேண்டும். பின்னர்வரும் கூப்பன் கவனிக்கப்படமாட்டாது.

—ஆசிரியர்.

இங்கே கூப்பனைக் கத்தரிக்கவும்.

1960 செப்டம்பர் மாதக் கூப்பன்

என் சமீப, எதிர் காலத்திய 2 கேள்விகளைத் தனித்தாளில் எழுதி இத்துடன் வைத்துள்ளேன்.

என் பெயர்..

தற்போதைய விலாசம்..

உத்தியோகம்...

கேள்விகள் எழுதின தேதி..

,, ,, நேரம்...—.......................

நான் விரும்பும் புஷ்பம்...

108-க்குள் நான் கூறும் எண்..

(நக்ஷத்திரம் தெரிந்தால்)...

என் பிறந்த நக்ஷத்திரம்..

என் தற்போதைய வயது..

கூப்பன் அனுப்ப வேண்டிய விலாசம்:

கணபதி ஜோஸ்யர், c/o "மாலா"

சதர்ன் அவின்யு, ஆழ்வார்பேட்டை, மதராஸ்-18.

சார்வரி ஸு புரட்டாசி மாத ராசி பலன்

(கணபதி ஜோஸ்யர்: 13. ப்ராம்மணத் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15)

மேஷ ராசி: அசுவதி, பரணி, கார்த்திகை 1ம் பாதம் தேக சுகம் திருப்திகரமாயிருக்கும். நிம்மதி ஏற்பட்டுக் கொண்டே வரும். தெய்வ வணக்கமும் அதிகமாகும். இதுவரை உத்யோக உயர்வின்றி யிருந்த வர்களுக்கு இம்மாதம் மேன்மையும், அதிகச் சம்பளமும், நன்மையும் மேலதிகாரி நட்பும், ஆதரவும் எதிர்ப்பார்க்கலாம். தொழில் புரிபவர் களுக்கு, சேவகர்களின் ஒத்துழைப்பும் தனவசதியுமிருக்கும். வ்யாபாரி களுக்கு. கூட்டாளி மூலம் ஸௌகர்யம். பண நெருக்கடி குறைவு சுறு சுறுப்பாக கொள்முதல் நடைபெறும். நூதன கூட்டாளி சேர விரும் பினால், மாத ஆரம்பத்தில் யத்தனித்தால், உடனே முயற்சியில் வெற்றி காணலாம். ஸ்பெகுலேஷன், லாட்டரி பந்தயம், பிரைஸ் பாண்டு மூலம் தசா புக்தி மிக சுபமாக யிருப்பவர்களுக்கு லாப முண்டு. விவாஹம் இனி தை மாதமே நடைபெறும். இம்மாதம் நடைபெறாது: ஆனால் வரனை தீர்மானிக்கலாம் வீடு கட்டி முடியவும் தாமத முண்டு. வாகனம் பெற மாத ஆரம்பமே நன்று. மாத முடிவில் உதாரச்சிலவு உற்றார் உறவினர் கூட மகிழ்ச்சியும் அதிகமாக, சுபவ்ரயமும் இம்மாதமதிகம். எனினும் லாபம் அதற்குமேல் இருக்கும். தம்பி, தனது புத்ரர், மனைவி மூவருக்கும் நல்லதல்ல. தாய், பிதா இருவருக்குமே நற்பலன் நடக்கும்.

ரிஷப ராசி: கார்த்திகை 2, 3. 4 பாதங்கள் ரோஹிணி மிருக சிரிஷம் 1, 2 பாதங்கள். மாத ஆரம்பத்தில் தேக சுகம் திருப்திகரமாக யிராவிட்டாலும். 10 தேதிக்கப்பால் ஆரோக்யத்துடனும் உற்சாகத்துட னும் பணி புரிவீர். மாத முடிவில் யத்தன பலிதமுண்டு. தாமத மிருப் பின் மனந்தளர வேண்டாம். தாராளச்சிலவு அதிகமாக செய்ய நேரும். உத்யோகத்தில் உயர்வோ, நூதனமாக உத்யோகம் கிடைக்கவோ மாத மத்தியே நன்று. அரசாங்க மூலம் நற்செய்தி பெறவும், லைசென்ஸ் பெறவும் அக்டோபர் முதல் தேதியில் எதிர்பாக்கலாம். விரோதம் மறையவும். நட்பேற்பட்டு நன்மையடையவும் உற்றார் உறவினர் கூடவும் வாழ்க்கையில் மகிழ்ச்சியுடனிருக்க, இனியே ஆரம்ப மாகும். தொழில் மூலம் இனி கஷ்ட நஷ்டங்களிராது. விவாஹ விஷயங்கள் கைகூடி வரும். வியாபாரத்தில் அதிக தன வசதி யேற்படவோ, தாமதத்தால் வேதனையளித்து நடைபெருதோ எனயோசனை செய்தவைகள் எல்லாம் இனி பலிதமாகும். ஸ்பெகுலேஷன், லாட்டரி, பந்தயம், பிரைஸ் பாண்டு மூலம் திடீரென லாபமிருப்பது கடினம். அடுத்த ஆண்டில் எதிர்பார்க்க லாம். ஏஜென்ஸி காண்ட்ராக்ட் எடுக்கலாம். நாளடைவில் வலுவடை யும். சாகுபடி மூலம் சில ஆண்டுகளாக லாபமில்லாதிருந்தாலும், இனி நன்றே. விவகாரம் நூதனமாக ஏற்பட்டாலும், சீக்ரம் ஜயமும், நிம்மதி யும் ஏற்படும். அஷ்டமச்சனி கொடுமை நீங்க ஆரம்பம். பகவதி பூஜையோ. லக்ஷ்மி ஸ்தோத்ரமோ படித்து வாருங்கள். தேவீ திருவருள் திருப்திகரமாக உண்டாகும். தம்பிக்கு நன்று. மற்ற உறவினர்களுக்கு இம்மாதம் நல்லதல்ல.

மிதுன ராசி: மிருக சிரிஷம் 3, 4 பாதங்கள். ஜன்மச் செவ்வாய் 7ல் குரு சனி, 4ல் சூர்யன் முதலியன இருக்க பல கிரகங்கள் ஸ்குயர் செய்வதால், யத்தன பலிதக் குறைவு. ஆதலால் மன வேதனை. இஷ்ட

மில்லாத காரியங்களை செய்ய வேண்டிய சூழ் நிலை சிலருக்கு இடப் பெயர்ச்சி, உத்யோகத்தில் மேலதிகாரியின் நட்பு குறைவு. ஒத்துழைப்பும் போதாது. வ்யாபாரம் மந்தம். கூட்டாளி வெளியூர் செல்வது அனுவசிய சிலவு. ஸ்பெகுலேஷன் லாட்டரி புந்தயம் மூலம் வீண் வ்ரயம் ஏஜென்ஸி காண்ட்ராக்ட் எடுப்பின், தனது இஷ்டத்தை பூர்த்தி செய்ய முடியாதபடி, தாமதமும் எதிர்ப்பும் இருக்கும். விவாஹ விஷயங்கள் சென்ற மாதத்தில் நெருங்கி வந்தாற்போல் தோன்றினவெல்லாம், ஏமாற்றத்தையளிக்கும். விவகாரம் நீடிக்கவோ, நூதனமாக எடுக்கவோ நேரும். திடீரென விரோத மேற்படும். அதிக நட்பு, அதிக பகை என அடிக்கடி கூறுவது இம்மாதம் உண்மையென விளங்கும். அரசாங்க மூலம் நன்மையடைய வேண்டுமானால், மேலும் இரண்டு மாதங்கள் மனந்தளராமல் முயற்சிக்கவும். வீடு கட்ட கடன் வாங்கி ஏற்பாடு செய் தால் அதன் மூலம் மார்கழி முதல் ஸ்ரமமதிகமாகும். அஷ்டமச் சனி அருகிலேயே அணுகுகிறது என்பதை அறிந்து, ஆண்டவன் அருளை அடைய தெய்வ வணக்கம் மிக அவசியம் என்று உறுதியுடன் வணங்கி வரவும்.

கடக ராசி: புனர்பூசம் 4-ம்பாதம், பூசம் ஆயில்யம் அடை மழை பெய்யும் பொழுது, சற்று மழை நிற்க; வெய்யிலும் அடிக்க எப்படி தற்கா லிகமாக தெய்வானுகூல மேற்படுகிறதென பெருமூச்சு விடுவோமோ, அவ்விதமே, எதிர்ப்பும் ஏமாற்றமும் தாமதமும் தடையுமே யிருந்து மனதைக் குழப்பினவெல்லாம், கைகூடி வர, யத்தன பலிதமிருக்க, வசதி யுண்டாக, தைர்யமேற்படும். குருபலம் சீக்ரம் வருமென எண்ணி மேலும் முயற்சி செய்து வரவும். அஷ்டமக்கேதுவும், 6ல் குருவும், வ்ரயத்தில் அங்காரகனுமிருப்பது நன்றன்று என்றாலும், இம்மாதம் ஓரளவு சுப பலனும், தனவசதி, மன நிம்மதியும் உண்டு, டெம்பரரி ப்ரமோஷன் எதிர்ப்பார்க்கலாம். ஊர் மாறலாம். அதிகாரியும் மாற லாம் ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி ப்ரைஸ் மூலம் அடுத்த ஆண்டே நன்று. அரசாங்க மூலம் இம்மாதம் நற்செய்தி கிடைக்கக் கூடும். நண்பர் உதவியும் உற்றார் உறவினர் சேர்க்கையும், முடங்கிய தனம் பெறவும், திடீரென வீடு விலைக்கு வாங்கவும் நேரலாம். வீட்டிலுள்ள 200 மூட்டைபூச்சி, ஈ; கொசு, எலி கரப்பு எறும்பு, பூனை, நாய் முதலியன தைமாதம் வரை உபத்ரவத்தையளிக்கும். தம்பிக்கு தேக சுகக்குறைவு. தாய் க்ஷேத்ராடனம் செய்ய, புத்ரர்களுக்கே மிக நன்று.

ஸிம்ம ராசி. மகம் பூரம் உத்ரம் 1ம் பாதம் தேக சுகம் ஓரளவு திருப்திகரமாயிருக்கும். அலைச்சலும், பல சிறுப்ரயாணங்களும் அடிக்கடி செய்ய நேரும். நன்மையும் மேன்மையும், கைக்குக்கிட்டி வாய்க்கு இன்னும் கிட்டவில்லை என்று சொல்வது போல், சீக்ரம் நற்பலன் உண் டென்று அறியலாமே யன்றி, அனுபவிக்க முடியாது. தன வசதி ஏற் பட்டுக் கொண்டு வரும் முடங்கின தனத்தில் ஓர் பகுதியைத் திரும்ப பெறலாகும், உத்யோகத்தில் உயர்விற்கு ஏற்பாடாகும். தொழில் நடத்த யத்தனம் பலிக்கும் வ்யாபாரம் வலுவடையும் லாபம் திருப்திகர மாக கிடைக்கும். எஸ்டேட்டில் நூதன வேலை கிடைக்கலாம். இல்லை யேல் போக்குவரத்து சாதனத்தில் முயற்சிக்கவும் அரசாங்க மூலம் நற் செய்தி பரீக்ஷை தேறும். விவாஹம் தீர்மானிக்கப்படலாம் உற்றார் உறவினர் நண்பர்கள் அடிக்கடி விஜயம் செய்யவும், தான் அவர்கள் இடத்திற்கு போய் வரவும் நேரும். க்ஷேத்ராடனமிருக்கும். ஏஜென்ஸி காண்ராக்ட் இனி நன்று. ஸ்பெகுலேஷன், லாட்டரி, பந்தயம் ப்ரைஸ் பாண்டு மூலம் லாபம்! உற்சாகம். தம்பிக்கு இடப்பெயர்ச்சி மாதாவிற்கு

அதிக சுகம் நிம்மதி. புத்ரர்களுக்கு நூதன உத்யோகம் மனைவிக்கு நோய் இடையூறு இருக்கும்.

கன்னிராசி : உத்ரம் 2, 3, 4 பாதங்கள் ஹஸ்தம் சித்திரை 1, 2, பாதங்கள் தேகசுகம் பாதிக்கப்படும். வைத்யசாலை செல்ல நேரும். வரவிற்குமேல் சிலவு கட்டுக் கடங்காமலிருக்கும். மேலும் தனம் முடங்கும். கடனேறும், கஷ்டங்களும் சற்று அதிகமாகவே யிருந்து வரும். உறவினர்களும், நண்பர்களும் நிம்மதியைக் கெடுக்க, அவர்கள் மூலமே ப்ரதிகூலமே யிருக்கும். சென்ற மாதத்தைவிட இம் மாதம் வ்ரயமதிகம் உத்யோகத்தில் மாறுதலிருக்கலாம் அல்லது அதிக உழைப்பும், ஸ்ரமமுமிருக்க, போதுமான வரவு இராது. மாதா உதவியும், வீடுவாங்க வசதியும், வாகன ப்ருப்தியும் ஏற்படலாம். தொழில் மூலம் தனம் முடங்கும், வயாபாரம், கடன் வாங்குவோர் மூலம் அதிகம் ரொக்க வ்யாபாரம் குறைவு ஸ்பெகுலேஷன் லாட்டரி ப்ரைஸ் பாண்டு முதலியன இம்மாதம் பலனளிக்காது. ஏஜென்ஸி காண்ட்ராக்ட் எடுக்கலாம் வேலை கற்றுக்கொள்ள ப்ரயாணம் செய்யலாம். விவாஹம் தீர்மானிக்க தாமதம் விவகாரம் நீடிக்க நேரும். தம்பிக்கு மிக நன்று புத்ரர்கள் வெளிநாடு செல்லவும், மனைவி ப்ரயாணம் செய்யவும் பிதா கஷ்டம் நீங்கவும் எதிர் பார்க்கலாம்.

துலா ராசி : சித்திரை 3, 4 பாதங்கள் ஸ்வாதி, விசாகம் 1, 2, 3 பாதங்கள். சில மாதங்கள் சிலவினங்களதிகமாகும். உழைப்பும் அலைச்சலும் மேலிடவே, தேகசுகமும் சற்று பாதிக்கப்படும் சில நண்பர்கள் தீங்கெண்ணி, ப்ரதிகூலமாக, பணிவிடையாற்றுவார். உத்யோகத்தில் கிடைத்த மேற்பதவியும் தற்காலீகமாக இராது மேலதிகாரி மாற, ஆதரவு குறையும். அரசாங்க மூலம் இப்பொழுது யாதொரு நற்செய்தியும் எதிர்பார்க்கலாகாது. தொழில் முன்னேற முயற்சிசெய்து கொண்டே வரவும் சீக்ரம் பலிதத்தையும் லாபத்தையும் பெற முடியாது தாமதமுண்டு வ்யாபாரம் மூலம் கடன் அதிகம். நெருக்கடியதிகமிருக்கும். ஏஜென்ஸி காண்ராக்ட் எல்லாம் சுப பலனளிக்க தடைபலவுண்டு மனம் தளரவேண்டாம் படாடோபம், தெய்வ வணக்கம், க்ஷேத்ராடனம் மூலம் சிலவுசெய்து கொண்டேயிருப்பீர் விவாஹம் தீர்மானிப்பது ஸ்ரமம் விவகாரம் புதிதாகவும் துவக்க நேரும். நயத்துடனிருந்து ஜயம் பெற முயற்சிக்கவும் வீடு வாகனம் மூலம் சிலவு வழக்கத்திற்குமேல் அதிகம். வெளியூர் சென்ற உறவினர் திரும்ப வரலாகும் தம்பிக்கும் தாய்க்கும் சுபபலன் இதரர்களுக்கு மனக்குழப்பம் எதிர்ப்பு, ஏமாற்றம் கலகம் இருக்கலாம். தக்ஷிணாமூர்த்தியை வணங்கிவரின் நிம்மதி யுண்டாகும்.

விருச்சிக ராசி : விசாகம் 4ம் பாதம் அனுஷம் கேட்டை தேகசுகம் சற்று ஸெகர்யமாகும் தனவசதியும் ஓரளவு ஏற்பட்டுக் கொண்டுவரும் முடங்கிய தனத்தில் ஒரு பாகம் திரும்ப பெறலாம் அரசாங்க மூலம் நற்செய்தி கிடைக்கும். உத்யோகத்தில் தற்காலீகமாக உயர்வு உண்டாகும் மேலதிகாரியின் நட்பும் ஆதரவும் இருக்கும். வியாபாரத்தில் முன்னேற்றமிருக்க தன வசதியும் கூட்டாளியின் உதவியும் பதவியில் உள்ளோர் மூலம் ஸெகர்யமும் இருக்கும். தொழில் விருத்தியடைய, சேவகர்கள் ஒத்துழைப்பு அதிகமாகும். லைசென்ஸ் முதலியன பெறலாம் ஏஜென்ஸி ஸ்பெகுலேஷன், பந்தயம் ப்ரைஸ் பாண்டு மூலம் ஓரளவு லாபமிருக்கக் கூடும். விவாஹ விஷயங்கள் தீர்மானிக்கப்படலாம். சில மாதங்கள் கழிந்த பின்னே நடைபெறும் விவகாரத்தில் வெற்றி யேற்படினும், அப்பீல் செய்வதால் மேலும் துடரும். வீடுகட்டி பூர்த்தி செய்ய நன்று.

நூதன தொழில் ஆரம்பிக்கவும் நன்று. பலர் வரவும், தம்பி வெளியூர் செல்லவும், மாதா தேக சுகக்குறைவும், புத்ரர்கள் உத்யோகம் மாறி, ப்ரயாணம் செய்யவும் நேருவதால் சிலவினங்களுமதிகம். ஏழரை ஆண்டு சனி சீக்ரம் முடிவடையும். கடவுள் அருளைப் பெறவும், தீங்கின்றி சுப பலனடையவும், முருகனை வணங்கவும்.

தனுர் ராசி : மூலம் பூராடம் உத்ராடம் 1ம் பாதம். தேக சுகமேற்பட்டுக் கொண்டு வரும். நீண்ட நோயால் வருந்துபவர் சுகாதாரத்தை கவனித்து எச்சரிக்கையுடனிருந்து, ஸ்ரமத்தை குறைத்துக் கொள்வார். தனவசதி சற்று ஏற்பட, பண நெருக்கடி ஓரளவு குறையும். கடன்காரர் தொல்லை இராது உத்யோகத்தில் இருந்த கஷ்டங்கள் குறையும். தொழில் பலர் உதவி கிடைக்கவே, முன்னேற்றம் எதிர்பார்க்கலாம். சிலருக்கு பரீக்ஷைதேற, மேல் உத்யோகம் மாத முடிவில் கிடைக்கும். ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி ப்ரைஸ் பாண்டு முதலியன மூலம் இம்மாதம் நற்பலனுண்டாவது ஸ்ரமம் விவாஹ விஷயங்கள் தாமதப்படும். திடீரென தீர்மானமாகும்போல் தோன்றி நின்றுவிடும் மனைவாங்க அட்வான்ஸ் கொடுத்திருப்பின், திரும்ப அட்வான்ஸை வாங்கி, ஒப்பந்தத்தை ரத்து செய்ய நேரும் விவகாரங்கள நீடிக்கும் தம்பிக்கு நோயால் ஸ்ரமமும், தாய்க்கு எதிர்ப்பும், புத்ரர்களுக்கு உத்யோக உயர்வும், மனைவிக்கு சிறு புடுங்கல்களும் வேதனையுமிருக்க, பிதாவிற்கு மிக சுப பலன்.

மகர ராசி : உத்ராடம் 2, 3. 4 பாதங்கள், திருவோணம்அவிட்டம் 1,2 பாதங்கள் தாமதமொழியும் வேதனைகுறையும் கஷ்டம் மறையும்தேக சுகமேற்பட்டுக்கொண்டே வரும். முயற்சிகளில் ஒவ்வொன்றாக பலிதம் உண்டாகும். பண நெருக்கடியிருப்பினும், ஓரளவு தன வசதி உண்டாகும் சமாளிக்கக்கூடும் உத்யோகத்தில் உயர்வுஇராது ஆனால்மற்றவர் வேலையையும் தானே செய்ய நேரும். அலைச்சலும், யத்தன்பலிதமிருக்க வேண்டுமே யெனும் கவலையும், தாமதமும், சிறிது சிறிதாக சுபபலன் பெறவும் நேரும். தொழில் மூலம் இனி லாப மேற்பட ஆரம்பம். வ்யாபாரம் முன்னேற கூட்டாளியை சேர்த்துக் கொள்வது நன்று பங்குனி மாதம் முதல் நற்பலன் நடைபெறும். ஸ்பெகுலெஷன் லாட்டரி பந்தயம் ப்ரைஸ் பாண்டு மூலம் சில மாதங்கள் கழித்தே லாப முண்டாகும். ஏஜென்ஸி காண்ட்ராக்ட் கமிஷன் மூலம் சிறிதளவே லாபம் கிடைக்கும், விவாஹம் தீர்மானிக்க தாமதம். விவகாரம் நீடிக்கும் அல்லது எதிர்ப்பும் ஏமாற்றமும் இருக்கும் மனை, வீடு வாங்க முயற்சிக்கலாம். ஆனால் கார்த்திகை மாதம் கைகூடும் 7ம் ஆண்டு சனி ஆரம்பித்ததால் சிலவு அதிகமென்றாலும் மேலும் இரண்டு மாதங்கள் தீமை குறைவு.

கும்ப ராசி . அவிட்டம 3, 4 பாதங்கள் சதயம் பூரட்டாதி 1, 2, 3 பாதங்கள் தேக சுகம் பாதிக்கப்படும். கடன் தொல்லை குறையும். முடங்கிய தனத்தையும் பெறலாம். கடனையும் அடைக்கலாம். அரசாங்க மூலம் நற்செய்தி பெறவும் லைசென்ஸ் முதலியன பெற்று சீக்ரம் நூதன தொழில் புரிய வசதியேற்படும். உத்யோகத்தில் பொறுப்பு அதிகமாகவும், மேலதிகாரி நட்பு இருக்கவும், எதிர்பார்க்கலாம். ஆனால் சம்பளம் ஏற சில மாதங்களாக வேண்டும் வ்யாபாரத்தில் கூட்டாளிமூலம் சிலவு அதிகமாக ஏற்படினும், அவரது முயற்சியால் லாபம் மேலும் அதிகமாக இருக்கும், வரிமூலம் இருந்த சில கஷ்டங்கள் மறையும் விவாஹ விஷயமாக வீண் அலைச்சல் விவகாரம் நீடிக்கவும் ஜயமின்றி மன வேதனையளிக்கவும் நேரும். ஸ்பெகுலேஷன் பந்தயம் லாட்டரி ப்ரைஸ் பாண்டு மூலம் அடுத்த இரண்டு மாதங்களில் எதிர் பார்க்கலாம். மனை

முதலியன வாங்க செய்யும். ஏற்பாடுகள் பலிக்காது. தம்பி பிதா இருவர் களுக்கேயத்தன பலிதம், மதிப்பு, மேன்மை, தன லாபம் இருக்கும் மற்றவர்களுக்கு காரியசித்தி யேற்பட தாமதமிருக்கும்.

மீன ராசி. பூரட்டாதி 4ம் பாதம் உத்ரட்டாதி ரேவதி தேகசுகம் ஓரளவு திருப்திகரமாயிராது. யத்தனம் பலிக்கவும், எண்ணத்தை பூர்த்தி செய்யவும் தாமதம் இருக்கும். சிறு இடையூறுகள் இருக்கலாம் சிறு ப்ரயாணங்கள் செய்யும் காலத்தில் எதிர்பாராமல் தன கஷ்டம் ஏற்படக்கூடும், தம்பிக்கும் அயலாருக்கும் தன உதவி செய்வதால் பணம் முடங்கும் முடங்கிய தனம் பெற தைமாதம் வரவேண்டும். உற்யோகத்தில் இடப்பெயர்ச்சி சிலருக்கு இருக்க சிலர் ரஜாவில் போக நேரும் தொழில் விருத்தியடைய, சில நபர்களைக்கண்டு ஒப்பந்தம் செய்யவும் ப்ரயாணம் செய்ய நேரும் வ்யாபாரம் ஓரளவு மந்தமாகவே யிருக்கும் ஸ்பெகுலேஷன், பந்தயம் லாட்டரி ப்ரைஸ் பாண்டு மூலம் 1961ல் எதிர்பார்க்கலாம். கனகதாரா ஸ்தோத்ரம் படிக்கவும். ஏஜென்ஸி காண்ட்ராக்ட் முதலியன எடுக்கலாம். நற்பலனை நான்கு மாதங்கள் எதிர்பார்க்கலாகாது. விவாஹ விஷயமாக ஏற்பாடுகள் மெதுவாகவே செய்து வரலாம் விவகாரம் துவக்கினாலும். அனுவசியமாக இழுத்துக் கொண்டே போகும். வரிமூலம் சற்று சிரமங்களிருக்கக்கூடும். மனைவாங்கினாலும் வீடுகட்ட ஆரம்பிக்க தைமாதமே நன்று. தம்பிக்கும் மாதாவிற்கும் நல்லதல்ல. புத்ரர்களுக்கு நன்மையும் மேன்மையுமுண்டு. மனைவிக்கு தேக சுகம் குன்றும் பிதாவிற்கு தற்காலீகமாக சுபபலன் நடைபெறும்.

இன்றே படியுங்கள் !

- மணமும் -
மணவாழ்க்கையும்

என்ற ஜோதிடப் புத்தகம்

★

விவரங்கட்கு.

கணபதி ஜோஸ்யர்,

ப்ராமணத் தெரு, சென்னை-15.

கேள்விகளுக்குப் பதில்

கணபதி ஜோஸ்யர்

[ரூ 1/- அனுப்பி பதில் கோருபவர்கள் கேள்விகளையும் ருபாயையும் கூபனையும் சேர்த்து, ஜோஸ்யருக்கு நேராக அனுப்பவும்]

ஸ்ரீனிவாசன், மாதுங்கா.

பரணி கூறிய எண் 73. உமக்கு 1961 ஜூலை வரை சிலவு கடுமை. அப்பாலேயே சேமிக்க முடியும் 1963 ஜனவரியில் விவாஹம்.

தண்டபாணி, சிதம்பரம்.

திருவோணம் கூறிய எண் 90. 1961 ஜூலை மத்தியில் சுகாதார இலாகாவிலோ, போக்கு வரத்து இலாகாவிலோ உத்யோகம் ஏற்படும். 1962 மே மணம் புரிய நேரும்.

ராஜலெக்ஷிமி, கும்பகோணம்.

உத்ராடம் கூறிய எண் 97. நோய் விலகும். லெக்ஷ்மீ நரசிம்ம ஸ்த்தோத்ரம் படித்து வரவும். 1961 நவம்பர் முதல் ஆரோக்யம் திருப்திகரமாகயிருக்கும். நிரந்தரமாக வருமானம் வர மேலும் ஓராண்டு செல்ல வேண்டும்.

ராமசாமி, மதருஸ்.

ஆயில்யம் கூறிய எண் 107. உத்யோக உயர்விற்கு 3 வருடங்களும் 1 மாதமும் ஆகவேண்டும். 1962 பிப்ரவரியில் இடப்பெயர்ச்சியிருக்குமென திகில் உண்டாகும். ஆனால் மாறுதல் வராது.

கல்யாணி, மாம்பலம் நெ. 87.

தாயின் நிலை மாறும். 1962 மே முதலே நன்று. உமக்கு எண்ணம் றைவேறும். அவரே மணப்பார்.

சுப்ரமண்யம், கடப்பேரி.

புனர்பூசம், 69. உமக்கு வ்யாபாரமே நற்பலனையளிக்கும். எத்தொழில் செய்தாலும், புதையலே கிடைத்தாலும், 1963 முதலே நிம்மதியிருக்கும். வேதனையும் யோஜனையும் மேலும் இரண்டரை ஆண்டுகள் உண்டு. பால் வ்யாபாரமே நன்று.

ஞானவடிவேல்.

அவிட்டம் 75. நீர் 1962 நவம்பர் வரை தொழில் புரியவும். அப்பாலேயே வ்யாபாரம் செய்யலாம் 1962 ஜூன் விவாஹம்.

கிருஷ்ணமூர்த்தி, மூலம், நெ. 10 நாகர்கோயில்.

பரீக்ஷைகள் தேறிவரும். 1964 மார்ச்சில் விவாஹம்.

கிருஷ்ணசாமி. திருச்சி.

நக்ஷத்திரம் தெரியாது. நம்பர் 55 ஜோதிடரை குருவெனகருதி, உண்மையை உரைத்து பலாபலன்கள் வினவினால், உமக்கு பகவத் கிருபையேற்பட, உமக்கு ஜோதிடர் மூலம், தெய்வம் உண்மை பலனையளிக்கும். என் திறமையை சோதிக்கவும், ஜோதிடத்தில் நம்பிக்கையில்லாத நீர், "பெயரை மாற்றி கேள்விகள் கேட்டேன். பதில்கள் அளித்தனவெல்லாம் மிகப் பொருத்தமாக வந்தது. என் எண்ணம் மிகத் தவறு" என்று எழுதியுள்ளீர். உண்மையைகூறியவற்றிற்கு சந்தோஷம். இனி கேள்விகள் கேட்கும்பொழுது வணக்கத்துடன் வேண்டிக்கொண்டாலே பதிலளிக்கப்படும்.

குப்புசாமி முதலியார், சென்னை.

கூறிய எண் 92. ஸெப்டம்பர் மாதம் 20 தேதிக்கப்பால் நேரிடையாக கடிதம் போடும். பலாபலனை இலவசமாக விரிவாக எழுதுகிறேன்.

பெரியசாமி, குன்னூர்.

உமக்கு போஸ்டல் டிபார்ட்மெண்டில் தொழில் நிரந்தரமாகயிருக்கும் 1963ம் ஆண்டு உயர்வு உண்டாகும். 1962 ஜனவரியில் உறவிலேயே மணம் புரிவீர்.

விஜலக்ஷ்மி, கோவை நெ. 107

அஸ்வதி, 1961 ஸெப்டம்பரில் விவாஹம் நடைபெறும்.

ஸ்ரீதர், திண்டுக்கல் நெ. 99.

அனுஷம். உமக்கு 1962ம் ஆண்டு ஏப்ரல் மாதம் விவாஹம் நடைபெறும். வயது அப்பொழுது 29 ஆகும். தானே சம்பாதிப்பது உத்தமம். பெற்றோர் கொடுக்கும் தனம் மத்திபம் மனைவி கொடுக்கும் செல்வமோ அதமம். மனைவி என்ன கொடுப்பாள் என ஜோதிடம் கேட்பது அல்லது எதிர்பார்ப்பது நல்லதல்ல பெண்ணின் குணமே பெரிது-பணமிருப்பின் படாடோபமே. நிதியால் மாத்ரம் நிம்மதி வந்துவிடுமா உமக்கு நல்ல மதியுடன் கூடிய, நற்குணம் வாய்ந்த, அழகான பெண் கிடைப்பாள். சீரும் செல்வமும் எதிர்பார்ப்பதைவிட சற்று குறைவாகவே யிருக்கும்.

ஜோதி, வந்தவாசி.

பரீக்ஷை தேறும் நீர் வைத்யரல்ல எம். எஸ். ஸி. படிப்பீர்.

சாவித்ரி, டி. நகர் நெ. 88

தாய்க்கு 1962 முதல் ஓரளவு சுகமுண்டு. M. E. S. C. இனி அப்ளிகேஷன் Call for செய்தால், அப்ளை செய்யும் வேலை கிடைக்கும் உமக்கு 1962 ஜுலையில் விவாஹம் நடைபெறும்.

கோதண்டராமன், மதராஸ்.

புனர்பூசம் நம்பர் 58. தாய் சொத்து உமக்கு கிடைக்கும். சனி மாமூலம் உமக்கு நற்பலன் இருக்க கிரகங்களின் சுப திருஷ்டியைக் காணோம்.

நாமகிரிதாயார், திருச்சி.

பரணி நம்பர் 56. மாமனார் 1963 ஆவணியில் திரும்பி வருவார். உமக்கு 1962 ஜுலை முதலே கஷ்டம் மறையும். வேதனை குறையும், இன்பமதிகம்.

வாசகர்களுக்கு விண்ணப்பம்.

ஜோஸ்ய கேள்விகள் நூற்றுக்கணக்கான வாசகர்களிடமிருந்து வருகின்றன. மிக மனவேதனையுடன் எழுதும் சிலருக்கு இதுவரை இலவசமாக நேரிலேயே பதிலளித்தோம். மற்றும் ஓர் சிலருக்கு மாத்திரம் அச்சிட முடிகிறது. இனி பதில் விவரமாக கேள்விகளுக்கு வேண்டுமானால் 1 ரூ மணியார்டர் 'கணபதி ஜோஸ்யர்'க்கு நேராக அனுப்பவும். கூப்பனை வைத்துக் கேள்வியுமனுப்பவும். சக்தியற்றவர்கள் மாலா மூலம் பதிலைப்பெற்று உண்மையைப்பெற வேண்டும் என்பதே எமது நோக்கம்.

கணபதி ஜோஸ்யர்,

13, ப்ராமணத் தெரு. சென்னை-15.



அத்தியாயம் 5

'அப்பா' என்று கூவித் திகைத்து நின்று கொண்டிருந்த கந்தவேலன் அருகே உராய்வது போல் காரொன்று வந்துநின்றது. காரிலே பரமசிவமும், அவரது மகள் புஷ்பாவும் அமர்ந்திருந்தனர். பரமசிவம் காருக்கு வெளியே தலையை நீட்டி "என்னப்பா கந்தவேலா! மாலை அவசியம் வருவதாகக் கூறினாயே. உனக்காகக் காத்திருந்தேன். புஷ்பாவும் காத்திருந்தாள்" என்று கூறி ஒருவிதச் சிரிப்புச்சிரித்தார்.

அவரிடம் வருவதாகச் சொன்னதே கந்தவேலனுக்கு மறந்துவிட்டது. அப்போதுள்ள குழப்பமான நிலையில் அவனால் ஏதும் தக்கபடி பேச இயலவுமில்லை. ஒன்றும் புரியாமல் இப்படியும் அப்படியுமாகப் பார்த்தவாறு நின்று கொண்டிருந்த அவனை விசாரிப்பதற்காக அவர் காரை விட்டு இறங்கிவந்தார்.

"தம்பி, கந்தவேலா, ஏன் நீ வரவில்லை" என்று அவன் தோள் பட்டையைத் தொட்டவண்ணம் கேட்டார். புஷ்பா காரின் உள்ளிருந்து கண்ணாடிவழியே கந்தவேலனையும், தந்தை கேட்பதற்கு அவன் பதில் சொல்ல அவன் உதடசைவதையும் பார்த்தவண்ணமிருந்தாள். காற்று இல்லாததால் காரினுள்ளே புழுக்கம் நிறைந்திருந்தது.

கந்தவேலன் ஒன்றும் பேசாமல் நின்று கொண்டிருந்தான். அவன் மனம் வீட்டிலே வேதனையால் துடிக்கும் சமையற்காரத் தாத்தாவின் பேரில் இருந்தது. உடனே அவரை அழைத்துப்போய் எங்காவது நல்ல ஆஸ்பத்திரியில் சேர்ப்பதாகத் தங்கையிடம் கூறிவிட்டு வந்தது போக இங்கே நடுத் தெருவில் நின்று சிந்தனை செய்து கொண்டிருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. அங்கிருந்து மெல்லக் கிளம்பிவிட முடிவு செய்தான்.

"இன்று மாலை வருவதாகச் சொல்லி வரவில்லை; தவறுதான். பல வேலைகளில் மூழ்கி இருந்து விட்டேன்..."

"அது சரி; இப்போது ஏன் இப்படி நின்று கொண்டிருக்கிறாய்? உன் தந்தை அதோ காரில் போகிறார்..." என்றார் வக்கீல் பரமசிவம். அந்த வேலனுக்கு மறைக்கத் தெரியவில்லை. சிறு விஷயங்களுக்கெல்லாம் பொய் சொல்லி அறியாதவன். அது அவசியமென்றும் அவனுக்குப் படவில்லை.

"அவருக்காகத் தேடிந்தான் வந்தேன். அவசரமான வேலை. வீட்டிலே சமையற்காரத் தாத்தா கீழே விழுந்து காலுடைந்து கிடக்கிறார். அவரை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும்" என்று படபடப்புடன் கூறினான்.

பரமசிவம் மீண்டும் சிரித்தார். தன் கைக் கடிகாரத்தைப்பார்த்தார்.

"ஏன்; நான் சொல்வதில் நம்பிக்கை இல்லையா? அப்படி இல்லாவிடில் இந்தநேரத்தில் நான்ஏன் இங்கு வருகிறேன்? வீட்டிலே தங்கையைத் தனியே விட்டு விட்டு. அவரை உடனே நல்ல ஆஸ்பத்திரியில் சேர்த்தாக வேண்டும். எங்கள் குடும்பத்திற்கு அவர் உழைத்த உழைப்பிற்கு இதைக் கூட நாங்கள் செய்யாவிடில் நாங்கள் நன்றி கொன்றவர்களாவோம்" என்று கந்தவேலன் பரமசிவத்தின் சிரிப்புக்குப் பதில் கூறினான்.

பரமசிவம் கந்தவேலனை ஒரே கணத்தில் எடைபோட்டு விட்டார். அவனுடைய நேர்மையான குணம் அவருக்குப் புரிந்தது. இளம் வயதிலேயே பொறுப்புணர்ச்சி நிறைந்தவனாக அவன் இருப்பது அவருக்குக் களிப்பை ஊட்டியது. அவசரமான பணியாக அவன் வந்திருக்கும் போது இப்படியெல்லாம் பேசிக் கொண்டு நிற்பது சரியன்று எனத் தோன்றியது. கந்தவேலன் முதுகை மெல்லத் தட்டிக் கொடுத்து "கந்தவேலா, உன் கடமை உணர்ச்சியை நான் பாராட்டுகிறேன். உன் தந்தையைத் தேடி இப்போது என்ன ஆகப்போகிறது? அவர்தான் மரகதத்திடம் சரியானபடி சிக்கிவிட்டாரே: "உம்" என்றார்.

"வேறு என்ன? கால் முறிந்து கிடப்பவரை ஆஸ்பத்திரிக்கு எப்படி எடுத்துச் செல்வது? காரைக் கேட்போமென்றுதான். என் நண்பர் பெருமாளிடம் சென்றால் ஒரு நொடியில் கொடுப்பான். அவனைத் தொந்தரவு செய்ய எனக்கு எண்ணமில்லை..." என்றான் கந்தவேலன்.

"இவ்வளவுதானே? காருக்காகத்தானே தந்தையைத் தேடுகிறாய்? இதோ நானே காரைத் தருகிறேன். ஏறிக் கொள். புஷ்பாவை வீட்டிலே விட்டுவிட்டு வந்துவிடலாம்" என்றார்.

கந்தவேலனுக்கு வியப்புத் தாங்கவில்லை. வக்கீல் ஸாரா இப்படிப் பேசுகிறார்? அவரே காரை ஓட்டி வருகிறாரா? நன்றியை எப்படித் தெரிவிப்பது என்று கூடத் தெரியவில்லை. ஏதோ நினைவாக பின் ஸீட்டைத் திறந்து ஏற முயன்றவன் அங்கே புஷ்பா கைகுட்டையால் 'உஸ் உஸ்' என்று வியர்வையைத் துடைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டு "ஸாரி" என்று கூறி, முன் ஸீட்டிற்குச் சென்று அமர்ந்தான்.

பரமசிவம், புஷ்பாவை வீட்டில் இறக்கி விட்டு விட்டு வேகமாகக் காரை ஓட்டிக் கொண்டு பூம் பொழிலை நோக்கி விரைந்தார். அவருடைய மனத்தில் பற்பல எண்ணங்கள். இல்லாவிடில் பிரபல வக்கீல் பரமசிவம் இப்படி இந்த நேரத்தில் ஒரு சமையற்காரரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லக் காரோட்டி வருவாரா? கந்தவேலனை மட்டும் தன் மீது அன்பும் நம்பிக்கையும் அதிகமிருப்பவனாக மாற்றிவிட்டால் பிறகு

20836.

தன் காரியங்களைச் சுலபமாக நிறைவேற்றி விடலாம். கந்தவேலனைப் புஷ்பாவுக்கும், மான்விழியை மாணிக்கத்திற்கும் சம்பந்தப் படுத்தித் திருமணம் முடித்து விட்டால் பூம்பொழில் பங்களாவே தன்னுடையது தானே—

எப்படியும் இதை நிறை வேற்றிவிடவேண்டும் என்ற எண்ணத்தில் கந்தவேலனுக்கு உதவ முற்பட்டார் பரமசிவம். கார் பூம்பொழிலை அடைந்தது. காரின் முன்விளக்கு வெளிச்சத்தின் உதவியுடன் மெல்லக் காரை ஓட்டினார். கந்தவேலனுக்கு தன் வீட்டைப் பார்க்கும் போது வேதனையாகத் தானிருந்தது. இருள் சூழ்ந்து நிற்கும் இதே பூம் பொழிலைச் சில வருடங்களுக்கு முன்னால் காணும்போது எவ்வளவு இன்பமாயிருக்கும்? மேல் மாடியில் உள்ள அறையிலே எரியும் விளக்குகளும், முன் போர்டிகோ விளக்குகளும் அந்த பங்களா அழகை இன்னும் அதிகப்படுத்தும். அந்தச் சாலையில் செல்பவர் ஒருமுறை பூம்பொழிலைத் திரும்பிப்பாராமல் போகமாட்டார்கள். வெளி கேட்டருகே உள்ள இரண்டு மின்சார 'டூம்' விளக்குகள் காண அழகாக இருக்கும். இப்போது அந்த எழிலெங்கே?.

கந்தவேலன் மெல்லக் கண்களைக் கசக்கிக்கொண்டான். கார் மாளிகையின் போர்டிகோவின் முன் நின்றது. மான்விழி முன் வராண்டா படிக் கட்டில் அமர்ந்திருந்தாள். அவளுக்கு நேரமாக ஆக பயம் பொங்கிக் கொண்டிருந்தது. உள்ளே சமையற்காரர் வலி தாங்காமல் முனகும் ஓசை கேட்டது. தொலைவில் கார் வரும் சப்தம் கேட்கும் போதெல்லாம் மான்விழி சற்றுத் தைர்யமடைவாள். பிறகு அது நேராகப் போய் விட்டவுடன், முன்னிலும் அதிகமாகப் பயம் வந்து சூழும் தோட்டத்துத் தூங்குமூஞ்சி மரங்களின் ஒருவித 'ஞொய்' என்ற ஒலியும், காற்றிலே தென்னை மரத்து ஓலை ஒன்றோடொன்று உராயும்போது எழும் ஒலியும், கொக்கியிடப்படாத ஜன்னல் கதவுகள் 'பட்பட்' என்று காற்றிலே அடித்துக் கொள்வதால் ஏற்படும் ஒலியும் அவளுடைய பயத்தை இன்னும் அதிகரிக்க வைத்தன. இருட்டிலே அவளைக் குளிக்கும் அறைப்பக்கம் கூட விடத் துணியாத அவள் தாய் கோதை, இப்போது தன் மகள் இருப்பதைப் பார்த்தால் சும்மா இருப்பாளா?.

ஒன்றும் செய்யாமல் தாய் சும்மாத்தான் இருக்கிறாள். இல்லாவிடில் என் மனத்தில் இவ்வளவு வேதனை வந்து சூழும்போது தாய் ஏன் அமைதியாக இருக்கிறாள்? அந்தக் கூடத்து அறையிலுள்ள அவளது போட்டோவின் முன் நின்று வேதனை கொட்டி அழுதால் ஒரு வேளை தாய் தன் துயர் தீர்ப்பாளோ? எப்படி எழுந்து உள்ளே செல்வது? அவளுடலில் ஒருவித பயம் தோன்றியது. ஆனால் அந்தப் பேதைப் பெண் எப்படி அறிவாள் அவள் தாய் சூட்சும வடிவில் அவளருகேயே இருப்பதை? கோதைக்கு அந்தப் பூம்பொழில் பங்களாவை விட்டு வெளியே செல்ல மனமே வராதே. தனது செல்வக் குழந்தைகள் இரண்டும் வேதனைப் படுவதைத் தீர்க்கத்தானே அவள் அந்தப் பங்களாவில் சுற்றிச் சுற்றி வருகிறாள். அதோ அவள் மான்விழியின் அருகே அந்த இருளில் நடந்து வந்து ஏதோ சொல்கிறாளே.

"கண்ணு, கண்ணு"

மான்விழி, உன்னை, உன் தாயார் அழைக்கிறாள் அம்மா. அம்மா அம்மா என்றாயே. உன் அருமை அம்மா உன்னை இதோ கூப்பிடுகிறாள் ஏனென்று கேளம்மா. உன் துயர் எடுத்துக் கூறம்மா.

மான்விழி வெளியே வைத்த பார்வையை மாற்றாமல் அப்படியே இருக்கிறாள், அவள் உடல் படபடப்பு நொடிக்கு நொடி அதிகமாகிறது.

"கண்ணே, மான்விழி, நான் இருப்பது உனக்குத் தெரியவில்லையா? உன் கவலை முழுவதும் எனக்குத் தெரியுமம்மா? ஆனால் இப்படி இருளில் நீ உட்கார்ந்து கண்ணீர்விட நேர்ந்ததுதான் எனக்கு வேதனையை அளிக்கிறது. இந்த வீட்டின் ஒளியே அணைந்து விடும் என்பது எனக்குத் தெரியாது. மின்சாரக் கட்டணம் கட்டக் கூடப் பணமில்லாது போய் விட்டதா? நான் இருந்த அறையிலே தகரப்பெட்டி ஒன்றிருக்கிறது மான்விழி. அதில் என்னுடைய பழைய புடவைகள் சில இருக்கின்றன. அதனடியில் ஒரு பெரும் நோட்டுப் புத்தகம் இருக்கிறது, அதில் நான் பைத்தியக் காரியைப்போல் ஏதேதோ எழுதி வைத்திருப்பேன். அது உனக்குப் புரியாது. ஆனால் உன் அண்ணன் படித்தால் சட்டென எல்லாவற்றையும் கற்றுணர்ந்து விடுவான். அந்த நோட்டுப் புத்தகத்தினடியில் ரூபாய் நோட்டுகளும், சில்லரையுமாக இருக்கின்றன. எவ்வளவு இருக்கும் என்று எனக்கே தெரியாது. நான் ஆறு வருடங்கள் மாலை வேளைக் காபியை நிறுத்தி அதனுடைய செலவுக்குச் சரியான தொகையை எடுத்துப் போட்டுக் கொண்டே வந்தேன். அந்தத் தொகை தான் அந்தத் தகரப் பெட்டியில் இருக்கிறது. மிகவும் தலைபோகிற காலத்தில் அந்தத் தொகை உபயோகப்படும் என்று நான் வைத்திருந்தேன். என் காலத்தில் உபயோகப் படவில்லை. உங்களுக்காவது உப



யோகப்படட்டுமே என்றுதான் சொன்னேன். உன் அண்ணன் அந்தப் பெட்டியைப் பார்த்திருப்பான் என்று நினைத்தேன். அவன் பார்க்க மாட்டான். அவனைப் போன்ற நேர்மையானவன் இனி யார் பிறக்கப் போகிறுர்கள்? அவன் நற்பெயருடன் நல்ல முறையில் வாழ நான் நேரிடையாகப் பார்க்க முடியவில்லை...''

தாய் ஏதேதோ சொல்லிக் கொண்டே போனுள். மான்விழியின் மேனி நடுநடுங்கியது. அம்மாவின் குரல்தான். பின்புறமிருந்துதான் பேசுகிறுள். ஐயோ; எப்படித் திரும்பிப் பார்ப்பேன்...எனக்குப் பயமாயிருக்கே அம்மா. இப்படி நேரிடையே வாயேன் அம்மா.

மான்விழி உடல் சிலிர்க்க விம்மினுள். ''அண்ணு இந்த இருட்டில் நீ எங்கே போய்த் திண்டாடுகிருயோ? இங்கிருந்து நான் கத்தினுல் கூடக் காதில் விழாதே...'' மான்விழி விம்மினுள்.

அப்போது வக்கீல் பரமசிவத்தின் கார் 'வீர்'ரென்று வந்து நின்றது. கந்தவேலன் முன் கதவைத் திறந்து கொண்டு வந்து இறங்கினுன்...

அண்ணனைக் கண்டவுடன் மான்விழி விம்மி அழுதுவிட்டாள்.

"அசடே! ஏன் அழுகிருய். அப்பாவை; தேடிப்போனேன். அப்பா அகப்படவில்லை. நல்ல வேளையாக வக்கீல் ஸார் வந்தார். அவரே ஆஸ்பத்திரியில் சேர்க்க உதவுவதாகக் கூறினர். அதனுல்தான் இவ்வளவு நேரம். 'வா மெள்ள அவரைத் தூக்கி ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடுவோம்'' என்ருன்.

மூவருமாகச் சேர்ந்து சமையற்காரரைக் காரில் பின் ஸீட்டில் ஏற்றினர். கார் புறப்படும் முன்பு பரமசிவம் அந்த வீட்டை ஒரு முறை நின்று பார்த்து "கந்த வேலா! நீயும் இப்போது ஆஸ்பத்திரிக்குக் கிளம்புகிருய். உன் தங்கைமட்டும் இந்தப் பெரிய வீட்டிலே தனியே எப்படி இருப்பாள்?'' என்று கேட்டார். அதற்குள் மான்விழி கந்தவேலனை நோக்கி, ''அண்ணு, என்னுல் ஒரு நொடிகூட இங்குத் தனியே இருக்க இயலாது. நானும் உன்னுடன் ஆஸ்பத்திரி வருகிறேன்'' "என்ருள். வீட்டின் வெளிக் கதவை இழுத்துப் பூட்டிக் கொண்டு கந்தவேலன் வந்தான். மான்விழி பின் பக்கத்து ஸீட்டில் ஏறிக்கொள்ள கார் வேகமாகச் சென்றது.

★

நல்ல நர்ஸிங் ஹோமில் கால் முறிந்த சமையற்காரரைச் சேர்த்து விட்டு வெளியே வந்தார் பரமசிவம். அவரைப் பின் தொடர்ந்தனர் மான்விழியும், கந்தவேலனும், கந்தவேலன் வக்கீலின் உதவியை வெகுவாகப் புகழ்ந்து வந்தான். சட்டென்று பரமசிவம் திரும்பி, ''கந்தவேலா, இப்போது பூம்பொழிலுக்கு''ப் போய் என்ன செய்யப்போகிருய்? அந்த இருளில் கொட்டு கொட்டென்று உட்கார்ந்திருப்பானேன்?'' என்னுடன் நேரே வீட்டிற்கு வந்துவிடு. காலையில் இருவரும் போகலாம்'' என்ருர். கந்தவேலனும், மான்விழியும் ஒருவரையொருவர் ஒருமுறைப் பார்த்துக் கொண்டனர். மறுமொழி ஏதும் பேசாமல் இருவரும் காரில் ஏறினர்,

வக்கீல் பரமசிவத்தின் வீட்டில் பொதுவாக ஒன்பது மணிக்கே எல்லோரும் தூங்கப் போய்விடுவர் அன்று எல்லாரும் விழித்துக் கொண்டிருந்தனர். வக்கீலின் மனைவி தங்கம்மாள் கந்தவேலன் வருகைக்காகக் காத்திருந்தாள். தன் மகள் புஷ்பாவை எப்படியாவது கந்தவேலனுக்கு

மணம் முடித்துவிட வேண்டும் என்ற ஆவல் அவளுக்கு. ஆனால் காரினின்று கந்தவேலனுடன் மரன்விழியும் இறங்கி வந்தவுடன் அவளுக்கு வியப்புத் தாங்கவில்லை.

''வாம்மா'' என்று வாஞ்சையுடன் மான்விழியை வரவேற்றாள் சூடான பால் ஆளுக்கு ஒரு கோப்பையை வீட்டுச் சமையற்கார அம்மாள் கொண்டு வந்தாள். எல்லாம் மேனாட்டு முறைதான். மான் விழியை அழைத்துக் கொண்டு தங்கம்மாள் தன் அறைக்குப் பேசச் சென்றாள். செல்லும்போது கந்தவேலனை ஒரு முறைத் திரும்பிப் பார்த்து விட்டுச் சென்றாள். ஆனால் கந்தவேலன் புஷ்பாவைப் பார்க்க வில்லை. அவன் நினைவெல்லாம் மாலையில் மரகதத்தின் வீட்டில் நடன மாடிக் கொண்டிருந்த மங்கை மீது சென்றது. பெண்களில் பலவித மானவர்களைப் பற்றி அவன் எண்ணலானான். மரகதம், மான்விழி, இந்தி வாத்தியார், புஷ்பா, தங்கம்மாள்—இப்படியாக ஒவ்வொருவருடைய குணங்களை ஒருமுறை நினைத்தான்.

வக்கில் பரமசிவம் அப்போது ஏதேதோ பேசிக் கொண்டே இருந்தார். அவனுடைய தந்தையின் கடன்களைப்பற்றியும், சொத்தினைப்பற்றியும் பேசினார். ''உன் தந்தையார் பூம்பொழிலின் மீது கடன் வாங்கவே முடியாது. உன் தாத்தா என்ன செய்தார் தெரியுமா? உயில் எழுதும் போது தன் மகனை உன் தகப்பனருக்குப் பூம்பொழிலை விற்கவோ, கடன் வாங்கவோ உரிமை கிடையாது என்றும், அவருடைய வயிற்றுமகனை நீதான் அந்தப் பங்களாவை விற்கவோ, கடன் வாங்கவோ செய்யலாம் என எழுதிவைத்து விட்டார். அவர் அப்படிச் செய்யாவிடில் இந்தப் பூம்பொழில் பங்களா நிலைத்து நின்றிருக்காது'' என்று பரமசிவம் கூறியபோது கந்தவேலன் குறுக்கிட்டு, ''ஏராளமான கடனை வைத்துக் கொண்டு இப்படி ஒரு பெரிய வீட்டை வைத்திருப்பதில் என்ன பலன் இருக்கிறது?'' என்றான்.

''அதுவும் உண்மைதான். ஆனால் அதற்கு மாற்று செய்ய முடியும். வழி இருக்கிறது. உன் தந்தையின் கடனுபாதைகளை என்னால் நிவர்த்தி செய்துவிட முடியும்''

''முடியுமா? ஏன் நீங்கள் செய்யக்கூடாது. குடும்ப வக்கிலான நீங்கள் அந்த உதவியைச் செய்யக் கூடாதா?''

''குடும்ப வக்கிலா? குடும்ப நண்பருக்கு மேலாக இருக்கிறேன். என் யோசனை எதை உன் தந்தை ஏற்றிருக்கிறார்? இருந்தாலும் அவருடைய முன் நாளைய குணத்துக்காவது நான் அவருக்கு நல்லது செய்ய வேண்டும். ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். அதை உன்னிடம் சொல்கிறேன். நீ சம்மதித்தால் நிச்சயம் உனக்கும் உன் தந்தைக்கும் பூம்பொழிலுக்கும் நன்மை'' என்றார் பரமசிவம்.

கந்தவேலன் ஒருகணம் மௌனமாக இருந்தான். பிறகு, ''என்ன திட்டம் கூறுங்கள். நான் நிறைவேற்ற முயல்கிறேன்'' என்றான்.

பரமசிவம் சிரித்தவாறு, ''அவ்வளவு சீக்கிரம் சொல்லிவிட முடியுமா? அதைப் பூர்வ பீடிகையுடன் கூறவேதான் உன்னை அழைத்தேன். இப்போது இரவு நேரமாகிவிட்டது நாளைக்குச் சொல்கிறேன்'' என்றார்.

கந்தவேலனுக்கு ஏதும் புரியவில்லை. இரவெல்லாம் அவனுக்கு அந்தத் திட்டத்தைப் பற்றியே குழப்பம். காலையில் கண் விழித்தபோது

புஷ்பா கையில் காபிக் கோப்பையுடன் நின்று கொண்டிருந்தாள்.

"நன்றி. நான் 'பெட் காபி' சாப்பிடுவதில்லை" என்றான் கந்தவேலன்.

"அப்படியா? விசித்திரமாயிருக்கிறதே" என்று நகைத்தாள் புஷ்பா. 'மணி என்னதெரியுமா?" என்றுகேட்டாள்.

"தெரியாது; மணி என்ன?"

"மணி ஏழரை"

"ஏழரையா?" என்று துள்ளி எழுந்தான். அவனுக்குச் கூச்சமாகக் கூட இருந்தது. மூன்றாவது மனிதர் வீட்டில் இப்படி நேரம் போவது கூடத் தெரியாமல் தூங்குவதா? புஷ்பா அவனுக்குப் பேஸ்டும், பிரஷும் கொடுத்தாள்.

புஷ்பா! அவன் ஒருமுறை அவள் பெயரைச் சொல்லிப் பார்த்துக் கொண்டான். இவ்வளவு சகஜமாக ப்பழகும் அவளை மற்றொருமுறைப் பார்த்தான், அவள் பார்க்காதபோது. அப்படிப் பேரழகி அல்லள் அவள். இருந்தாலும் முகத்திலுள்ள வசிகரம் எவரையும் கவரவல்லது. கந்தவேலன் மனத்தில் இதுவரைக் 'காதல்' என ஏதும் உதயமாகவில்லை. அவனுக்கே இயற்கையான சங்கோஜம் பெண்களைக் கண்டவுடன் தலைகுனிய வைத்துவிடும்.

மாடி அறையினின்று முன் ஹாலுக்கு வந்தான் பூம்பொழிலில் இருக்க வேண்டிய அவன் இப்படித் திடீரென்று வேறொருவர் வீட்டில் வந்து சாவதானமாகப் பொழுதைப் போக்குவது ஆச்சர்யத்தை அவனுக்களித்தது. மான் விழியும் எழுந்து விட்டாள். பரமசிவம் அவரது ஆபீஸ் அறையிலுட்கார்ந்து கொண்டு கட்சிக்காரருடன் பேசிக்கொண்டிருந்தார்.

புஷ்பா, மான்விழி, கந்தவேலன் மூவரும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். அப்போது வெளியே காரொன்று வந்து நின்றது. பெருமாள் காரினின்று வந்திறங்கினான். அவனைப் பார்த்த கந்தவேலனும், மான்விழியும் திடுக்கிட்டனர். ஆனால் புஷ்பா ஓடிச் சென்று ;அவனை வரவேற்று கந்த வேலனை அறிமுகப்படுத்த அழைத்து வந்தாள். ஆனால் பெருமாளோ கந்த வேலனைக் கண்டவுடன் ஏனோ ஒன்றும் புரியாதவன் போல் திகைத்து நின்றான்.

கந்தவேலனே அந்தச் சூழ்நிலையை மாற்றி "வா பெருமாள், ஏது இவ்வளவு தூரம்" என அழைத்தான். பெருமாளும் சற்றுச் சமாளித்து கொண்டு, "அந்தக் கேள்வியை நானல்லவா கேட்க வேண்டும்" என்ற போது தங்கம்மாள் ஹாலிற்குள் நுழைந்து, "அப்படிக்கேளு பெருமாள். உன் சினேகிதரா அவர். இந்தப் பக்கம் இதுதான் முதல் தடவையா வருகிறார்" என்றாள்.

"இந்த வீட்டு மருகப்பிள்ளையா வரப் போகிறவருக்கு அந்த மிடுக்கு இருக்கத்தானே வேண்டும்" என்றான், அப்போது உள்ளே நுழைந்த தங்கத்தின் மகன் மாணிக்கம்.

எல்லோரும் ஏக காலத்தில் திடுக்கிட்டனர். பெருமாளுக்கு ஏதோ உள்ளக் கோபுரம் சரிவது போன்ற உணர்ச்சி. அவன் புஷ்பாவின் மீது இதயத்தைப் பறி கொடுத்திருந்தான். ஆனால் அவனுக்குப் பெண்ணினத்தைக் கண்டால் சற்றுச் சபலமும் உண்டு. பூம்பொழிலுக்குச் செல்லும்போது மான்விழியைக் கண்டால் ஒரு மயக்கம்—

பெருமாளின் உள்ளக் கலக்கத்தைக் கந்தவேலன் அறியவில்லை. பெருமாளின் முதுகை வழக்கம்போல் தட்டி, "என்னப்பா, காரில் வந்தாயா? போகலாமா வெளியே" "என்றான்.

பெருமாள் சற்று நேரம் மௌனமாயிருந்து விட்டு, "ஸாரி, கந்தவேலா. புஷ்பாவும் நானும் முன்பே இங்கிலீஷ் படம் ஒன்றின் காலைக் காட்சிக்குப் போக ரிஸர்வ் செய்திருக்கிறோம்" என்றான்.

சட்டெனப் புஷ்பா குறுக்கிட்டு, "அடடா; அதனால் என்ன? எனக்கும் வேறு எங்கேஜ்மெண்ட் இருக்கிறது. நீங்கள் அவருடன் போங்கள்" என்றாள்.

பெருமாளுக்கு இன்னும் அதிர்ச்சியாக இருந்தது. கந்தவேலனுக்குப் பல விதங்களில் உதவி இவ்வளவு நாள் உற்ற நண்பனாயிருந்த பெருமாளின் இதயத்திலே அந்த நொடியிலேயே பொறாமை புகுந்தது.

(தொடரும்)

தயாராகிறது !

மாலா

தீபாவளி மலர்

சிறந்த கட்டுரைகள், கதைகள், படங்கள்
நிறைந்துள்ளன.

•

விவரங்கட்கு :

மாலா — சென்னை 18.

அமர கவி

பாரத தேசம் அடிமைப் பட்டுக் கிடந்தபோது விடுதலை வீரர்கள் பலர் தோன்றினார்கள் அவர்களில் ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாக தேசத்திற்குப் பணி செய்து தியாகம் செய்தனர். வானில் அமரர்களாகி இன்று சுதந்திர பாரதத்தை ஆசி கூறுகிறார்கள். அவர்களில் மிக முக்கியமானவர் பாரதியார்.

பாரதியார் எட்டையபுரத்தில் பிறந்தார். இளமையில் பன்மொழிப் பயின்றார். அவரை தேசியப் பற்றுப் பிடித்திழுத்தது. உடனே தேசத்திற்குத் தொண்டு செய்ய ஆரம்பித்தார், மொழிக்கும் நாட்டிற்கும் இணைப்புச் சேர்த்து பல பாடல்கள் இயற்றினார் அவருடைய பாடல்கள் அடிமை மக்களைத் தட்டி எழுப்பின. தேசத் தொண்டர்கள் யாவரும் பாரதியாரின் பாடல்களைப் பாடிக்கொண்டே ஏறு நடை போட்டனர். இதைக் கண்ட அன்னிய ஆட்சி நடுங்கியது. கதி கலங்கியது. பாடலின் ஒலி அவர்களின் காதுகளில் புகுந்து, பாரத மக்களின் வீரத்தினை அவர்களுக்கு உணர்த்தியதுடன், அவர்களை ஐயமுறவும் செய்தது. அதனால் ஆட்சியாளர்கள் பாரதியாரின் பாடல்களுக்குத் தடை விதித்தனர். அப்பாடல்களைப் பாடுபவரை சிறையிலிட்டனர். பாரதியாருக்கும் தண்டனை விதித்தனர்.

பாரதியார் பாண்டியில் போய் தங்கினார். பல பாடல்களை இயற்றினார். அவருடைய பாடல்கள் நாடெங்கும் பரவின. காங்கிரஸ் கூட்டங்கள் நடைபெறுமிடங்களிலெல்லாம் பாரதியாரின் பாடல்கள் பாடப்பட்டு மக்களுக்கு உற்சாக மூட்டப்பட்டன, பாரதியார் சில நாள் பாண்டியில் தங்கி பிறகு சென்னைக்கு வந்தார், சென்னையில், பத்திரிகைத் தொண்டில் ஈடுபட்டு, ஆசிரியராகப் பணியாற்றினார். அவருடைய வீரநடைபோடும் செய்திகளைப் படிக்க மக்கள் அவாவுற்றனர். பத்திரிகையில் சிலநாள் பணியாற்றிய பின் பாரதியார் அமரரானார்.

பாரதியார் அமரரானாலும், அவருடைய தெய்வப் புலமையும், பாடல்களும் இன்னும் நம்முடனிருக்கின்றன. “ஆடுவோமே—

பள்ளிப் பாடுவோமே’ என்ற ஆனந்தப் பாட்டை பாரதியார் அன்றே நமக்களித்தார்.

மேலும், நம் சுதந்தர வெற்றியை அன்றே உலகமறியச் செய்தார், பாரதியார். “சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே இதை தரணிக்கெல்லாம் எடுத்து ஓதுவோமே” என்ற பாட்டை நமக்கெல்லாம் அன்றே அளித்தார், பாரதியார். இதேபோல் பல அரிய பாடல்களைப் பாடி, சோம்பிக் கிடந்தத் தமிழரை வீரத் தமிழர்களாகும்படித் தட்டி எழுப்பினார். அன்றே அண்ணல் காந்தி அடிகளுக்கு வாழ்த்தும் கூறினார். “தாழ்வுற்று வறுமை மிஞ்சி தரித்திர மிகவே கொண்டு பாழ்ப்பட்டு நின்றதாமோர் பாரத தேசந்தன்னை வாழ்விக்க வந்த காந்தி, மகாத்மா நீ வாழ்க, வாழ்க!” என்று வாழ்த்தி, நாமெல்லாம் என்றும் காந்தி அடிகளை வாழ்த்தி வணங்க வேண்டுமென்றே பாடலியற்றி தந்தார்.

பாரதியாரின் அருட் பாடல்கள் தேசத்திற்கும் மக்களுக்கும், மொழிக்கும் விழிப்பை உண்டாக்கியது. தன் பாடல்களின் மூலமே தேச சேவை செய்தவர் பாரதியார். குழந்தைகளாகிய நீங்களும் பாரதியார் போலவே தேசப் பற்று, மக்கட் பற்று, மொழிப் பற்று உள்ளவர்களாக வாழவேண்டும்.

இன்று பாரதியாரின் திரு உருவப்படத்தை நம் பாரத அரசாங்கம் தபால் தலையில் பொறித்து அவருக்கு வணக்கம் செலுத்தியுள்ளனர். பாரதியார் செப்டம்பர் மாதம் 11-ந் தேதியன்றுதான் பிறந்தார்.

பாரதியார் குழந்தைகளுக்கும் பல பாடல்கள் இயற்றி இருக்கிறார். குழந்தைகளாகிய நீங்கள் அதையெல்லாம் படித்து இன்புற வேண்டும். . பாரதியார், வாழ்க்கையில் எளியவராக இருந்தார். ஆனால், ஆற்றலில் விண்ணோக்கிச் சென்றார். பாரத மக்களை உலக மக்களில் சிறந்தவர்களாகவே கருதினார், பாரதியார். அண்ணல் காந்தி அடிகளை தெய்வமாகவே நினைந்தார், பாடினார் நாமும், பாரதியார் நமக்கு அளித்த பாடல்களைப் படித்து, அதன்படி ஒழுகி, தேசத்தைக் காப்பது இந்திய மக்களின் கடமையாகும். பாரதியார் சுதந்திர வாழ்வு வேண்டுமென அன்னை பராசக்தியிடம் முறையிட்டார். தெய்வீகப் புலமை அவருக்கு அன்னை பராசக்தியினருளால் கிடைத்தது. ஆதலால் அவர் தேசத்தொண்டே தெய்வத்தொண்டெனக் கருதினார். ஜாதிமத வேறுபாடுகளை வெறுத்தார். “எல்லோரும் ஓரினம் எல்லோரும் இந்நாட்டு மக்கள் என” முழங்கினர். மக்கள் எல்லோரும் ஒரே குலமாக வாழ சமதர்மம் ஓங்க வேண்டுமென நினைந்தார். “தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்” என்று கர்ஜித்தார். பசியின் கொடுமை நம் நாட்டை விட்டுப் பறக்க வேண்டுமென நினைந்து, உள்ளம் உருகிப் பாடினார்.

இன்று எல்லோருக்கும் உணவு; உடை; இருப்பிடம் என்று நம் அரசாங்கம் திட்டமிட்டுப் பணியாற்றி வருகின்றனர்; கூடிய சீக்கிரம் நம் பாரத தேசம் பாரதியார் கண்ட பொன்னாடாக மிளிரும் என்பதில் சந்தேகமில்லை. அதற்குச் சான்றாக இன்று பாரதியாரின் திரு உருவத்தை தபால் தலையில் பொறித்திருப்பது போற்றக்கூடியதே அல்லவா?

“வாழ்க, பாரதி!—வாழ்க, சுதந்தரம்!

—சுப்பு

சமீபத்தில் புது டில்லியிலே ஸ்ரீமதி கமலாதேவி சடோபாத்யாயா தலைமை கொண்ட. பாரதீய நாட்டிய சங்கத்தின் ஆதரவிலே வைஜயந்திமாலா அவர்களின் பரத நாட்டியக் கச்சேரி 'ஸாப்ரு ஹவுஸி'ல நடைபெற்றது. அமோகமான பாராட்டுகள் கிடைத்தன. அன்று நாட்டியக் கச்சேரியைக் கண்டு களித்த அமெரிக்க தூதர் எல்ஸ்வர்த் பங்கர் அவர்கள் வெகுவாகப் பாராட்டிப் பேசினர். தற்காப்பு மந்திரி கனம் வி.கே. கிருஷ்ணமேனன் முதலிய பிரமுகர்கள் சச்சேரியைக் கண்டுகளித்தனர். படத்திலே அமெரிக்க தூதருடன் வைஜயந்திமாலா அவர்கள்.

சித்தூர் ராணி பத்மினி

வைஜயந்தி மாலா அவர்களும் சிவாஜி கணேசன் அவர்களும் சேர்ந்து நடித்து வரும் உமா பிக்சர் ஸாரின் 'சித்தூர் ராணி பத்மினி' படம் துரித கதியில் முன்னேறி வருகிறது. இதற்காக சில காட்சிகள் உதயபூரில் எடுக்கப்பட்டன. சமீபத்தில் வைஜயந்திமாலா அவர்களின் சிறந்த நடனம் எடுக்கப்பட்டன. சிறந்த உடையலங்காரங்கள், விலைமிக்க காட்சி யமைப்புகளுடன் கூடிய இப்படம் சிறந்த கலை

விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீதர் வசனமும் சி. எச். நாராயண மூர்த்தி டைரக்ஷனும் கூடிய இப்படத்தில் பாலய்யா, நம்பியார், பாலசுப்ரமணியம் முதலியவர்களும் நடிக்கிறார்கள். இப்படம் கூடிய சீக்கிரமே திரையிடப்பட உமா செட்டியாரவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளார்.

★

நடன அரங்கேற்றம்

நாட்டியாலயாவின் மூன்றாவது மாணவியான குமாரிகல்யாணியின் நடன அரங்கேற்றம் சமீபத்திலே கிருஷ்ணகான சபா ஆதரவில் தியாகராயநகர் கான விஹாரில் நடை பெற்றது. கிருஷ்ணகான சபையினர் மேற்படி அரங்கேற்றத்திற்கு விசேஷமான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். அன்று ஏராளமான கூட்டம். விழாவன்று நாட்டியாலயா பிரின்ஸ்பால் வைஜயந்திமாலா அவர்களும், தலைவி யதுகிரி தேவியார் அவர்களும் காரியதரிசி ஸ்ரீ எம். டி. ராமன் அவர்களும் வந்து கலந்து கொண்டனர். மினர்வா டியூடோரியல் கல்லூரி தலைவர் ஸ்ரீ ஏ. என். பரசுராமன் அவர்கள் தலைமை வகித்தார்.

அலாரிப்பு அயிட்டத்துடன் நடனம் துவங்கியது. பிறகு காம்போதியில் சப்தம் ஜதிஸ்வரத்தில் போதிய திருப்தியுடன் ஆடினாள் குமாரி கல்யாணி. ஆனந்த பைரவியில் அமைந்த 'ஸகியே'வைக் குறிப்பிடவேண்டும்.

பதங்களில் தோடியிலமைந்த 'எல்லா அருமைகளும்' என்ற தோடிப் பதத்தையும் சங்கரா பரணத்திலே அமைந்த அருணா சலக் கவிராயரின் சங்கராபரணக் கிருதி யாரோ என்றெண்ணாமலே யையும் குறிப்பிடலாம்' கடைசி அயிட்டம் கேதார கௌள தில்லானா.

சபையினரை மாலா துணை ஆசி ரியர் த. ரா. ரா: வரவேற்றார் ஸ்ரீ. ஏ. என். பரசுராமன் பேசுகையில் நாட்டிய மாலாவின் சேவைபற்றிக் குறிப்பிட்டார். ஸ்ரீமதி வைஜயந்தி மாலா அவர்கள் தான் புகழ் பெறு வதோடு தனது சிஷ்யைகளை நன்கு தயாரித்து அவர்கள் முன்னேறு வதை விரும்புபவர் எனக் குறிப் பிட்டார். தலைவி யதுகிரி தேவியா ரையும் பாராட்டினார். குமாரி கல்யா ணிக்கும், சமீபத்தில் அரங்கேற்றம் ஆன குமாரி இந்திராவுக்கும் நற் சாட்சிப் பத்திரங்களை வழங்கினார், சபை உபத் தலைவர் ஸ்ரீ கிருஷ் ணப்பா நாட்டியாலயாவையும், குமாரி கல்யாணியையும் பாராட் டிப் பேசினார், ஸ்ரீமதி வைஜயந்தி மாலா அவர்கள் வந்தனோபசாரம் கூறினார்,

சிறந்த நிகழ்ச்சி

சமீபத்தில் அ. இ. ரே. சென்னை நிலையத்திலிருந்து ஒலி பரப்பப்பட் டது 'மேடைக் காட்சிகள்' என்ற நிகழ்ச்சி மிகவும் பாராட்டத்தக்க வகையிலே அமைந்தது. ஸ்ரீ சுகி சுப்ரமண்யம் அவர்கள் முன்னுரை யாகப் பேசினார். கிட்டப்பாவின் 'தசரத ராஜ குமாரா' இன்னிசைத் தட்டு துவக்கத்திற்குப் பிறகு மேடை, நாடகம் பற்றி அழகான பாணியில் அவர் பேசினார். தங்கு தடங்கற்ற வேகத்திலே கருத்துக் களை வெளியிட்டார். அவைகளை பிரசுரம் செய்தால் கூட பயனுள் ளவையாயிருக்கும்.

ஐந்து நாடகங்களிலிருந்து சில காட்சிகள் ஒலி பரப்பப்பட்டன, சரித்திர நாடகமாக 'பிந்துஸாரர்'' அமைந்தது. நல்ல கருத்தும், வசன மும் அமைந்த நாடகம். 'என்ன விநோதம் பார்' என்ற நாடகத் திலே ஒரு உபாத்தியாயரின் மனைவி தான் கணவனை குறைகூறிவந்த போதிலும் பிறர் குறை கூறச் சகியாது நிற்பதை விளக்கிற்று 'கடவுள் எங்கே' என்ற நாடகத் திலே கடவுளுக்கும் காதலுக்கும் சம் பந்தம் என்ற கருத்து வலியுறுத்தப் பட்டது. 'புஷ்பலதாவில்' விசேஷ நல்ல ஹாஸ்ய ரஸம் விளங்கியது. கடைசியாக ஒலி பரப்பப்பட்ட 'மணிமேகலை' மனோதத்துவ அம் சம் விளங்கும் நாடகமாய் அமைந் தது. இதில் நல்ல உக்திகள் கையாளப்பட்டிருந்தன. மொத் தத்தில் பலவகை பாவங்கள், ரஸங்கள் கொண்ட காட்சிகளை அளித்தது சுவைக்க வல்லதாயிருந் தது. ஒரு சீரிய முயற்சி இது போல் நவ நவமான வழிகளில் முயற்சிகள் செய்யப்படுமாக! நிகழ்ச்சியைத் தயாரித்துள்ள சுகி சுப்ரமணியம் அவர்களைப் பெரிதும் பாராட்ட வேண்டும்.

ஜி. என். பி. யின் சிறந்த கானம்

சமீபத்தில் அ. இ. ரே. சென்னை நிலையத்திலிருந்து ஜி. என். பி. அவர்கள் பாடினார்கள். வெகு நாட்களுக்குப் பின் இவரது கச்சேரியை கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஆவலோடு இருந்த ரஸிகர்களுக்கு பூர்ண திருப்தி ஏற்படும் வண்ணம் பாடினார் இவர். விநாயக சதுர்த்தி அன்று பாடிய இவர் பொருத்தமாக 'வாதாபி கணபதிம்' என்ற தீக்ஷிதர் கிருதியுடன் துவக்கினார். விறு விறுப்புடன் அமைந்தது அக்கிருதி. இக்கிருதியில் பாடிய ஸ்வர பிரஸ்தாரமும் ஜி. என். பிக்கே உரித்தான சுவாரஸ்யத்துடன் அமைந்தது. கானடா ராகத்தில் உள்ள ஸ்வாதி திருநாள் உருப்படி 'மாமவதஸதா'வை வழங்கினார். இது அவரது 'பேவரிட்' உருப்படியல்லவா. பந்துவராளி ராக ஆலாபனை நேர்த்தி. ராக பூரிதமாயமைந்தது அதில் சரணத்தில் 'மனஸுன நீகே' என்ற அடிக்குப் பாடிய ஸ்வர பிரஸ்தாரத்தைக் குறிப்பிட வேண்டும். பைரவராகத்திலே அமைந்த தியாகய்யரது ஒப்பற்ற கிருதி 'மரியாதகாதய்யா'வை வழங்கினார் அவர். இக்கிருதியைக் கேட்டே வெகு நாட்களாகிவிட்டன. தோடி ஆலாபனை மிக நேர்த்தி அதில் பாபநாசம் சிவனவர்களின் 'தாமதமேன் ஸ்வாமி' என்ற கிருதியை தனக்கே உரித்தான நயத்துடன் வழங்கினார் அவர். 'வந்தே மாதரம் அம்பிகாம்' என்ற ஸ்லோக ராகமாலிகையையும் குறிப்பிட வேண்டும்.

—த. ரா. ரா.

தர்ம சங்கடம்

ராஜு

தர்ம சங்கடம் என்ற பதம் சிறியதுதான், ஆனால் அது எவ்வளவு விரிவான பதப் பிரயோகம் பெறுகிறது தெரியுமா. அது எவ்வளவு இடங்களில் தர்ம சங்கடம் இல்லாமல் வந்து அமருகிறது.

தர்ம சங்கடமான நிலை என்பது மனிதர்களுக்கு மட்டுமல்ல, ஈஸ்வரனுக்குக்கூட இவ்வித நிலை ஏற்பட்டு அவர் சமாளித்துக் கொள்வதும் உண்டு. கிருஷ்ணனது உதவியை நாடி துரியோதனனும், அர்ச்சுனனும் போய்ச்சேர துயிலெழுந்த கண்ணன் இருவரையும் கண்டு திகைப்புற்று தர்ம சங்கடமான நிலையில் சற்று இருக்கிறார். பிறகுதான் விழித்தபோது அர்ச்சுனனே தன் கண்ணில் பட்டதைத் தெரிவித்துச் சமாளிக்கிறார்,

மனிதர்களால் இவ்வளவு எளிதாய் தர்ம சங்கடமான நிலைகள் சமாளிக்கும்படி முடிகிறதா ஒரு கூட்டம் ஒரு பிரசங்கிதான் பேச வேண்டிய பாயிண்டுகளைத் தயார் செய்து வைத்துக்கொண்டு தயாராயிருக்கிறார். ஆனால் அவருக்கு முன் பேசுபவர் அந்த 'பாயிண்டு'களில் பெரும்பாலானவற்றை எடுத்துப் பேசி விடுகிறார் இவர் என்ன செய்வார் பாவம் தர்ம சங்கடமான நிலையில் மாட்டிக் கொண்டு விடுகிறார்.

ஒரு பிரமுகர் நல்ல செல்வந்தர் ஒரு பிரபல வித்வானது சங்கீதக் கச்சேரியில் முன் வரிசையில் அமர்த்தி விடுகிறார்கள், அவர் வாங்கிய போஷகர் டிக்கெட்டிற்காக. கச்சேரியின்போது ஏதோ

தலையை ஆட்டி ரஸிப்பதுபோல் சமாளிக்கிறார் பிரமுகர் ஆனால் கச்சேரி முடிந்து பிரபல வித்வான் பிரமுகரிடம் வந்து எந்த உருப்படிகளை நன்கு ரஸித்தீர்கள் இன்றைக்கு என்னவோ இந்த ராகங்கள் இந்த இந்த உருப்படிகள் அவ்வளவாக அமையவில்லை என்று கூறுகையில் சங்கீத ஞானமற்ற பிரமுகர் தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொள்ளுகிறார்.

இளம் தம்பதிகள் கணவனிடம் அவன் தாயார் தன்னைக் கரித்துக் கொட்டுவதைப்பற்றி கூறி வருகையில் மாமியாரே வந்துவிடுகிறாள் வரிந்துகட்டிக்கொண்டுசண்டைக்கு பையன் தாயாரிடம் பற்றுள்ளவன் மனைவியையும் அதிருப்தி கொள்ள செய்ய மனமில்லை தர்ம சங்கடமான நிலையில் மாட்டிக்கொண்டு தவிக்கிறான்.

ஞாபக மறதியினால் எவ்வளவு தர்ம சங்கட நிலை வந்துவிடுகிறது. ஒருவர் காரியாலயம் செல்ல பரக்க பரக்க ஏற்பாடுகளைச் செய்கிறார். அன்று வந்த வண்ணான் உருப்படிகளை அணிந்துக்கொண்டு தன்னை வந்து துரிதப் படுத்தும் நண்பருடன் கிளம்பிவிடுகிறார். காரியாலயத்தை அடைந்ததும் ஏதோ எழுத பையில் பேனாவைத் தேடுகிறார். பேனாவையும் ஆபீஸ் சாவி யுள் பட சாவிக் கொத்தையும் பழைய சட்டையிலே வைத்துவிட்ட ஞாபகம் அப்போதுதான் வருகிறது. காரியாலய அலுவல்களில் அல்லல் அதோடு சாவிக் கொத்தில் தன் பெட்டி சாவியும் இருப்பதால் மனைவி தான் வாங் விரும்பிய பாத்திரங்களை தன் பெட்டியுள் உள்ள பணத்தை காலி செய்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் வேறு. வீட்டிற்குப் போய் வருவோமென்றால் சமயம் பார்த்தல்லவா மானேஜர் கூப்பிடுகிறார். என்ன தர்ம சங்கடம்,

அரசியல் தலைவர்கள், தேச நிர்வாகிகள் மட்டும் விலக்கா இந்த தர்ம சங்கடத்திற்கு, அவர்கள் ஒன்றை நினைத்து காரியத்தைச் செய்ய அல்லது அறிக்கைவிட அதை அவர்களே மாற்றவோ அல்லது நாசூக்காக மறுக்கவோ ஏற்படும்போது என்ன தர்ம சங்கடம். இட வசதி தர்மசங்கடம் காரணமாய் இதற்குமேல் பிரசுரிப்பது இயலாது என்று ஆசிரியர் கட்டுரையை வெட்டி விடாமல் இருக்க இத்துடன் நிறுத்திக் கொள்ளுகிறேன்.

★

Mg. Editor & Publisher: M. D. Raman Southern Avenue, Alwarpet Madras-18
Edited and Printed by S S Sarma at Sri Sudarsan Press
111/33, (Congress Bldgs) Teynampet, Mount Road, Madras 6
Associate Editor T. R Rajagopalan (Tha Ra Ra.)

வருகிறது.
உமா பிக்சர்ஸ்
சித்தூர் ராணி
பத்மினி
திரைக்கதை-வசனம்:
ஸ்ரீதர்
டைரக்ஷன்:
ஸி.எச்.நாராயணமூர்த்தி

SRI SUDARSAN PRESS MADRAS-6.